ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0	
6-மாத சந்தா ,,	— ,,	1--12	
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0	

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு கார்த்திகை-மீ 5-உ (20—11—1932) | மலர் 30.

நீங்கள் விரும்புவதென்ன?

அறிவுள்ளவர்களாகவும், மூட நம்பிக்கையற்றவர்களாயும், வாழ விரும்புகிறீர்களா?

அர்த்தமற்ற ஓர்வார்த்தையை நம்பி ஏமாந்து, காலத்தை-வீணாக்கி, செல்வத்தையழித்து சிதைந்து சோம்பேரிகளாய், வறியராய், வாழ விரும்புகிறீர்களா? இல்லையெனில் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி.எல்., எழுதிய "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நூலை இன்றே வாங்கிபாருங்கள். உண்மைதெரியும், அஞ்ஞானம் தெளியும், சந்தேகம்தீரும், கடவுளைப்பற்றிய அர்த்தமற்ற பயமும், சந்தேகமும் நீங்கும். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழி முந்தியதா, முட்டை முந்தியதா? என்ற சந்தேகங்களுக்குத் தகுந்த விடைகளுடன் 80-பக்கங்களுக்கு மேற்கொண்டது விலை 4-அணா,

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவும்.

கிடைக்குமிடம்:— மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

உங்கள்

கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமையொழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வறவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோரும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0

தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—

மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

Goshaye office pillss.

கோஷாயி ஆபீஸ் மாத்திரை

Dr. T. K. V. Chalam.

சுகானந்த சடலத்தில் தன், பகுத்தறிவை அறிந்து அரிவாகிய அருள் ஜோதியை தெரிசித்து ஆனந்தமனுபவிக்க, அல்லலற்ற சிவ ராஜயோகம் சாதித்து வருவோர்களுக்கும், முடிவுபெற்ற காரியங்களில் மனதை புகுத்தி சதா சஞ்சலம் அனுபவித்துவரும் இல்லறவாசிகளுக்கும்.(ஆனந்த அருள் நீருக்கும் அழுகை கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம்போல்) மூலாக்கினி தகித்து வருவதினுல் வாத, பித்த, அய்யமென்னும் சிலேத்துமமும், காலாக்கிரம ஆகார தவக்கத்தினுல் முரணுகி, பித்தமதிகரித்த வெட்டையும், வாய்வும், உரவாகியது முதல். மலபந்தம், மலச்சிக்கல், மலம்தீய்தல், அன்னதுவேஷம், அசதி, இடுப்புவலி, மார்நோய், சூலை, கீல்வாய்வு, தாதுநஷ்டம், முதலியவை ஜெனிப்பது மலபந்த முள்ளோர்களின் அனுபவ சித்தி.

மேல்கண்ட உபாதையுளளோர்கள் இரவு போஜனத்துக்குப்பின் ஒரு மாத்திரையை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து ஒன்றிரண்டாய் மென்று ஜலம்விட்டு கொப்பளித்து (கொப்பளித்து) சாப்பிட்டால் வாய்வுகளை கலைத்து வெளியாக்கி மலம் தாராளமாய் கழிக்கும். ஜுவரம், தைலஸ்னனம் முதலிய யாவும் வழக்கம்போல் நடத்திக்கொள்ளலாம். ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணம் பெறக்கூடிய கோஷாயி ஆபீஸ் மாத்திரை 51 கொண்ட சீசா 1-க்கு 1—10—0; 101 கொண்ட மாத்திரை சீசா 1-க்கு ரூ. 3—0—0 வி. பி. பேக்கிங் சார்ஜ் வேறு. சிலோன், சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டார்கள் ஆர்டருடன் ரூ. 1—12—0 சேர்த்து மணியார்டர் செய்யவும்.

Proprietor. T. K. வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ethiraj, Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

"குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

"ரிவோல்ட்"

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

உண்மை வைதீகமென்றால் என்ன?

(கைவல்யம்.)

உண்மை வைதீகமென்றால் என்ன? கும்பகோணத்து வைதீகம் இப்பொழுது நடைமுறையில் எங்ஙனம் அமைந்துளது? என்பவைகளை விளக்கிக் குடி அரசில் ஒரு வியாசம் எழுதும்படியாக கும்பகோணத்து நண்பர் என்னைக்கேட்டிருக்கிறார்.

அவர் வார்த்தையை மேற்கொண்டு கும்பகோணத்துப் பொது ஜனங்கள் தெரிந்துகொள்ளவும் நான் படித்ததையும், படித்தவர்களால் கேட்டுத் தெரிந்ததையும், பண்டிதர்கள் ஒப்புக்கொள்ளுவதையும் இந்த வியாசத்தில் சுருக்கி எழுதுகிறேன்.

ரிக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என வேதம் நான்கு. ஒவ்வொரு வேதத்திலும் ஸம்ஹிதை அல்லது மந்திரங்கள், பிராமணங்கள், உபநிஷத்துக்கள்என்னும்உட்பிரிவுகளும்வேதப்பொருள்களை விளக்கவந்த சாஸ்திரங்கள், என்கின்ற சிக்ஷைஅல்லதுசப்த சாஸ்திரம், வியாகரணமல்லது இலக்கணம், சந்தஸ் அல்லது யாப்பியல், நிருத்தமல்லது சொல்லியல், ஜ்யோதிஷம் அல்லது வான சாஸ்திரம், கலம்பகம் அல்லது மந்திரங்களை உபயோகிக்கும் வழியைச் சொல்லும் சாஸ்திரங்கள் ஆறும், வேதரகசியத்தைவெளியிடவந்த,புராணங்கள்,நியாயம், மீமாம்ஸம், தர்மசாஸ்திரம் என நான்கும் ஆகவே வேதாங்கங்கள்ஆறு, சகாயசாஸ்திரம் நான்கும், ஆகப்பதினான்கும் வேத சம்மதமுடையதென்பார்கள். அந்த வேத சம்மதமுடையதே வைதீகம்.

அந்தப் பதினான்கு சாஸ்திரங்களையும் பிராமணன் படித்து உணர்ந்து, உணர்ந்தபின் அதன் வழியே நின்று உண்மைப் பொருளைத் தெரிந்து உலக சுகபோகங்களை அனித்தியமென நினைத்து மோக்ஷ மார்க்கத்தில் பிரவேசிக்கிறவனுக்கு வைதீகன் என்று பெயர்.

எவனொருவன் அனித்தியமான உலக வாழ்க்கையில் அழுந்தாமலும் தனது ஆத்மாவின் விருத்தியை மறவாமலும் இருக்கிறானோ அவனே உண்மை வைதீகன்.

ஆத்மவிர்த்தி என்றால் ஆசையை அடக்கி மனதை ஒருவழிப்படுத்தி மோக்ஷ வழிக்கு செய்யவேண்டியகர்மங்களைச்செய்வதே உண்மை வைதீகமாகும்.

தன்னயத்தை ஒழித்து, ஞானமும் அன்பும் பெற்று, அவற்றைப்பிறருக்கும் அளிக்க உழைப்பதுவே உண்மை வைதீகம்.

வேதங்களும் அதன் அங்கங்களும் உபாத்தியாயரிடம் படித்து பிரமச்சரிய விரதத்தை அனுஷ்டித்து படித்ததை ஆச்சாரியிடம் பாடம் கேட்டு அதில் சொல்லப்பட்ட சிலகர்மங்களைச் செய்வதற்கு கிரகாஸ்சிரமத்தை அடைந்து, சத்கருமங்களைச் செய்து, நீதிகளைத்தெரிந்து அதன் வழி நின்று, அதற்குப்பின் வானப்பிரகாஸ்சிரமத்தை ஏற்று காட்டில் பாரமார்த்திகத்திற்கு வேண்டிய கிரிகைகளைச்செய்து தேகப்பற்றையும் விட தயாராயிருப்பதுவே உண்மை வைதீகம். இன்னெறியில் நிற்பவர்கள் வைதீகர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

வேதசம்பந்தமுடைய பதினான்கு சாஸ்திரங்களையும் படிக்காமல், ஆங்கிலேய பாடசாலையிலும் உத்தியோகப்பயிற்சி சாலையிலும் பிர்மச்சரிய ஆசிரமத்தை முடித்து, உத்தியோகமும் வக்கில் தொழிலுமடைந்து, பொய்யும், புரட்டும், வஞ்சமும் சம்பாதித்து, கிரகாஸ்சிரமத்தை முடித்து வானப்பிரகாஸ்சிரமத்தை அடையவேண்டிய காலம் வந்தாலும் வக்கில் வேலையை விடாமல் வட்டிக்குவரவுவைக்காத பத்திரத்திற்கு வாதாடி, சன்னியாசம் வாங்கும் வயது வந்தும், வியாதியென்று அரிசிக்குக் கோதுமையும், கத்திரிக்காயிக்குக் கோழிமுட்டையும், தண்ணிக்கு மாட்டெலும்புச்சூப்பும்உபயோகித்து, செத்தபின் பிணத்திற்கு ஒரு காஷாயம் போத்தி சந்நியாசக் கிரிகைகளைச்செய்து வைக்கப்படும் பிணங்களை மேற்சொன்ன வேதசம்பந்தமுடைய பதினான்கு சாஸ்திரங்களும் வைதீகர்களென்று ஒத்துக்கொள்ளாது. துவிஜன் என்று சொல்லப்படுகிற பிராமணன் வேதசாஸ்திரங்கள் படிக்காமல் அன்னிய சாகைகளைப்படிக்கிறானோ அவன் பிரஷ்டனாவதுமன்னியில், சண்டாளர்க்குள் சண்டாளனாவான் என்று ஸ்மிருதிகள் சொல்லுகின்றன.

முன்சொல்லப்பட்ட வேதங்கள் பொதுவாக கர்மகாண்டம் ஞானகாண்டம் என இருவகைப்படும். யாகாதிகளால் சுவர்க்கமுண்டாகுமென்று கூறுவது கர்மகாண்டம். பிரபஞ்சத்தில் எவ்வித சுகமானாலும் எவ்வளவுகாலமிருந்தாலும் நிலையற்றதாயும் மாறுந்தன்மையுடையதாயும் இருக்கிறது. அதுபோலவே சுவர்க்கமும் உளது; ஆதலால்கர்மகாண்டத்தின் முடிவு மிகச்சிறந்ததல்ல என்றாலும் கர்மகாண்டத்தில் ஒருவன் ஒழுங்கு தவறாது பழகி வருவானாகில் அவனுக்கு சித்த சுத்தியுண்டாய் ஞானகாண்டத்தை அறியத்தக்க அதிகாரியாவான் என்று சொல்லப்படுகிறது.

கர்மகாண்டமும் வேதத்தின் ஒரு பாகமானதால் அந்த கர்மங்களுக்கும் வைதீக கர்மங்களென்றே சொல்லப்படும். கர்மமென்ற பதத்திற்கு செய்கை என்று பெயர். கர்மகாண்டத்தில் வைதீக கர்மமென்றால் வேதத்தில் சித்த சுத்திக்காக ஏற்பட்டிருக்கும் யாகங்களையே முக்கியமாகக்குறிக்கும். வைதீக கர்மமான யாகங்களை ஒவ்வொரு துவிஜனும் செய்தே தீரவேண்டுமென்று வேதம் சொல்லுகிறது. அதுவுமல்லாமல் பிராமணன் என்று சொல்லப்பட்ட ஒவ்வொரு துவிஜனும்சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்யவேண்டும். இல்லையேல் துவிஜனுக்குத்துவிஜத்வம் தக்காது. அக்கர்மங்களையெல்லாம் இங்கு விவரித்தெழுத இடமில்லை. அந்த கர்மங்களையெல்லாம் இப்பொழுது பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் செய்வதில்லை. ஏனெனில் அவர்களுடைய வாழ்க்கையே மாறிவிட்டது, போகத்திலே இச்சைசென்றுவிட்டது, போக இச்சையும் இந்தக் காலத்து நாகரீகவாழ்க்கையும் முன்சொன்ன வேதசம்மதமுடைய வைதீகத்திற்கு ஒத்து வராது. நித்தியகர்மம் என்பவைகளில் அவசியமாய் செய்தே தீரவேண்டிய ஸந்தியாவந்தனம் இன்னதென்று தெரிந்தவர்கள் சொற்பம். அதை சரியாக அப்பியசிக்கிறவர்கள் அதிலும் சொற்பம், அதை கிரமமாகப் பிராணாயாமத்தோடு அப்பியாசிக்கிறவர்கள் இல்லவே இல்லை. ஜீவாத்மாவும் பரமாத்மாவும், மனமும் அறிவும் பக்தியும் அருளும் சந்திக்குமிடம் சந்தியென்று ஞானிகளும், யோகிகளும், பக்தர்களும் சொல்லுகிறார்கள். பகலும் இரவும் சந்திக்கும் சமயமே சந்தியாவந்தனம் செய்யும் காலம். உத்தியோக அலுப்பிலும் படிப்பின் சோர்வாலும் காலை சந்தி தூக்கமாகமுடிகிறது. பந்து விளையாட்டும், நேரம்போக்கும், கிளப்பும் மீட்டிங் பிரசங்கமும் மாலைச்சந்தியை முடித்து விடுகிறது.

எப்படி கர்மகாண்டமிருந்தாலும் ஞானகாண்டத்தையே பரவித்தையென்பார்கள். ஞானகாண்டமாகிய உத்தமபாகத்தில்தான் வேததத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. அதை வைத்துக் கொண்டுதான் இந்துமதத்தைப் பெருமைப்படுத்துவது.

இந்த வேதசம்மதமுடைய வைதீகம் பிராமணனுக்கே உரியது. க்ஷத்திரியன் வைசியன் இவர்களுக்கு வேதத்தில் உரிமையிருந்தாலும் க்ஷத்திரியன் வைசியன் கலியுகத்தில் இல்லை என்று பார்ப்பார்களே சொல்லுகிறார்கள், சூத்திரர்களுக்கோ வைதீகத்தில் உரிமையே இல்லை. வைதீகமென்று சொன்னாலே முன்நாக்கையறுப்பதே சட்டம். இந்த காலத்தில்நாக்கையறுக்காவிட்டாலும்பார்ப்பார்கள்சூத்திரர்கள் வைதீகமென்றால் ஒத்துக்கொள்ளுவதில்லை. ஆனால் இப்பொழுது நடைபெறும் வைதீகக் கூட்டமென்றுசொல்லும் கூட்டத்தில் செட்டியார்கள் இருக்கிறார்களே என்றால் அவர்களைப்பார்ப்பார்கள் தெக்ஷணை பெற்றுக்கொள்ளும் பொழுது மட்டுமே வைசியர்கள் என்பார்கள், அதற்குபின் ஒத்துக்கொள்ளுவதில்லை இப்படியே பலகாலமாக இன்னும் நடந்துவருகிறது. கூட்டத்தில் வைசிய வைதீகர்களென்று தங்களைக்காட்டிக் கொள்ளப் போகிறார்கள். விபரமில்லாத பணக்காரரின் செல்வாக்கை பலகாலமாக உபயோகப்படுத்தியே கொடுமையான வைதீகத்தை பார்ப்பார்கள் நிலைநிறுத்தினார்கள். அது போல இப்பொழுது செட்டியார்களை உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். ராய்பகதூரையும், முனிசிபல் சேர்மனையும் எந்த வேத சம்மதமுடைய வைதீகமும் ஒத்துக்கொள்ளுவதில்லை.

புத்தி எல்லாருக்குமிருக்கிறது. விசாரித்தறிவது புத்தி எனப்படும். அறிந்ததை அனுஷ்டிப்பது அறிவு அந்த அறிவில் தன்மை அமைகிறது. அந்தத்தன்மையில் நீதிசெல்லும் அந்த நீதியைத்தான் சத்தியமென்பது அந்த சத்தியத்தில் தான்கடவுள் விளங்குகிறார். அந்த கடவுளுக்குப் பெண்ஜாதி பிள்ளையில்லை, அண்ணனில்லை, தம்பியில்லை, உற்றார் உறவினரில்லை, ஜாதியில்லை, வர்ணமில்லை எல்லாஜீவரிடத்தும் ஏகபோகமாயிருக்கிறார். புத்தி, அறிவு, தன்மை, நீதி, சத்தியம் முதலியவைகள் எல்லாரிடத்திலும் எப்படிக்காணப்படுகிறதோ அப்படியே எல்லாவற்றிற்கும் காரண பூதமாய் விளங்கும் அப்பெரும் சக்திக்குக் கடவுளென்றும் பெயரிட்டு எல்லா மதங்களும் அழைக்கின்றன. அம்மதங்களின் உண்மைக்கு மண்டியிட்டு மாறேந்தி நிற்பவர்களே வைதீகர்கள்.

ஆசையை அடக்கினாலன்றி மோக்ஷமில்லையென்றும், பிரகிருதி பந்தத்துக்குட்பட்டிருக்கும் வரையிலும் எவனுக்கும் முக்தியில்லை என்றும் நீங்களெல்லாம் கேட்டிருக்கிறீர்கள். அப்படியிருக்க புராணக்கதைகளைத் தெரிந்து சில சுலோகங்களுக்கு அர்த்தம் சொல்லி பன்னண்டாருமடியுடுத்தி, பட்டைபோட்டு வெங்காயச் சாம்பாரும் காப்பியும் கொடுத்துப் பொதுத் தன்மையில்லாத புராண சாஸ்திரங்களை விகசித்துக் கொண்டிருப்பது வைதீகமாகுமா?

நூற்றுக்கணக்கான வருஷங்களாக வைதீகக் கொடுமையாலும் நிஷ்டூரத்தினாலும் பலமாய்ப்பீடிக்கப்பட்டு வைதீகர்கள் என்று சொல்லப்பட்டவர்களின் காலின் கீழ் மிதிபட்டு கீழே விழுந்துகிடக்கும் லட்சக்கணக்கான ஜனங்கள் கல்வியறிவில்லாமலும், வியாதியாலும், பசியாலும் துன்பப் படுவதைப் பார்த்தும் இன்னும் அவர்களை மிதிப்பதற்கே சாஸ்திரத்தைப் பிரமாணங்காட்டக் கொண்டுவரும் இவர்களை சாஸ்திரம் தான் வைதீகர்களென்று சொல்லு

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

கொழும்பு

"இராமா நுஜப்புதூர் ஸ்ரீ சரஸ்வதி சங்கீத வாலிபர் கழகம்"

தோழர் இராமசாமிக்கு வரவேற்பு.

1932-ம் ஹு நவம்பர் மீ 6-ந் வ ஞாயிற்றுக் கிழமையன்று இரவு 9 30 மணிக்கு கொழும்பு. (The New colombo Ice Co) நியு கொழும்பு ஐஸ் கம்பெனிக்கரு மையிலமைந்துள்ள, எல். எம். எஸ். பாடசாலையின்கண் மேற்குறித்த கழகத்தின்சார்பாக, தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கட்கு வரவேற்புக் கூட்ட மொன்று இலங்கை "சுயமரியாதை சங்கத்தலைவர் தோழர். எம். ஆறுமுகம் அவர்கள் அவைத் தலைமையின் கீழ் அதிவிமரிசையாக நடைபெற்றது.

அன்று எதிர் பாராவிதமாக விடா மழையாயிருந்தும், சுயமரியாதை வாலிப தோழர்களும், சமூகத்தொண்டர்களும், அபிமானிகளும திரளாக விஜயம் செய்திருந்தமைக்குறிப்பிடத்தக்கனவாம். அவர்களுள், தோழர் ஈ. வெ இராமசாமி, தோழர் எம். ஆறுமுகம், சுயமரியாதைச்சிங்கம் மாயவரம் சி. நடராஜன், தோழர் அ. இராகவன், தோழர் சி. கே. குஞ்சிராமன் பி. ஏ., தோழர்கள், டி. சாரநாதன், எ. கே. பெருமான்தாஸ், எம். அருமை நாயகம், எஸ். எஸ். பெரியசாமி மற்றும்பல முக்கிய மானவர்களுமாகும். கூட்டஆரம்பத்திற்குமுன் சுயமரியாதைவாலிபத்தோழர்களால், தேனினுமினிய செந்தமிழ் மொழிகளால் சமதர்ம கீதங்கள்பாடி சபையை மகிழ்விக்கச்செய்தது போற்றுதற்குரியதாகும்.

பின்னர் கனம் காரியதரிசிச்சர் அவர்களால். தோழர் எம். ஆறுமுகம் அவர்களைத் தலைமைவகிக்குமாறு பிரரேபிக்க நீண்டகரகோஷங்களுக்கிடையில் தலைவர் தமதாசனத்தமர்ந்து தலைவர் முன்னுரையாக தம்மை இம்மாபெரும் வரவேற்புக் கூட்டத்திற்குத் தலைமைவகிக்க கேட்டுக்கொண்ட வாலிபகழகத்தாருக்கும், ஏனையோர்களுக்கும் நன்றிகூறி, தோழர் ஈ. வெ. இராமசாமியின் சேவையை சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்தியம்பி தோழர் இராமசாமி அவர்களை சபைக்கறிமுகப்படுத்தி வைக்க, தோழர் இராமசாமி அவர்கட்கு தயாரித்து வைத்திருந்த அழகிய வரவேற்றுப்பத்திரத்தைத்தோழர் ஏ. கே. பெருமாள்தாஸ் அவர்களால் வாசித்து அவ்வழகிய பத்திரத்தை இராமசாமி அவர்களின்திருக்கரத்தில் கொடுத்து நறுமணங்கமழ் மலர் மாலையொன்று ஏக கரகோஷங்களுக்கிடையில் சூட்டப்பட்டது.

பின்பு தோழர் அ. இராகவன அவர்களால், சுயமரியாதை என்றால் என்ன? என்பதை பீடிகையாகக் கொண்டு அரியதோர் சொற்பெருக்காற்றியது வைதீகர் மனதையும் மகிழச்செய்து விட்டது. அடுத்தபடியாகத்தோழர் டி.சாரநாதன் அவர்கள் "தற்கால நிலைமை" என்பதுபற்றி மிகத்தெளிவாகப்பேசியமர்ந்தனர்.

பின்பு, தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் பெருங்கரகோஷங்களுக்கிடையில் எழுந்து பேசினர்.

பெண்கள் உரிமை

தோழர் இந்திராணிபாலசுப்பிரமணியம் சொற்பொழிவு.

சென்ற 9-11-32 தேதி மாண்டலே (பர்மா) ஆரிய சமாஜ் மந்திரத்தில், வக்கீல் திரு. பி. சி. ஷண்முகம்பிள்ளை தலைமையில் ஒருபொதுக்கூட்டம்கூட்டப்பட்டது. அது சமயம் தோழர் இந்திராணி பால சுப்ரமணியம்" சுயமரியாதையும், பெண்மக்கள் உரிமையும்" என்பதுபற்றி நீண்டதோர் சொற்பொழி வாற்றினர். பிரபலஸ்தர்களும், பெண்மக்களும்விஜயம் செய்திருந்தனர்.

உபன்யாசகர் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கியும், தற்கால பெண்மக்கள் இருந்துவரும் கேவலநிலைமையையும்விளக்கிப்பெண்மக்கள் தங்கள் உரிமைக்காகப் போராட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியும், சுயமரியாதை இயக்கம் பகுத்தறிவு இயக்கமென்பதையும், லட்சக்கணக்கான மக்கள் அதன்கொள்கைகளைப்பின்பற்றுகிறார்கள் என்றும் தெளிவுபட விளக்கினர். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிந்தது.

இன்னும் தொடர்ச்சியாக பர்மாவில் பலவிடங்களில் சுயமரியாதைப்பிரசாரம் செய்துவிட்டு 18-ந்தேதி சென்னை வருகிறார்.

[ஒரு நிருபர்.]

யாழ்பாணத்தில்

சுயமரியாதைப்பிரசாரம்

யாழ்ப்பாணத்திற்கருகிலிருக்கும் சுற்றுப்பக்கங்களுக்கு தோழர்களான எஸ். வி. சதாசிவம், சி. குணரத்தினம், சி. வைத்திலிங்கம், இ சொ. ராசசேகரம் முதலியவர்கள் சுயமரியாதைப்பிரசாரம் செய்து வருகிறார்கள்.

(ஒரு நிருபர்)

திருச்செங்கோடு

வாலிப சகவாச சங்கம்.

13-11 32 தேதி ஞாயிறன்று மாலை சுமார் 4.30 மணிக்கு வாலிப சகவாசசங்கக்கட்டிடத்தில்தோழர் என். சுப்பராயன் அவர்கள் தலைமையின் கீழ் வாரந்திரக்கூட்டம்ஒன்று கூடப்பட்டது. தோழர்கள் எஸ். கே. வரதராஜலு, டி. ஆர். சங்கரலிங்கம் முதலாயினோர் ஆலயப்பிரவேசமும், தீண்டாமையும்" என்னும்பொருள் பற்றி அரியதோர் சொற்பொழி வாற்றினர்கள். பின்கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

தீர்மனம்.

சுயமரியாதை இயக்கத் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் சென்ற பதினொருமாதகலாமாக மேல் நாடுகள்சென்று சுற்றுப் பிரயாணம் செய்து சுகமுடனே 11-11-32ல் தன் சொந்த வாசஸ்தலமாகிய ஈரோடு நகருக்கு திரும்பி வந்தமைகண்டு இக்கூட்டம் மிகவும் சந்தோஷப்படுகிறது.

ஒரு நிருபர்

சூலூர் சுயமரியாதை

இளைஞர் சங்கம்.

13-11-32 ந்தேதி மாலை டி சங்கத்தின் கூட்டம் தோழர் எஸ். எள். திருமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் பல அறிய விஷயங்களைப் பற்றி பேசிய பின் சில தீர்மானங்கள் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

ஹிமகிரி தைலம்.

ஸ்நானத்திற்கு ஏற்றது.

உடம்பையும், கண்களையும், மூளையையும் ஆச்சரியப்படத்தக் கவிதமாய் குளிர்ச்சி செய்கிறது. சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. தலைவலிக்கு சிறந்த மருந்து அபிப்பிராயம்:- ஆர். எஸ், முட்டண்ணு பி. இ. எலக்டிரிக்பவர் ஹவுஸ் உதகமண்டலம். கடந்த ஆறுமாத காலமாக தங்கள் தைலத்தை நான் உபயோகிக்கிறேன் எல்லாத்தைலங்களைவிட தங்கள் தைலம் சிறந்து விளங்குவதோடு குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் தரத்தக்கதாயிருக்கிறது. உள்நாட்டு மூலிகைகளைக் கொண்டு செய்யப்பட்ட விலை சகாயமான தைலம் இதுவே. நல்ல பலந்தரக் கூடியதாயிருக்கிறது. பொது ஜனங்களுக்கு இதை சிபார்சு செய்கிறேன்.

விலை 1—0—0, 0—8—0.

ரத்னமிஸ்ரி

ஹல்வா.

மூளையையும்,உடலையும், பலப்படுத்துவது.

பலவீனம், ஜீரணக்குறைவு, சோம்பல், இந்திரிய ஸ்கலிதம் முதலியவற்றை நீக்கவல்லது. தாதுவிர்த்திக்கேற்றது. விலை 2—8—0, 1—4—0.

நற்சாட்சி பத்திரங்களும், தங்கமெடல்களும் பரிசுபெற்றது.

கிடைக்குமிடம்:—

எம். பெருமாள் நாயுடு,
மணிகை ஈரோடு,

மெடிகல் எம்போரியம், ஈரோடு.

சோல் ஏஜண்ட்,
அனந்தகிருஷ்ண பிளவர் மில்ஸ்,
பெங்களூர்சிட்டி.

ஈ. வெ. இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

ஐரோப்பா, ஆப்பிரிக்கா தேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு இலங்கைக்குச் சென்றமாதம் 17-ம்தேதி திரும்பி வந்த தோழர் ஈ. வெ. இராமசாமிக்கு இலங்கையில் பல இடங்களில் அதாவது கொழும்பு, கண்டி, நாவல்பட்டிய, ஹட்டன் யாழ்பாணம் ட்ருத்தித்துரை தூத்துக்குடி, மதுரை முதலாகிய இடங்களில் பலஸ்தாபனங்களின் பேரால் அளித்த சுமார் 20 வரவேற்புப் பத்திரங்களிலும், பொதுக்கூட்டங்களிலும் செய்துள்ள உபந்யாசங்களைத்திரட்டி எழுதப்பட்டது.

அன்புள்ள தலைவரே! வீரமும், எழுச்சியும் சுயமரியாதை உணர்ச்சியும், உள்ள வாலிபர்களே!!

தலைவரின் முன்னுரையிலும், உபசாரப்பத்திரங்களிலும், மற்றும் பேசியவர்களும் அளவுக்குமீறி என்னைப் பற்றியும், எனது சிறு தொண்டைப் பற்றியும்புகழ்ந்துகூறிஇருக்கிறீர்கள். அப்படிப்பட்ட புகழ்ச்சிகளுக்கு நான் சிறிதும் தகுதியுடையேன் அல்லன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடுகூடவே இதன் மூலம் நீங்கள் எனது கொள்கைகளையும், தொண்டையும் ஆதரிக்கிறீர்கள் என்பதை உணர்ந்து மகிழ்ச்சியடைகிறேன்.

மனிதசமூகம்.

தோழர்களே! எனது அபிப்பிராயத்திற்கும், முயற்சிக்கும், குறிப்பிடத்தகுந்த அளவு எதிர்ப்பு இருக்கின்றது என்பதை நான் அறியாமலோ, அல்லது அறிந்தும் அவைகளை மறைக்க முயலவோ இல்லை. யார் எவ்வளவு எதிர்த்தபோதிலும், யார் எவ்வளவுக்கு தூஷித்து விஷமப்பிரசாரம் செய்தபோதிலும், யார் எவ்வளவு எனது அபிப்பிராயம் வெளியில் பரவாமல் இருக்கும்படியும் சூழ்ச்சிகள் செய்து மக்களின் கவனத்தை வேறுபக்கம் திருப்பிய போதிலும், உலகத்தில் எல்லா பக்கத்திலும் வேதபுராண சரித்திர காலம் முதல் இன்றைய வரையிலும் மனித சமூகமானது கடவுள், ஜாதி, மதம், தேசம் என்னும் பேர்களால் பிரிவுபட்டு உயர்ந்தவன்—தாழ்ந்தவன், ஏழை—பணக்காரன், முதலாளி—தொழிலாளி, அரசன்—பிரஜைகள், அதிகாரி—குடிஜனங்கள், குரு—சிஷ்யன், என்பனவாகிய பல தன்மையில் வகுப்பு வித்தியாசங்களுக்காளாகி மேல் கீழ்த்தரத்தோடு கட்டுப்பாடான சமுதாயக்கொடுமைகளாலும், அரசாங்கச்சட்டங்களாலும், கொடுமைக்குள்ளாகி வந்திருக்கின்றது-வருகின்றதுஎன்பதை மாத்திரம் யாராலும் மறுக்கவும், மறைக்கவும் முடியாது என்று உறுதியாய்ச்சொல்லுவேன். இவ்வகுப்பு பேதங்களால் மக்கள் படும் துன்பத்தையும், அனுபவிக்கும் இழிவையும் அல்லும் பகலும் காடுகளிலும், மேடுகளிலும், தொழிற்சாலைகளிலும், கஷ்டமான வேலைகளைச்செய்தும், வயிறார கஞ்சி இல்லாமலும், குடியிருக்க மழைக்கும், வெய்யிலுக்கும் மறைவுக்கும் நிழலும், இல்லாமலும் எத்தனை பேர் அவதிப்படுகின்றார்கள் என்பதை சிந்தித்துப்பாருங்கள். அவர்களது நிலைமையை உங்கள் மனதில் உருவகப்படுத்தி பாருங்கள். இந்தக்கொடுமைகள் எத்தனைகாலமாக இருந்து வருகின்றன? இன்ரு? நேற்ரு? இது அன்னிய அரசு ஆட்சியாலா? குடி ஆட்சி இல்லாததாலா? தர்மதேவதை ஆட்சி, அவதார ஆட்சி, தெய்வாம்ச ஆட்சி இல்லாததாலா? என்பதையும் சிந்தித்துப்பாருங்கள். உலக சரித்திரம் கிடைத்தது முதல் உலகத்தில் எந்தப்பாகத்தில் எந்த ஆட்சியால் என்றையதினம் இந்தக்கொடுமைகள் இல்லாதிருந்தது என்பதைச் சற்று நினைவுக்குக்கொண்டுவந்து பாருங்கள்.

காரணம்.

தோழர்களே! இனி இதற்கு அடிப்படையாகவும், ஆரணுகவும் இருந்து வரும்காரணங்கள் எவைஎன்பதை நீங்கள்சற்று நடுநிலைமையில் இருந்து சிந்தித்துப்பார்த்தீர்களாணுல்இக்கொடுமைகளுக்கு முக்கிய காரணம் முற்கூறிய கடவுள், மதம், ஜாதீயம், தேசீயம் என்பவையாகிய மயக்க உணர்வை மக்களுக்கு ஏற்றி அதன் பயனுக பெரும்பான்மையான மனித சமூகத்தை மடமையாக்கி எய்த்து, அடிமைப்படுத்தி தங்கள் சுயநலமே பிரதானமெனக்கருதி சோம்பேரிகளாய் இருந்துகொண்டு சுகம் அனுபவித்து வரும் ஒரு சிறு கூட்டமக்களின் சூழ்ச்சியே ஒழிய வேறில்லை என்பதை தெள்ளத்தெளிய உணர்வீர்கள்.

இந்த சூழ்ச்சிகளை யாராவது வெளிப்படுத்தக்கிளம்பி விட்டாலோ உடனே அப்படிப்பட்ட காரியத்தை நாஸ்திகம் என்றும், மதத்துரோகம் என்றும், தேசத்துரோகமென்றும், தேசியத்துக்கு விரோதமென்றும், சிலர் சொல்லி அடக்கிவிடப்பார்க்கிறார்கள். இப்படிச்சொல்லி அடக்குகின்றவர்கள் யார் என்று பார்த்தாலோ அவர்கள் பெரிதும் மேல் நிலையில் இருந்துகொண்டும், சரீரத்தினுல் சிறிதும் பாடுபடாமல் சோம பேரி வாழ்க்கையில் இருந்துகொண்டும் அன்னியன் உழைப்பில் சுகமனுபவிக்கும் ஒரு சிறு கூட்டத்தாரும் மற்றும் அவர்களால் தங்கள் நிலைமையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக என்று ஏற்படுத்தப்பட்டு இருக்கும் அவர்களது கூலிப் பிரசாரகர்களுமேயாவார்கள். அதோடு "ஈன ஜாதி"யாராயும்,ஏழைகளாயும் தொழிலாளர்களாயும் கூலிகளாயும் கருதப்பட்டும் கீழ் நிலையில் இருந்து வெகுகாலமாய் தலைமுறை, தலைமுறையாக இழிவு படுத்தப்பட்டும் அரைப்பட்டினி கிடந்து உழலும் மக்களிலும் சிலர் அவர்களுடன் சேர்ந்து கொண்டு மேல்கண்டபடி கூப்பாடு போடுவதையும்பார்க்கலாம். இதற்குச் சமாதானம் சொல்லுவதென்பது சிலருக்கு சற்று கஷ்டமானதாகக் காணப்பட்டாலும் கூர்ந்து கவனித்தால் மேற்கண்ட உயர் நிலையை நிரந்தரமாய்க் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்கின்ற கருத்தின் மீது செய்து கொண்டிருக்கும் ஏற்பாடுகளான கடவுள், மதம், தேசீயம் தேசம் ஆகியவற்றின் ஸ்தாபனங்களும், அவற்றிற்குள்ள கவசமும், காப்பும் அவை சம்மந்தமான பிரசாரங்களுமே தான் காரணம் என்பது தெளிவாய் விளங்காமல் போகாது.

என்ன செய்ய வேண்டும்?

ஆகையால் மேற்கண்ட கஷ்டப்படும் மக்களுக்கு விடுதலையும் சமத்துவமும் வேண்டுமானுல் முதலில் அக்கவசங்களையும், காப்புகளையும் உடைத்தெறியவேண்டும். அவற்றின் பிரசாரங்களையும் முறியடித்துத் துரத்தவேண்டும். அதில்லாமல் வேறு எவ்வளவு பாடுபட்டபோதிலும் கஷ்டப்படும் மக்கள் ஒரு நாளும் விடுதலை அடைய முடியாது. இக்காரியம் செய்வது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. செய்பவர்களுக்கு மகத்தான உறுதியும், தன்னலமறுப்பும் வேண்டும். அனேக துன்பங்களுக்கும், தொல்லைகளுக்கும், பழிப்புகளுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாகத் தயாராயிருக்கவேண்டும். "ஊரார் நம்மைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள்--சொல்லுவார்கள்" என்பதைப்பற்றிச் சிறிதும் சிந்திக்கக்கூடாது. போலி மானுபிமானங்களையும், கௌரவங்களையும், வசவுகளையும் துச்சமாய் கருதவேண்டும். பாமர மக்களால், சுயநல சூட்சிக்காரர்களால் வசவு கேட்கவும்,உயிர்விடவும் கூட தயாராயும் இருக்கவேண்டும். இந்த நிலையில் உள்ளவர்களால் அல்லாமல் வேறு யாராலும் இக்காரியங்கள் ஒரு சிறிதும் செய்ய முடியாது என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

தானாக ஏற்பட்டதல்ல.

தோழர்களே! கடவுள், மதம், ஜாதியம், தேசியம், தேசாபிமானம் என்பனவைகள் எல்லாம் மக்களுக்கு இயற்கையாக தானுக ஏற்பட்ட உணர்ச்சிகள் அல்ல. சகல துறைகளிலும் மேல்படியிலுள்ளவர்கள் தங்கள் நிலை நிரந்தரமாயிருக்க ஏற்படுத்திக்கொண்டிருக்கும் கட்டுப்பாடான ஸ்தாபனங்களின் மூலம் பாமர மக்களுக்குள் புகுத்தப்பட்ட உணர்ச்சிகளேயாகும். இந்தப்படி புகுத்தப்படவேண்டிய அவசியமும், காரணமும் என்னவென்று பார்த்தால் அவை முற்றும் பொருளாதார உள் எண்ணத்தையும், அன்னியர் உழைப்பாலேயே வாழவேண்டும் என்கின்ற உள் எண்ணத்தையும் கொண்ட பேராசையும், சோம்பேரி வாழ்க்கைப்பிரியமுமேயாகும்.

ஆதியில்.

ஆதியில் மனிதர்கள் காடுகளில் தனிமையாய்—சுயேச்சையாய் திரிந்த—இயற்கை வாழ்க்கையிலிருந்து சமூகக் கூட்டு வாழ்க்கைக்கு வரும் போது அவனவன் தன் தனக்கு வேண்டிய சகல காரியங்களையும் தானே செய்து கொண்டும், அவசியமான பரஸ்பர உதவிகளை வழங்கிக் கொண்டும் ஒரேசமூகமாய் சமத்துவமாய் வாழலாம்என்று எண்ணியே ஒழிய மற்றபடி மற்ருெருவனை அடிமைப்படுத்தி அவனிடம் தனக்கு வேண்டிய எல்லா வேலையையும் வாங்கிக் கொண்டு எய்த்து அவனை உலக சுகபோகங்களில் பட்டினிபோட்டுதான் மாத்திரம் சோம்பேரியாய் இருந்து வாழ்ந்து கொண்டு எல்லா சுகபோகங்களையும் தானே அனுபவித்துக்கொண்டு இருப்பதற்கோ அல்லது மற்றவனுக்கு அடிமையாய் இருந்து கஷ்டப்பட்டு உழைத்து அவ்வுழைப்பின் பெரும்பயனை மற்றவன் அனுபவிக்க விட்டு விட்டு தான் பட்டினிகிடப்பதற்கோ அல்ல என்பது நேர்மையுள்ள மனிதர் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயமாகும்.

ஆனுல் நாள் ஏறஏற மக்களுக்குள் சிலருக்கு பேராசையும், பொருமையும் சோம்பேரித்தனமும் வலுக்க வலுக்க அவற்றிலிருந்து செல்வவானும் அரசனுக்கு குருவும் ஏற்பட்டு பிறகு அவற்றைநிலைநிறுத்த ஆத்மா, கடவுள், வேதம், ரிஷிகள், மகாத்மாக்கள், ஆகியவைகளைக்கற்பித்து பிறகு அவைகள் மூலம் கடவுள் செயல், முன்ஜென்மம் பின்ஜென்மம் கர்மம், பாவம், புண்ணியம் மேல் உலகம், கீழ் உலகம், தீர்ப்புநாள், மோக்ஷம், நரகம் ஆகியவைகளும் கற்பிக்க வேண்டியதாய் விட்டது.

இந்த கற்பனைகளின் பயன்தான் பெரும்பான்மையான மக்கள் பாமரர்களாகவும் ஏமாற்றப்படவும், கொடுமைக்குள்ளாகவும் மற்றவர்களுக்கு

ஈ. வெ. இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

அடிமையாயி உழைக்கவும் உழைத்தும், சரியான கூலி கிடைக்காமல் பட்டினி கிடந்துழல்வதை பொருமையுடன் பொறுத்துக்கொள்ளவுமான காரியங்கள் நடந்து வருவதுடன் அவை என்றும், என்றும் நிலைத்தும் நிற்கின்றன. எப்படியாயினும் இந்த நிலை அடியோடு அழியவேண்டும், அதற்காக அதன் காப்புகளான மேற்குறிப்பிட்ட கடவுள், மதம், தேசியம், ஜாதியம் என்பவைகளும் அகத்தின் பேறுகளான ஆத்மா, முன்ஜென்மம், கர்மம், தீர்ப்பு, மோக்ஷநரகம், பாவ புண்ணியம், ஆகியவைகளாகிய போலி உணர்ச்சிகளும் அவத்தின் ஸ்தாபனங்களும் உடைத்தெறியப்பட வேண்டும்.

தலைவிதி.

கஷ்டப்படுகிற மனிதர்கள் தாங்கள் பாடு பட்டும் பட்டினி இருக்க நேருவதையும் 'யோக்கியமாய்' 'மானியமாய்' நடந்தும் 'இழிவாய்' 'கீழ்மக்களாய்' கருதப்படுவதுமான தங்களது கொடுமையின் நிலைமைக்கு மற்றவர்களால் தாங்கள் ஏமாற்றப்படுவதுதான் காரணம் என்பதை உணராமல் தங்களுடைய முன்ஜென்ம கர்ம பலன்—தலைவிதி—கடவுள் செயல் என்பதாகக்கருதிக்கொண்டு சிறிதும் முன்னேறுவதற்கு முயற்சி செய்யாமலும் சூழ்ச்சியின் தன்மையை உணராமலும் இருப்பதோடு தங்கள் நிலைமையைப்பற்றி சிறிதும் அதிருப்திகூட அடையக்கூடாதென்றுகருதி தங்கள் நிலைமையைப்பற்றி தாங்களே சமாதானமும் சாந்தமும் அடைந்து கொள்ளுகிறார்கள். வெளியில் சொல்லிக்கொள்ளக்கூட வெட்கப்படுகிறார்கள். ஏனெனில் கஷ்டப்படுகின்ற மக்களுக்கு கடவுள் உணர்ச்சியும் மதமும் இதைத்தான் போதிக்கின்றது. எப்படி என்றால்—:

"ஓ கஷ்டப்படுகின்ற மனிதனே! கஷ்டப்பட்டும் பட்டினி கிடக்கின்ற இளைத்த ஏழை மனிதனே!! நீ உனது முன்ஜென்ம பாப கர்ம பலத்தினால்—தலைவிதியால்-கடவுள் சித்தத்தால், இம்மாதிரி துன்பத்தை அனுபவிக்கின்றாய். இந்த ஜன்மத்தில் நீ உனக்கேற்பட்ட இந்த நிலைமையை பொறுமையுடன் ஏற்று சமாதானமும் சாந்தமும்அடைந்து இருப்பாயாகில் அடுத்த ஜன்மத்தில் சுகப்படுவாய்-மேலான பிறவி பெறுவாய்—அல்லது மேல் உலகில் மோக்ஷம் என்னும் மேன்மையை அடைவாய்—கடவுள் சன்மானம் 'அருளுவார்'" என்கின்ற உபதேசமே யாகும்.

இந்த பொறுமை உபதேசமும் சாந்த உபதேசமும், சமாதான உபதேசமும், மக்களை கோழைகளாகவும், முற்போக்கற்றவர்களாகவும், செய்து அவர்களது கஷ்டத்திலிருந்தும் இழிவிலிருந்தும் முன்னேற முடியாமலும் விடுபட முடியாமலும், சுயமரியாதை உணர்ச்சி பெறாமலும்- இருந்து உயிர்வாழும்படி செய்து வந்திருக்கிறது.

இவ்வளவு தானா?

இவ்வளவு மாத்திரம் தானா? இத்தக்கடவுள் உணர்ச்சியும் மதமும் செல்வவந்தர்களுக்கும், மிராசுதாரர்களுக்கும், மற்றும் உத்தியோகம், வியாபாரம், லேவாதேவி என்னும் பேர்களால் ஏழைகளிடமிருந்து பெரும் பணம் கொள்ளை கொண்டு மற்றவர்களை பட்டினி போட்டு பெரும் பணம் சேர்க்கும் பணக்காரர்களுக்கும் போதிப்பது என்ன என்பதைப் பார்த்தாலோ அது;

"ஓ பிரபுக்களே! செல்வவான்களே!! ஏராளமாக மேலும் மேலும் பணம் சேர்க்கும் பணக்காரர்களே!!! லக்ஷாதிபதிகளே!! நீங்கள் முன் ஜென்மத்தில் செய்த புண்ணியத்தினால்—கடவுள் உங்கள் மீது வைத்த கருணையினால் இவ்வுயர் நிலைமை அடைந்திருக்கிறீர்கள்—ஆகவே ஏராளமான பணமானது உங்களுக்கு ஏற்பட்டிருந்தும் இன்னும் மேலும் உங்களுக்குக் கிடைக்கத்தக்க காரணம் கடவுள் சித்தமேயாகும். ஆதலால் நீங்கள் கடவுள் பக்தி உள்ளவர்களாக இருந்து கடவுளுக்குக் காணிக்கை செலுத்துவதன் மூலமும் கடவுளுக்குக் கோவில் கட்டுவதன் மூலமும், கடவுள் பக்தர்களான பாதிரி குரு பிராமணர் முதலியவர்களுக்கு மரியாதை செய்து சத்திரம், மடம் முதலிய உதவி அளிப்பதன் மூலமும் நன்றி செலுத்தி இந்நிலைமை நீங்காமல் நிறுத்திக் கொள்ளுவதுடன் மோக்ஷ லோகத்திலும் அவ்வளவு இடம் சம்பாதித்துக்கொள்ளுங்கள்" என்பதேயாகும். ஆகவே தோழர்களே! இந்த காரணங்களாலேயே மக்களில் உயர்வு—தாழ்வும், எஜமான்—அடிமையும், முதலாளி—தொழிலாளியும், அரசன்—குடிகளும், குரு—சிஷ்யனும், ஏற்பட்டிருக்கின்றன என்பதை இப்போதாவது உணருகிறீர்களா?

அரசன்.

உலகிற்கு அரசன் அரசாக்ஷி என்பதாக ஒருவனை இருந்துவருவதின் காரணமெல்லாம்கூட செல்வவான்களின் செல்வங்களைக்காப்பாற்றவும் சோம்பேரி வாழ்க்கைகளையும், அவர்களது தத்துவங்களையும்பிறர்இகழாமல்இருக்கவுமே ஒழியமற்றபடிமக்கள்சமூகம் துன்பப்படாமலோ, மற்றவர்களால் கொடுமைப்படுத்தப்படாமலோ சகல துறைகளிலும் உயர்வு தாழ்வு கொடுமை இல்லாமலோ, இருப்பதற்காக அல்லவே அல்ல என்பதை நீங்கள் உறுதியாய் நம்புங்கள்.

இதுபோலவேதான் முன்குறிப்பிட்ட கடவுள் மத உணர்ச்சிகற்பிக்கப்படுவதும் ஏழைகள் தாங்கள் படும் கஷ்டங்களுக்கு காரணம் முதலாளிகளின் சூழ்ச்சியும், சோம்பேரிகளின் தத்துவங்களும் என்பதை உணராமல் இருப்பதற்காகவே ஒழிய வேறில்லை.

உதாரணம்.

உதாரணம் வேண்டுமானால், இன்றையத்தினம் கஷ்டப்படுவதாகவும், இழிவு படுத்தப்பட்டதாகவும், பட்டினி கிடந்து துன்பப்படுவதாகவும், ஏழைகளாகவும், காணப்படும் மக்களில் அநேகரை அணுகி அவர்களது இவ்வித கஷ்டநிலைக்கு காரணம் என்ன என்று கேட்டுப்பாருங்கள். உடனே அவர்கள் சற்றும் தயக்கமின்றி தங்களின் கஷ்ட நிலைக்கு தங்கள் "தலைவிதி" என்றும் "முன் ஜன்மகர்மபலன்" என்றும் "கடவுள் சித்தம்" என்றும் "ஆண்டவன் கட்டளை" என்றும் தான்பதில் சொல்லுவார்களேயொழிய பிரமணிதர்களால்—அரசாங்க சட்டத்தால்—செல்வவான்களின் சூழ்ச்சியால், சோம்பேரிகளின் தந்திரத்தால், தாங்கள் ஏமாற்றப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, அவதிப்படுவதாக ஒரு நாளும் சொல்லமாட்டார்கள். ஆதலால்தான் ஏழைகளின் கஷ்டங்களை விலக்க வேண்டுமென்பவர்கள் முதலில் அதற்கு அஸ்திவாரமான காரணகாரியங்களை கண்டுபிடித்து அழித்தெறிய வேண்டும் என்று சொல்லவேண்டி இருக்கின்றது.

கடவுள்.

கடவுள் என்பது அருத்தமும்குறிப்பும் அற்ற வார்த்தையாய் இருந்து வந்தபோதிலும் அது மனித சமூகத்தில் 100க்கு 99 மக்களைபிடித்துதன் வயப்படுத்தி மடமையாக்கி ஆதிக்கம் செலுத்திவருகின்றது. கடவுள் என்ற வார்த்தை கற்பிக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆயிருந்தபோதிலும்கூட கடவுள் என்பது இன்னது என்று குறிப்பாக குருபடி இல்லாமல்—தெளிவுபட உணர்த்தியவர்களோ உணர்ந்தவர்களோ இதுவரையில் காணக்கிடைக்கவில்லை. பொதுவாக அந்தப்படி ஒரு உணர்ச்சியை மக்களுக்குள் எப்படியாவது புகுத்தி அவர்களைப்பயப்படுத்தி வைக்கவேண்டும் என்கின்ற அவசியத்தினால் அதற்கு என்று வேறு ஒரு (மானச) உலகத்தையும் பாவபுண்ணிய பயனையும், மோக்ஷ நரகத்தையும், கற்பித்து அதை பரப்ப பலவித ஸ்தாபனங்களை உண்டாக்கி அதன் பிரசாரத்தின் பேரால் பிழைக்க ஒரு கூட்டத்தையும் ஏற்பாடுசெய்து, அக்கூட்டத்திற்கு அதிலேயே பிழைத்துத்தீரவேண்டியதான நிலைமையையும் ஏற்படுத்தி விட்டதால் வெகு சுலபமாகவும் செல்வாக்காகவும், அதன் பிரசாரம் நடக்கவும் மக்களை தன்வயப்படுத்தவுமான காரியங்கள் நடந்து கொண்டேவருகின்றன கடவுள் என்றால் என்ன? என்றாலும் கடவுள் என்றால் என்ன? என்பதை உணருவதற்கில்லாமலும் உணரவேண்டும் என்று நினைப்பதற்கில்லாமலும் இருந்து வருகிறது.

யாராவது கடவுளைப்பற்றி நெருக்கிப் பிடித்துக்கேட்டால் அது முழுவதும் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களையும் செய்கைகளையும் கொண்டிருப்பதும், ஆளுக்கு ஒரு வித வியாக்கியானம் கூறுவதுமாய் இருப்பதோடல்லாமல் வேறு விதமாய் குறிப்பான பதில் கிடைப்பது என்பது அரிதாகவேயிருக்கிறது.

கடவுள் என்பது சர்வவல்லமையும் சர்வ வியாபகமும், சர்வ சக்தியும் கொண்ட ஒரு ஒப்பற்ற தனிப்பொருளென்று சொல்லப்பட்டு விட்டு உடனேயே அது கண்ணுக்குத்தெரியாதது என்றும், மனதிற்குத்தோன்றாதது என்றும் சொல்லப்படுவதோடல்லாமல் அதற்கு உருவம் இல்லையென்றும், குணம் இல்லையென்றும், இன்ன தன்மையது என்று விளக்க முடியாதது என்றும் சொல்லப்பட்டு விடுகின்றது.

ஒரு வேடிக்கை.

இவற்றுள் மற்றொரு வேடிக்கை என்னவென்றால் இப்படிப்பட்ட ஒரு கடவுள் தன்மையை அதாவது "சர்வசக்தியும் சர்வவியாபகமும், உடையதும் கண்ணுக்கும் மனதிற்கும் தென்படாததும், குணமும் உருவமும் இன்ன தன்மையென்று குறிப்பிடக்கூடிய தன்மையும்இல்லாதது" மான ஒரு கடவுளை நிலை நிறுத்தவும் அதைப்பற்றி மக்கள் நம்பிக்கை கொள்ளவும் "கடவுளால்உண்டாக்கப்பட்ட" மக்களிலேயே பலர் வக்காலத்து பெற்றுக் கடவுளை நிரூபிக்க ஒழுங்கற்ற முறையிலும் ஒழுக்க ஈனமான முறையிலும் எவ்வளவோ பாடுபட வேண்டியிருப்பதுமேயாகும்.

மற்றும் அப்படிப்பட்ட வக்காலத்துக்காரர் தங்கள் சொந்த நிலையில் தங்களால் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்தையும் தாங்களே செய்வதாகவும் தங்களால் சொல்லப்படும் ஒவ்வொரு விஷயமும் தாங்களே அறிந்து சொல்லுவதாகவும்நினைத்தேபேசியும் நடந்தும் வருகிறார்கள். அது மாத்திரமல்லாமல் மற்றவர்களால் செய்யப்படும்—சொல்லப்படும் ஒவ்வொரு விஷயத்தையும் மற்றவர்கள் தங்களுக்குச் செய்வதாகவும், சொல்லுவதா

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா

உலக விடுதலைக்கு வழி.

"கடவுள் என்ற வார்த்தை ஒழியவேண்டும்."

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

நாஸ்திக உலகின் சிறப்பு.

முற்கால, தற்கால உலகம், பட்டு வரும் பாட்டையும், கெட்டுவரும் கேட்டையும் ஆஸ்திகத்தால் உண்டாகின்றனவென, சமதுவிசாரணையில் கண்டறிந்தோம். மூட வைராக்கியத்தில் மூழ்கிக்கிடக்கும், பாமர ஜனங்களும், அவர்களை ஏமாற்றும் மத அபிமானிகளும், தான் இந்த தீர்மானத்தை மறுப்பார்களேயொழிய, விவேகிகளில் யாரும்மறுக்கார.

ஆஸ்திகம் நிறைந்துள்ள உலகை சற்று நோக்கிப் பார்ப்போம். என்ன கோரம்! என்னதுயரம்! என்ன மடமை! என்ன வியர்த்தம்! என்ன சண்டை! என்ன கொடுமை! என்ன நோய்! என்ன வறுமை! இவைகள் நிறைந்துள்ள உலகில் "அரகர" வென்ற வோசை கணப்பொழுதுக் கொருதரம், எழுகின்றது! Te Deum என்ற வார்த்தை, ஆகாயத்தை நோக்கி கணக்கில்லாமல் நாவிலிருந்து கிளம்புகின்றது. Om mani padmi om நீர்த்துளி பெரும் வெள்ளத்தில் கலந்து கொண்டது என்று, கோடான கோடி புத்தர்கள், உச்சரிக்கின்றார்கள். கோயில்களில் கண்டாமணி அடிக்கின்றது. தூபநெய்வேத்தியம் துலங்குகின்றது. இஸ்லாமியர் மெக்காவைப் பார்த்து வணங்குகிறார். கிறிஸ்துவர்கள், Ave marie என்று முணமுணக்கின்றார்கள். மூலைக்கு மூலையிலும், தெருக்களிலும், சந்து பொந்துகளிலும், தெய்வங்கள் நிறைந்து இருந்தும், அவைகளை வணங்கி வழிபடும் மக்கள் பலகோடி. இருந்தும், பிணி மூப்பு சாக்காட்டால் உலக மக்கள் வருந்துவானேன்? துஷ்டரை தண்டிக்க கோர்டுகள் நிறைந்துளதேன்? தூக்கு மரங்கள் வேலை செய்துகொண்டிருப்பதேன்? கத்தியும் ஈட்டியும் துப்பாக்கியும், வெடிகுண்டு, Bombs, கவசவண்டி, Tanks, விஷப்புகை, Gas, முதலிய கொடூர ஆயுதங்கள், கோடிக் கணக்காகச் செய்து வருவானேன்? உன்மத்த உலகில், உன்மத்த கடவுளரை சிருஷ்டி செய்து கொண்டு உன்மத்த மக்கள், தொலையா துக்கங்களை விளைவித்துக் கொண்டிருக்கும் எந்த இதர உன்மத்தன் உலகம் எங்கு கிடைக்கும்? ஆஸ்திக உலகம் இவ்வாறு கிடக்க, நாஸ்திக உலகின் செல்வாக்கை பார்க்க வேண்டுமானால், அமெரிக்க தேசத்து மாரிஸ் இந்தூஸ் (Maurice Hindus) என்ற யாத்திரை வாசி, "Humanity uprooted" மனிதவர்க்கம் வேறுடன் கிளப்பப்பட்டது என்ற புத்தகத்தை வாசியுங்கள். நாஸ்திக உலகில் பிறக்கும் குழந்தைகளை, பொதுவாக வளர்க்கப்படும். குழந்தைகளுக்கு வறுமை என்ற சொல்லே தெரியாமல் வளர்க்கப்படும். பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் (Collecttive responsbility) பொதுஜன பொருப்பில் வளரும், அதனதன் Aptitude தகுதியின் படி கல்வி கற்பிக்கப்படும். பயத்தையுண்டாக்கும் புராணக்கதைகள், கற்பிதங்களாகிய "கடவுள்", "நரகம்", கோபம் விளைவிக்கும் சண்டை போர் முதலிய ஜனசமூகவாழ்வுக்குவிரோதமான காரியங்கள் யாவும், குழந்தைக் கல்வியிலிருந்து விலக்கப்படும். வயதுவந்தவர்களுக்கு வாழ்வுக்கு வேண்டிய தொழில், சீவனம், முதலிய வசதிகள் யாவும் தக்கபடி அளிக்கப்படும் அவ்வுலகில், வேலை இல்லாத விசாரமே கிடையா.

கோயில்களில் உள்ள பொன்னால் செய்த விக்கிரகங்களாயினும், ஆபரணங்களாயினும்; கோயில்களில் துருப்பு அடைந்து உபயோகமற்று இருக்க விடாமல், பாங்குகளில், விளைபொருளுக்கும்வர்த்தகத்திற்கும் உதவுமாறு உபயோகிக்கப்படும். கோயில்களின் வருமானங்கள், சோம்பேரிகளாகிய பிராமண குருக்கள், பண்டாரங்கள், மடாதிபதிகள் பங்கிட்டுக் கொள்ளாதபடிக்கு, பொதுஉடமையாக்கப்படும். காட்டுமிராண்டி, பழக்கவழக்கங்களென்று மதிக்கபட்டும், இகழப்பட்டும் நிறுத்தப்படும், மாமாங்கமென்று பாமர மக்கள் திரள் திரளாக அழுக்கு நிறைந்த ஆறுகளிலும் குட்டைகளிலும் குளித்து, நோய்களை அதிகப்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் யாவும் நின்று போம்.

புதிய கோயில் கட்டும் வியர்த்த பழக்கங்கள் யாவும் நின்றுவிடும். இரண்டு சோம்பேரிகள் கூடிக்கொண்டு, தெருக்களிலும், சந்துகளிலும் ஒரு கல்லை நட்டு அதை தெய்வமாக்கிவிடும் பித்தலாட்டங்களும் நின்றுவிடும். மாரியாத்தாளுக்கு கும்பம் போடுவதும், வேப்பிலையைக் கட்டிக் கொண்டு ஊர்வலம் வருவதும் நின்றுவிடும்பரணிஎன்றும் பாமரமக்களைபயமுறுத்தி, அந்நாளில் உபவாசமிருப்பதும், நோயாளிகளுக்கு மருந்தொன்றும் கொடாமல் வருத்தும் சண்டாளத்தனமும் நின்றுபோம். "பரணியில் படுத்தார் தோரார், பாம்பின் வாய்த் தேரையாமே" என்றமூடப் பழங்கதைகளும் பொய்த்துப்போம்.

எங்கும் உன்னத நந்தவனங்களும், உல்லாச காட்சிகளும், அனுதினமும் தொழில் புரிவோர் மனத்தை குளிரச்செய்து வரும். ஒவ்வொரு கிராமங்களிலும், "பிடாரி" "மாரியாத்தாள்" "பச்சையம்மாள்" முதலிய கற்பித சொற்களால் பாமர மக்கள் மதி மயங்காமல், தெளிவு அடைந்து, கிராம சுகாதாரம், கிராம ஜலsupply, கிராமதீபம், கிராமபள்ளிக்கூடம், கிராமநாடகம், கிராமசினிமா முதலிய கிராம மனோரம்மியங்கள் விஷயமாக கிராம வாசிகள் சிரத்தை கொள்ளுவார்கள். இவ்வுலகில் சிலர் சோம்பேரிகளாய் வாழ்வதற்கும் பலர் மௌடிகத்தில் கிடந்து உழல்வதற்கும், ஏற்பட்டுள்ள மத ஸ்தாபனங்கள் யாவும் அழிவுற்று, மனித சமூக வாழ்வு இனிது நடை பெறும். கற்பனை சொற்களாகிய தெய்வம், கடவுள், பேய், பிசாசு, அம்மன், மாரியாத்தாள், காற்று காப்புகள் யாவும் மக்கள் மனதை விட்டு விலகி, அச்சொற்களால் சதாகோரமும் உண்டாகும் அச்சமும் பயமும், கிலேசமும் ஒழிந்து பாமர மக்கள் வாழ்வு இனிது பெறும்.

நாஸ்திக வாழ்வில் (Atheistic life) மனிதன் பல கோடி சீவர்களில் ஒருவன் என்று கருதப்படுவான். He Will realise that he is governed by the same laws of existence as they are governed அவைகளைகட்டுப்படுத்தும் திட்டங்களே, மனிதனையும் சட்டுப்படுத்துகின்றன என்று அறிந்து கொள்வான். மற்ற சீவன்களுக்கும் மனிதனுக்கும் வுள்ள வித்தியாசம், படித்திரமேயொழியஇனவித்தியாசம் வொன்றுமில்லை என்று உணர்வான். He will know that any difference betWeen Man and the rest of living beings is only one of degree, and none of kind. மற்ற உயிர்களும், கோடான கோடி வருஷம் "கடவுள்" "பிசாசு" என்றசொற்கள் இல்லாமலே வாழ்ந்து வருவதைப்போல் மனிதனும்வாழ முடியுமென்றஞானம் நாஸ்திக கல்வியால் Atheistic culture பெறுவான்.

ஆஸ்திக நீதி, நியாயம், சீலம், சமாதிமுதலிய சன்மார்க்க வாழ்வுக்குரியவை என்று சொல்லும் திட்டங்கள் யாவும் (Morality and ethics) ஒரு சார்பாருக்கு அனுகூலமாக செய்துகொண்ட திட்டங்களேயொழிய, பொது ஜனங்கள் சுகத்திற்காக ஏற்பட்டவைகளல்லவென நாஸ்திக அறிவில் Culture ஏற்படும் கடவுள் இல்லாத படிப்பில்தான் மனித ஒற்றுமையும் (unity of mankind Liberte, Egalete Fraternite) என்று வழங்கும் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் ஏற்படுமேயொழிய, வேதாகமபுராண இதிகாச படிப்பால் உண்டாகாவென அறிக.

ஆஸ்திக வல்லரசுகள் செய்துவரும் பொல்லாங்கான காரியங்களை ஒரு பக்கத்திலும், நாஸ்திக ரஷ்யா அவைகளுக்கெல்லாம் பொருத்துவரும் மனப்பான்மையை, மற்றோர் பக்கத்திலும், வைத்துப்பாருங்கள்! ஆஸ்திக அரசுகள் ஒன்றையொன்று கொள்ளை கொள்ளும் தன்மையிலேயே வளர்ந்து வருவதை இந்த சந்தர்ப்பத்தில் கவனியுங்கள். காந்தியார் அடுத்தடுத்து கூறும் மிருகத்தன்மை ஆஸ்திக வாழ்வில் காண்கிறோமே யொழிய மற்ற எந்த நாஸ்திக வாழ்விலும் காணப்படாது, இலங்கை ராவணனும் ஈஸ்வரபக்தன்! ஜர்மன் கெய்சரும் கடவுள் பக்தன்! இவ்விருவர் நடத்திய யுத்தங்கள் தம்தம் கடவுள் பேரால் நடத்தியவைகளே! ஆனால் இதுகாறும் நாஸ்திக அரசுஎங்கும் ஏற்படவில்லை. ஏற்பட்ட ஓர்இடத்தில் நாம்கூறிவந்த ஞாயங்கள் பன்முறையும் நிலைக்கச்செய்துள். ஆதலின் ஆஸ்திக உலகம் அழிந்து நாஸ்திக உலகமாக மாறும் காலம் இனிவரும் காலமென அறிக. அவ்வுலகை பரவச்செய்வது சமதர்ம வாதிகளாகிய உங்கள் கடமைகளில் சிறந்ததாகுமெனவும் அறிக. பலவிஷயங்களை சுருக்கமாக சொல்வதைவிட, ஒரு விஷயத்தை பூரணமாக, தெளிவுபடச்செய்தல் நலமெனக்கருதி இவ்வாறு ஆஸ்திக, நாஸ்திக வாதத்தினை நீண்டதோர் வியாசமாக்கினேன். இன்னொரு காரணமும் உண்டு. அதுயாதெனில் உங்கள் இயக்கத்தில் முதன்மைகொண்ட விஷயம் மதங்களை ஒழித்தாலெனக்கருதுகிறேன். ஆதலின் மத விஷயமாக இந்த நீண்டதோர் பிரச்சனையைக்குறித்து போராடினேன். இக்கருத்துகள் உங்கள் சம்மதிப்பைப்பெறுமாகில் இதனைப்பரவசெய்யும் மார்க்கங்களை நீங்கள் ஆலோசித்து தீர்மானத்திற்கு வரவேண்டுமென்பது எனது கோரிக்கை.

சேலத்தில் எனது தலைமையில் நடந்த மகாநாட்டில் நான் உங்கள் இயக்க சம்பந்தமாக நீங்கள் கவனிக்க வேண்டிய சில பிரச்சனைகள் (Problems) குறித்துள்ளேன். அந்த பிரச்சனைகளில் இரண்டாவது இவ்வாறு தெரிவித்துள்ளேன். அதாவது "மதங்கள் ஒழிக, குருமார் ஒழிக, கோவில் ஒழிக, பூஜைகள் ஒழிக, நிவேதனங்கள் ஒழிக, என்று மந்திரம் சொல்லிக்கொண்டுமாத்திரம்மயக்கப் போகிறீர்களா? அல்லது மதங்களை ஒழிக்க, மதஸ்தாபனங்களை நல் உபயோகிக்க, மத செத்துக்களையும் நல்வினையோகிக்க சமர்ம அரசியலை

தொடர்ச்சி 1?-ம் பக்கம் பார்க்க.

தோழர் ஈ. வெ. இராமசாமி இல்லத்தில்

சுயமரியாதை திருமணம்

18—11—32 வெள்ளியன்று காலை, சங்ககிரி பாடசாலைகளின் டெப்டி இன்ஸ்பெக்டர் தோழர் எ. மாரிமுத்து பி. எ. எல். டி. அவர்களுக்கும், சென்னை தோழர் சாரதாம்பாள் அவர்களுக்கும், தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மாளிகையில், கலப்பு; விதவா, சீர்திருத்தத் திருமணம் சிறப்புற நடந்தேறியது.

அவ்வமயம் சென்னை, கோயமுத்தூர், சேலம், திருச்சி, காரைக்குடி, திருச்செங்கோடு, நாகை, பட்டுக்கோட்டை, தஞ்சை, ஜோலார்ப்பேட்டை. சங்ககிரி, மாயவரம், கரூர், துறையூர், லால்குடி முதலிய பலவிடங்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் அநேக தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்களான தோழர்கள்:—

ஈ. வெ. கிருஷ்ணசாமி, சேர்மென் கே. எ. ஷேக்தாவூத்சாயபு, அர்பன் பாங்கு பிரசிடெண்டு எம். சிக்கையா, எஸ். இராமசாமி, எஸ். மீனாட்சிசுந்தரம் பி. எ. எல். டி. பெரியசாமி முதலியார், கைவல்யம், கேசவலால் காளிதாஸ், உ. கந்தசாமி, சி. நடராஜன், சென்னை நித்தியானந்தம், அ. இராகவன், என். பி. காளியப்பன், வி. வேணுகோபால், இராமநாதமேனன், எம். கிருஷ்ணசாமி, ஆர். எல்லநாயக்கர், டி. டி. கோபால், ஆர். டி. எல்லநாயகர், ஈ. வி. ஜெயராம், வெள்ளகோவில் சபாபதி, பத்ரையா, கரூர் சக்ரவர்த்தி வி. லட்சுமணசாமி, எ. இரத்தினசபாபதி அன்னபூரணி, ஈ. வெ. ஆர். நாகம்மாள், கவுன்சிலர் எஸ். ஆர். கண்ணம்மாள், ஈ. வெ. கி. ரங்கநாயகி, சிவகாமி, கிருஷ்ணவேணி, விசாலாட்சி, வள்ளியம்மாள், ரங்கம்மாள், ஆர். பாக்கியம், எஸ். ஆர். காந்தியம்மாள், சு. ப. சுப்பையா காரைக்குடி, ஸ்ரீரங்கம் துரைசாமி, இராஜாமபாள், இராஜகோபால், பள்ளத்தூர் மு. அருணாசலம், கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். "நகரதூதன்" ஆசிரியர் ரெ. திருமலைசாமி, துறையூர் சைமன் இராமசாமி, கோவை கே. சுப்பிரமணியம், சி. கே. சுப்பிரமணியம், ஏ. பொன்னுசாமி, எஸ். ஜி. ஆர். சாமி, திருச்சங்கோடு, எஸ். கே. வரதராஜுலு, டி. ஏ. சங்கரலிங்கம், டி. எ. கைலாசம், எ. அர்த்தநாரி, கோவிந்தராஜுலு, செட்டிமுத்து, எலச்சிபாளையம் சின்னச்சாமி, ஷண்முகம், ஆர். பாலகிருஷ்ணன் பி. ஏ. எல். டி., சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் சங்ககிரி. என். எஸ். மாரிமுத்து, சின்னச்சாமி, ஏ. எம். பாலு, ஆர். டி. இராஜையா, எஸ். ஆர். நாராயணன், எஸ். பி. காமாட்சி, எஸ். பழனிவேலு, எஸ். ஆர். குப்பு நரசு, எஸ். ஆர். டி, எஸ். கே, இராதாகிருஷ்ணன், எஸ். பி. கௌஸ்மொய்தீன், எஸ். ஆர். மகமது உஸ்மான், பி. ஜி. கிருஷ்ணன், சென்னகேசவன், எம். கே. ரங்கசாமி, சி. ஜி. முத்து, எஸ். வி. சுப்பிரமணியம், நபாப் பலிஸ், புருஷோத்தமன், இஸ்மேல் எஸ். எஸ். சென்னகேசவன், நாராயணன், சேலம் ஆர். நடராஜன், ஆர். ஆறுமுகம், ஜலகண்டாபுரம் எஸ். இராமநாதன், எ. அங்கமுத்து, எம். வி. சுப்பிரமணியம், கே. ஆர். சுப்ரமணியம், சாமி சிதம்பரனார், ஜோலார்பேட்டை வி. பார்த்தசாரதி, நாகலிங்கம், கரிவரதசாமி, சங்கரப்பா, வி. இராமசாமி, மற்றும்பல உள்ளூர் வெளியூர் தோழர்களும், ஆவார்கள்.

சரியாக 8-30 மணிக்கு, மணமக்கள் ஆசனத்தமர்ந்தனர். அடுத்தபடியாக, தோழர் நித்தியானந்தம் அவர்கள், மணமக்களைச் சபையோருக்கு அறிமுகப்படுத்தி, தோழர் ஈ. வி. இராமசாமி அவர்களை, மணநிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டார். அவ்வமயம் திருச்செங்கோடு வாலிப சகவாச சங்கத்தாரால், மணமகளுக்கும், தோழர் ஈ. வெ. இராமசாமியவர்களுக்கும் வரவேற்புப்பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. தோழர் இராமசாமி நீண்ட கரகோஷத்தினிடையே, எழுந்து "நம் நாட்டுத் திருமணமும், மேல் நாடுகளின் திருமணமும்" என்பது பற்றி சுமார் 30 நிமிடங்கள் மிகத்தெளிவாகப் பேசினார். மணநிகழ்ச்சி நடந்த பின் மணமக்களைப்பாராட்டி, தோழர்களான கே. எா். பாலசுப்ரமண்யம் பி. ஏ. பி. எல்., அ. இராகவன், எஸ். மீனாட்சிசுந்தரம் பி. ஏ. எல். டி., சாமி சிதம்பரனார், ஆர். அன்னபூரணி, ரெங்கம்மாள், வெள்ளகோவில் எ. சபாபதி, சேலம் டி. ஆர். நடேசன், எழு வயதுள்ளசிறுமி, எஸ். ஆர். காந்தஅம்மாள், எ. இரத்தினசபாபதியவர்கள் பேசினார்கள்.

பின்னர் சங்ககிரி, சமரச சன்மார்க்க சங்கத்தாரால் மணமக்களுக்கு ஒரு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. ஷை சங்கத்தாரால் ஓர் வெள்ளித்தட்டும் பரிசளிக்கப்பட்டது. பின்னர் தலைவர் தோழர் இராமசாமி முடிவுரையாக, திருமணத்தைப் பாராட்டியும், மற்ற வாலிபர்களும் குறிப்பாக உள்ளூர் வாசிகளும் இம்மாதிரி மணங்களைப் பின்பற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். மணமகன், தனக்களித்த வரவேற்பு உபசரிப்புக்குப் பதிலளிக்கையில், தோழர்கள் கூறியது போல், தான் மிகப்பெரிய காரியமெதையும் செய்துவிடவில்லையென்றும், தானும் தனது துணைவியாரும் தங்களால் இயன்றவரை சுயமரியாதை இயக்கத்திற்குத் தொண்டு புரிவதாக உறுதி கூறுவதாயும் கூறினார்.

பின் வந்திருந்தவர்களுக்கு வந்தனமளிக்குமுகத்தான், தோழர்களான நித்தியானந்தம், நடேசன் ஆகியோர் பேசினார்கள்.

இறுதியில் சந்தன, தாம்பூல, கற்கண்டுகள் வழங்கப்பெற்ற வைபவம் முடிவுற்றது. அன்று பகல் வந்திருந்த தோழர்களுக்கு விருந்தொன்றும் நடைபெற்றது.

நாகர் கோவில்.

சுயமரியாதை இளைஞர் சங்கம்.

இச்சங்கத்தின் நான்காவது கூட்டம் அறிவித்திருந்தபடி சில சந்தர்ப்ப குறைவால் சென்ற வெள்ளிக்கிழமை முனிசிபல் மைதானத்தில் நடத்த முடியாமற் போய்விட்டது. ஆகையால் அக்கூட்டம் கோட்டாறு தோழர் நாராயணகுரு ஞாபகார்த்த பாடசாலையில் நடைபெறுமெனகாரியதரிசி கே. ராமய்யா எழுதுகிறார்.

"வெடிகுண்டு"

நேயர்களுக்கு

சில காலமாக அச்சிடும் யந்திர வசதியின்மையால் தடைப்பட்டிருந்ததை இப்பொழுது மின்சார சக்தியோடு டபிள்ராயல் சிலிண்டர் மிஷினும், போதிய எழுத்துக்கள் முதலான வசதி ஏற்பட்டுள்ளமையால் வழக்கம்போல் ராயல் 1 க்கு 1 க்கு சைசில் ராப்பருடன் விசித்திரப் படங்கள் போட்டுத் தனிப்பிரதி அணா விலையில் பன்னிரண்டு பக்கங்களோடு, நாளது மாதம் கடைசி வாரத்தில் வெளிவருமென்பதை நேயர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம் எனமானேஜர் எழுதுகிறார்.

தோழர்

ஈ. வெ. ராமசாமிக்கு

சென்னையில் வரவேற்பு.

20—11—32 தேதி காலை 6 மணிக்குசென்னைசென்ட்ரல்ஸ்டேஷனில் வரவேற்கப்படும்.

பகல் 3 மணிக்கு சென்னை தியாகராய கட்டடத்தில் சென்னை கார்ப்பொரேஷன் தலைவர் தோழர் குமாரராஜா எம்.ஏ. முத்தையா எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் பல சங்கங்களின் சார்பாக உபசாரப்பத்திரங்கள் வாசித்தளிக்கப்படும்.

மாலை கடற்கரையில் தோழர் புதுக்கோட்டை வல்லத்தரசு அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடை பெறும்.

ஈரோடு தாலூக்கா போர்டு தேர்தல்.

ஈரோடு தாலூக்கா போர்டுக்கு ஏற்பட்ட 24 மெம்பர் ஸ்தானங்களில் 10-ஸ்தானங்களுக்கு ஏற்கனவே மெம்பர்கள் போட்டியின்றி தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார் கள். மீதி 11-ல் காஞ்சிக்கோவில் சர்க்கிளுக்கு ஏற்பட்ட 2-ஸ்தானங்கள் தவிர அடியில்கண்ட 12 நபர்களை சென்ற 12—11—32ந் தேதி நடைபெற்ற எலக்ஷனில் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

தோழர்கள் பழயகோட்டை பட்டக்காரர், ஈ. ஆர். கந்தசாமி கவுண்டர், காசிபாளையம் எம். சுப்பைய கவுண்டர், ஈ. எஸ். ராமசாமி கவுண்டர், கே. எஸ். ரங்கைய கவுண்டர், கே. ஷண்முக ராமசாமி கவுண்டர், ஏ. பழனி கவுண்டர், எஸ். முத்துசாமி கவுண்டர், எம். வெங்கடாசல கவுண்டர், எம். ஏ. ஆண்டமுத்து கவுண்டர், என் எம். கந்தப்பகவுண்டர், கே. பி. சுந்தராம்பாள் ஆகியவர்களாவார்கள்.

கோயமுத்தூர் ஜில்லாபோர்டு

கோயமுத்தூர் ஜில்லா போர்டுக்கு ஈரோடுதாலூகாவிலிருது 7 மெம்பர்களை தேர்ந்தெடுக்கவேண்டியது. மகம்மதியருக்கு ஒதுக்கி வைத்திருக்கும் ஸ்தானத்திற்கு போட்டியின்றி ஒருவரை ஏற்கனவே தெரிந்தெடுக்கப்பட்டது. பெருந்துறை சர்க்கிளுக்குவோட்எண்ணுவதை நிறுத்தி வைத்திருக்கிறது. 12 11 32ந் தேதி எலெக்ஷனில்கீழ்கண்டநபர்களை தெரிதெடுக்கப்பட்டிருக்கிறது.

தோழர்கள் முத்தம்மாள், எஸ். பி. சுப்பராயகவுண்டர், வி. எஸ் ராஜாகண்டர், ஈ. ஆர். கந்தசாமிக்கவுண்டர், சி. பெரியசாமிகவுண்டர், ஆகியவர்கள் ஆவார்கள் ஒரு நிருபர்

சோவியத் ருஷியா.

எதிரிகளின் கூற்றுக்கு மறுப்பு.

(தோழர் ஜார்ஜ் பெர்னார்ட் ஷா எழுதியது)

சோவியத்ருஷியாவைப்பற்றிப் பலர் பலகதைகள் கூறுகிறார்கள். உலகச் சுற்றுப் பிரயாணஞ் செய்தவராகிய திரு. ஜியார்ஜ் பெர்னார்ட்ஷா ஒருவிதம் கூறுகிறார். இரண்டு வருஷகாலமாக ருஷியாவிலேயே என்ஜினீயர் வேலைக்கமர்ந்திருந்த திரு. ஆர். வெஸ்ட் கார்த் என்பவர் மற்றொரு விதமாகக் கூறுகிறார், இவ்விருவரிலும், எவர் உண்மையான ருஷியாவை உள்ளவாறு கண்டவர்கள் என்ற கேள்வி எழுகின்றது.

சமீபத்தில் "டெய்லிஎக்ஸ்பிரஸ்" என்னும் புத்திரிகையில் திரு. வெஸ்ட்கார்த் ஒரு கட்டுரை எழுதியிருக்கின்றார். பெரியார்கள் ருஷியாவுக்கு விஜயஞ் செய்தால், அவர்களுக்கு உள்ளதிலும் பார்க்கப் பன்மடங்கு சிறந்ததாக, ருஷியாவைக் காட்டுவதற்கு அங்குள்ளவர்கள் முயற்சி செய்து வருகிறார்களென்றும், அதனால் அங்கு விஜயஞ் செய்த வராகிய திரு. ஜியார்ஜ் பெர்னாட் ஷாவும் ருஷியாவில் உள்ள நிலைமையை உள்ளவாறு அறிந்து கொள்ளாது, ஏமாற்றமடைந்து விட்டதாகவும் அக்கட்டுரையில் அவர் குறிப்பிடுகிறார்.

அக்கட்டுரைக்கு திரு. ஜியார்ஜ் பெர்னார்ட்ஷா எழுதிய பதிற்கடிதம் வருமாறு:—

"டெய்லி எக்ஸ்பிரஸ்" ஆசிரியர் அவர்களுக்கு:—

ஐயா!—

சென்ற ஆண்டு, நான் ருஷியாவுக்கு விஜயஞ் செய்தபோதுநான் ருஷியாவை உள்ளன உள்ளவாறு அறியக் கூடியதாய் இருக்கவில்லையென்றும், இரண்டாவது கதரீன் இராணி, தனது ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த நாடுகளுக்குத் திக்விஜயஞ்செய்தபோது, பட்டியோம்கின் என்பவரால் ருஷியா எவ்விதம் புனைந்து செயற்கையால் அழகு படுத்தப்பட்டிருந்ததோ அவ்விதமே, நான் அங்கு விஜயஞ் செய்தபோதும், ருஷியா ஒரு நாடகமேடை போலக்கண்ணையும் மனதையுங் கவரத்தக்க விதமாகச் செயற்கை அழகுசெய்யப்பட்டுக் காட்டப் பட்டதென்றும், திரு, வெஸ்ட்கார்த் குறிப்பிடுகின்றார். அவரது வார்த்தைகளின் நோக்கத்தை எவரும் உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை.

சரியாயிருக்குமானால்

திரு. வெஸ்ட்கார்த் கூறுவது சரியா யிருக்குமானால், உலகத்திலுள்ள எந்த சர்க்காரும் செய்து முடிக்க முடியாத ஒரு பிரமாதமான வீரச்செயலை ருஷிய சர்க்கார்செய்து முடித்துவிட்டது என்றேநாம்கூற வேண்டும்.

இதைப்பற்றிச் சற்று ஆர அமர ஆலோசித்துப் பாருங்கள். திரு. வெஸ்ட்கார்த் கூறுவது சரியாயிருக்குமானால், இரு வாரங்களுக்குள்ளாகவே ருஷிய சர்க்கார் இரு பிரம்மாண்டமான நகரங்களை நிறுவி அதற்குப் பூச்சுப் பூசி, லக்ஷக்கணக்கான ஜனங்களையும் அங்கு வசிக்கும்படி செய்து எனது விஜயத்தின் போது, காக்ஷி வழங்குவதற்காக, அழகான, புதிய ஆடையாபரணங்களை அவர்கள் அணியும்படி செய்து, மாஸ்கோ என்றும், பீட்டர்ஸ்பர்க் என்றும், இரு பெயர்களை அந் நகரங்களுக்கு இட்டு, எனக்குக் காட்டியிருக்க வேண்டும்.

இதனைத்தான் அவர்கள் செய்திருந்தாலும், எளிதாகச் செய்திருக்க முடியாது. அவர்கள் தாம் செய்த போலிச் செயலை நான் கண்டு பிடிக்க முடியாத விதமாக, மிக்க கெட்டிக்காரத்தனமாகச் செய்திருக்கவேண்டும். முன்னெச்சரிக்கையின்றித் திடீரென நான் ஒரு காரைநிறுத்த முடியாது. ஓர் தேவாலயத்துள்ளேனும் அல்லது ஒரு குழந்தையின் தொட்டிலைப் பார்ப்பதற்கேனும் எதிர்பாராத விதமாக நான் நுழைந்துவிட முடியாது. குழந்தைகளையெல்லாம், இதற்கென விசேஷ உணவளித்துக் கொழுக்கும்படி செய்தன்றோ அவர்கள் என்னிடம் காட்டியிருக்க வேண்டும்?

போலிப் பிரயாணிகள்.

இதுமட்டுமல்ல. ருஷியாவில் பட்டப்பகலில் நான் ஏறத்தாழ 50-மணி நேரம்ரெயில் பிரயாணஞ் செய்திருக்கிறேன். எனக்குப் போலிக்காக்ஷியைக் காட்ட விரும்பிய ருஷிய சர்க்கார், ரயில்தங்கி நிற்கும் இடங்களிலெல்லாம், பெரிய பட்டிணங்களையும், கிராமங்களையும் அமைத்திருக்க வேண்டும். உணவுப்பொருள்களை விற்கும் போலிச்சனங்களோடு ஏதோ உரையாடிக்கொண்டிருக்கும் போலிப் பிரயாணிகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும். தெருவின் இரு மருங்குகளிலும் நிற்போரையும், குழந்தைகளையும், ஏனையவற்றையும் போலியாகவே அமைத்திருக்கவேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே, உண்மை ருஷியாவை மறைத்துப் பிறிதொரு போலி ருஷியாவாக எனக்குக் காட்டியிருக்க முடியும்?

"ருஷியா என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டது." என்று நான் கூறும்போது, ஓர் நாடக ஆசிரியன் என்ற முறையில் எனக்கு நாற்பது வருஷ அநுபவமுண்டென்பதையும், போலி நாடகசித்திரங்களிலெல்லாம் நான்ஓர் நிபுணன் என்பதையும், நாடக பாத்திரங்களின் போலிச் செயல்களும், திரை வர்ணிப்போர், முதலாளிகள், ஆகியவர்களின் உள்ளும் புறமும் எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும் என்பதையும் வாசகர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய ஒருவனாகிய என்னை ஏமாற்றி விட்டதென்றால் ருஷிய சர்க்காரின் செயலை என்னென்று கூறவேண்டும்? ஒரு வீரச் செயலென்றன்றோ கூறவேண்டும்?

அதிலும். முக்கியமாக, ஒரு தந்திரம் என்னை முற்றும் தோல்வி அடையும்படியாகச் செய்து விட்டது. அதனைத் தோழர். வெஸ்ட்கார்த் எடுத்து விளக்குவதற்கு முயன்றாரில்லை. அது என்ன? காய்ந்து வறண்டு பட்டினியால் வாடி வதங்கியிருக்கும் ருஷியக் குழந்தைகளை, இரு சிறிய வாரங்களுக்குள்ளாக, ருஷியர்கள் எவ்விதம் கொழுத்து விலாப்புடைத்துக் கண்ணுக்குக் குளிர்ச்சியளிக்கத்தக்க காக்ஷியை வழங்கும்படி செய்தார்கள்.

ருஷியாவிலுள்ள வயோதிகர்களுக்குள்ளோ அல்லது வாலிபர்களுக்குள்ளோ வாடி வதங்கின தோற்றத்தையுடையவர்கள் ஒருவரையும் நான் காணவில்லையே! அவர்களெல்லாம் அட்டைகள் வைத்துப் பெரிதாகத் தோற்றும்படி கட்டப்பட்டிருந்தனரோ? அவர்களது குழிவிழுந்த கன்னங்களெல்லாம் மாறி நல்ல புஷ்டியான தோற்றத்தைக் காட்டக் கூடியதாக, அவர்கள் வாய்களுக்குள் இந்தியா ரப்பர் துண்டுகள் செருகப்பட்டிருந்தனவோ?

சரி. உடைகளுடுத்தியிருந்தவர்கள் மேற்கூறியவாறு தான் செய்து கொண்டார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். கலை ஞான வளர்ச்சிக்கு நிலைக்களமாயும், மக்கள் ஆறுதலாகத் தங்கியிருப்பதற்கு வளப்பம் மிகுந்ததாயும், சீர்திருத்தம் நிறைந்ததாயுமுள்ள மாஸ்கோ பட்டினத்தில், சூரிய வெப்பத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும், நீர்விளையாடுவதற்காகவும் அரை நிர்வாண உடைகள் தரித்தவர்களாக, தங்கள் கொழுத்த தேக அமைப்பு, பார்ப்போருக்குத் தென்படக் கூடியதாய் உலவின நூற்றுக்கணக்கான மக்களை நான் நாள் தோறும் பார்த்தேனே. அவர்களைப்பற்றி தோழர் வெஸ்ட்கார்த் என்ன சொல்லிக் கொள்ளப்போகிறார்? அதுமட்டுமா?

காட்டுப்புறங்களில், ரெயில் வண்டி ஆற்றுப் பாலங்களுக்கு மேல் செல்லும் போது, கூட்டங் கூட்டமாக, இளைஞரும் மகளிரும் பழைய, இயற்கை மணங்கமழுந் தோற்றத்தோடு அழகான கொழுத்த தேக அமைப்பினையுடையவர்களாய் நிற்கக்காணப்பட்டார்களே!

குழந்தைகள்.

தோழர். வெஸ்ட்கார்த் சொல்வது போல, விசேஷமாக என்னிடம் கொண்டுவந்து காட்டப்பட்ட குழந்தைகள் தருணத்துக்கேற்ற அழகாக உடுத்து அலங்கரிக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் உடைகள் தரித்துக் கொள்ளாது, ஸ்நான உடைகளை மட்டுமே தரித்துக் கொண்டு நின்ற சிறுவர்களைப்பற்றி என்ன கூறுவது? அவர்கள் திரண்ட தேக அமைப்பு உள்ளவர்களாக இருந்தார்கள். அங்ஙனமே ஸ்நான உடைகளோடு நின்ற சிறு பெண்களது விலா எலும்புகள் கண்ணுக்குத் தென்படாமல் தசையால் மூடப்பட்டிருந்தன. அந்நிலைமையில் அவர்கள் இரு வாரங்களுக்கு அன்னாகாரமின்றியே வசிக்கக்கூடியவர்கள் போலக் காணப்பட்டார்கள் என்று எவ்வாறு சொல்லுவது?

அவர்களை நான் படம் பிடித்தேன். அப்படங்கள் "நாஷெஸ் மாகஸீனி"ல் வெளியிடப்பட்டன. மேல் நாட்டு முதலாளிகளினதும் ஜனநாயகக் கொள்கையுடையோரினதும், கொடுஞ் செயல்களிருந்து குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக எழுந்த ஆங்கில தரும ஸ்தாபனங்களில் உதவிபெறுவதற்காகவருஷத்

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

குடி அரசு.

ஈரோடு 1932 நவம்பர்மீ 20-உ

கோயில் நுழைவும், ஒற்றுமை மகாநாடும்.

——:0:——

இன்று "இந்திய தேசிய" துறையில் கோவில் நுழைவு பிரசாரத்திற்கும் ஒற்றுமை பிரசாரத்திற்கும்தான் அதிக விளம்பரங்கள் காணப்படுகின்றன. ஏனெனில் தோழர். ராம்சே மாக்டானல்டு அவர்களின் வகுப்பு பிரச்சினை தீர்ப்புக்காகவென்று தோழர் காந்தியவர்களால் செய்யப்பட்ட பட்டினியின் பிரசாரம் பொதுஜனங்களின் மனதை கவரும்படி செய்துவிட்டது. மற்றொரு புறம் வைசிராய் அவர்களின் அடக்குமுறை பெருவாரியான தேசபக்தர்கள் என்பவர்களுக்கு தேசிய வேலை செய்ய இடமில்லாமல் செய்துவிட்டதால் அப்படியாவது ஒரு புதிய துறையைக் கண்டுபிடிக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டுவிட்டது. ஆகவே இவ்விரண்டின் பயன்களால் கோவில் நுழைவும் ஒற்றுமை மகாநாடும் உச்சஸ்தானம் பெற்றுவிட்டன.

இக்காரியங்கள் இரண்டும் இன்று தேசியத்திற்காகவே செய்யப்படுவதாய் கூறப்பட்டும், அந்தப்படி மக்களை நம்பும்படியும் செய்திருந்தாலும் நாம் அதை ஒப்புக்கொள்ள முடியாது. ஏனெனில் தேசியம் என்பதின் தத்துவம் எப்படி இருந்தபோதிலும் இன்றையதினம் தேசியத்திற்காகவென்று இவ்வளவு பாடுபடுகின்றவர்கள் தோழர் ராம்சே மாக்டனல்ட் தீர்ப்புக்கு முன் இவ்விஷயங்களில் இவ்வளவு பாடுபட்டிருந்தால் அதற்கு ஏதாவது ஒரு அர்த்தமுண்டு என்று சொல்லலாம். அப்படிக்கில்லாமல் வட்டமேஜை மகாநாட்டில் "எல்லா வகுப்புகளுக்கும் நாங்கள்தான் பிரதிநிதிகள், எதைப்பற்றியும் பேச எங்களுக்குத்தான் உரிமை உண்டு, மற்றவர்கள் எல்லாம் சரியான பிரதிநிதிகள் அல்ல, சுயராஜ்யம் கொடுத்துவிட்டால் வகுப்புத்தகராறுகள் எல்லாம் தானே தீர்ந்துவிடும், வகுப்புத்தகராறுகளுக்கெல்லாம் சர்க்காராரே காரணம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு எங்கள் உயிர்போனாலும் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க சம்மதிக்கமாட்டோம்" என்பதாகவெல்லாம் சொல்லியபின் சர்க்காராரே பிரவேசித்து வகுப்புத்தகரார் விஷயத்தில் தங்கள் தீர்ப்புகளை ஏதோ ஒருவிதத்தில் கொடுத்து அந்த வகுப்பு மக்களை தங்கள் சுவாதீனம் செய்துகொண்டபிறகு இப்போது அவர்களை தங்கள் பக்கம் இழுக்கக்கருதி சர்க்கார் கொடுத்ததைவிட தாங்கள் அதிகமாய் கொடுப்பதாகச் சொல்லுவதுபோல்பேசி சில ஏற்பாடுகளையும் செய்துகொண்டு கோவில் நுழைவைப்பற்றியும், ஒற்றுமையைப் பற்றியும் பேசினால் இதில் நாணயம் இருப்பதாய் யார்தான் நம்புவார்கள். இதை இந்து சமூகம் செய்யும் இந்துமதப்பிரசாரம் என்று சொல்லாமல் பொதுநல நன்மையான காரியம் என்று எப்படி சொல்ல முடியும்? ஏனெனில் தோழர் ராம்சேமாக்டனல்டின் தீர்ப்பானது தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித்தொகுதியின் மூலம் தனிப்பிரதிநிதித்துவம் கொடுத்ததானது அவர்களை(தாழ்த்தப்பட்ட மக்களை) நாளடைவில் இந்துச்சமூக அடிமை வாழ்விலிருந்து பிரித்து பொது சமூகவாழ்வில் ஒரு அரசுசுதந்திரர்களாக ஆக்கிவிடுகிறது. அதாவது மகமதியர்களுக்கு சுமார் 20 வருஷங்களுக்கு முன் கொடுக்கப்பட்ட தனித்தொகுதியானது எப்படி மகமதிய சமூகத்தை இந்து சமூகத்திலிருந்து நிரந்தரமாய் பிரித்துவிட்டதோ அதுபோலவே இந்த தாழ்த்தப்பட்ட சமூகமும் தனித்தொகுதி பெற்றால் கண்டிப்பாய் அது இந்து சமூகத்திலிருந்து பிரிந்தே போய்விட்டதாகத்தான் முடியும். ஆனால் மகமதிய சமூகம் தனித்தொகுதிபெற்ற பின்புதான் அது தன் காலிலேயே நிற்கக்கூடிய ஒரு பலத்தையும், சௌகரியத்தையும் பெற்றது என்பது எவராலும் மறுக்க முடியாததாகும். அதுபோலவே தாழ்த்தப்பட்ட சமூகமும் தனித்தொகுதி பெற்றுவிட்டால் அடுத்த 10-வருஷகாலத்திற்குள் அது மற்ற எவருடைய உதவியையும், தயவையும் எதிர்பாராமல் தன் காலிலேயே நிற்கக்கூடிய பலத்தையும் சௌகரியத்தையும் பெற்றுவிடும் என்பதில் சிறிதும் சந்தேகிக்க இடமில்லை,

இவ்விரு சமூகமும் அதாவது மகமதிய சமூகமும், தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகமும் சமூக வாழ்வில் சுதந்திரம்பெற்று மற்றவர்களுடைய தயவும், பிச்சையும் அவசியமில்லாமல் தங்கள் தங்கள் கால்களிலேயே நிற்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டால் இந்து சமூகம் என்பதானது இன்று சொல்லிக்கொள்வதுபோல இந்தியாவில் "ஒரு பெரியபலம் பொருந்திய சமூகம்" என்பதாக சொல்லிக்கொள்ள இடமில்லாமல் போவதோடு மகமதிய சமூகமும் தாழ்த்தப்பட்ட சமூகமும் அதனதன் சமூகக்கொள்கையின் பயனாக கலந்து கொள்ள ஒன்றுக்கொன்று அன்னியோன்னியம் ஏற்பட்டுவிட நேரும்போது இந்து சமூகம் சிறுபான்மை சமூகம் என்று சொல்லும்படியான நிலைமைக்கும் பரிகசிக்கத்தக்க நிலைமைக்கும் வந்துவிடும். அதோடுமாத்திரமல்லாமல் இந்து சமூகத்தில் இருக்கின்ற காரணத்தில் இன்னும் எத்தனை உள்சமூகங்கள் சமூக வாழ்வில் சுதந்திரமும் சமத்துவமும் அற்று இழிவுபடுத்தப்படுகின்றனவோ அவையெல்லாம் இப்படியே வெளிக்கிளம்பவும் நேரிட்டுவிடும். அப்போது இந்து சமூகம் என்பது தானாகவே அழுவாரற்ற பிணமாய் ஒழிந்துவிடும். இந்தக்காரணங்களாலேயே மக்களுக்கு சமூகவாழ்வில் சமத்துவமும், சுதந்திரமும் இல்லாவிட்டாலுங்கூட இந்து சமூகம் மேன்மையாய் இருந்து ஆதிக்கம் செலுத்துவதை மாத்திரம் விட்டுவிடக்கூடாது என்கின்ற இந்து சமூகத்தலைவர்கள் என்பவர்களின் எண்ணமே இந்த ஒற்றுமை மகாநாடுகளுக்கும், கோவில் நுழைவுக்கும் அஸ்திவாரமாய் இருந்து வருகின்றது.

தோழர் ராம்சேமாக்டனல்டின் வகுப்புதீர்ப்பு, ஒழிந்து தனித்தொகுதிமாறி, பொதுத்தொகுதி நிலைநின்று அரசியலிலும் இந்து சமூகத்திற்கே ஆதிக்கம்வந்துவிட்டது என்று ஆனவுடன் "கோவில் நுழைவு சுயராஜ்ஜியம் கிடைத்த பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்றும் "ஒற்றுமை என்பது சுயராஜ்ஜியம் கிடைத்த பிறகு தானாகவே ஏற்பட்டுவிடும்" என்றும் தாராளமாய் சொல்லப்பட்டுவிடும். பிறகு "பழய குருடி கதவை திறடி" என்கின்ற நிலைமை ஏற்படுவதில் சந்தேகமிருக்க நியாயமில்லை.

தவிரவும் இந்த கோவில்களுக்கு செல்வாக்குகள் இருந்த காலத்தில் கோவில் நுழைவைப்பற்றி பேசுவது பெருத்த அபவாதமாகவும், மதத்துரோகமாகவும், கலகாஸ்பதமாகவும் இருந்துவந்தது. இன்றைய தினம் உலகத்தில் கோவில்களுக்கு மதிப்புக்குறைந்து சில தேசங்களில் கோவிலுக்கு போவது முட்டாள்தனம் என்று கருதப்பட்டும் சிலதேசங்களில் கோவில்கள் இடிக்கப்பட்டும் போனபின்பும் நமது நாட்டிலும் கோவில்களின் புரட்டுகள் வெளியாகி அவற்றின் மதிப்பு குறைந்து அதன் பேரால் உயர் நிலையில் இருப்பவர்களுடையவும், வயிற்றுப்பிழைப்பு மதக்காரர்களுடையவும் யோக்கியதை வெளியாகி அவர்கள் மக்களால்வெறுக்கப்படஆரம்பித்த பிறகேதான் இப்போது கோவில் நுழைவு இவ்வளவு முக்கியஸ்தானம் பெற்றுவிட்டது.

கோவில் நுழைவு வெற்றி பெற்றால் இந்து சமூகம் சிறிது பலப்படும் என்றும் இன்னும் கொஞ்சகாலத்திற்காவது அதற்கு அழிவு வராமல் காப்பாற்றலாம் என்றுமே இப்போது கோவில் நுழைவுக்காரர்கள் கருதி வேலை செய்கிறார்களேயொழிய "சர்வ சமரச கடவுளின்" தரிசனத்தையும் அருளையும் தாழ்த்தப்பட்ட மக்கள் அடையவேண்டும்" என்பதாய் ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டதற்காக அல்ல என்பதை சிறிது யோசனை உள்ளவர்களும் உணர்ந்துவிடக்கூடும். அன்றியும் பகுத்தறிவையும் சமசுதந்திர நோக்கத்தையும் கொண்டு இப்போது கோவில் நுழைவுக்கு ஆதரவுதேட எவரும் வரவில்லை என்பதும் கோவில் நுழைவு பிரசாரத்தின் உபன்யாசங்களையும் எடுத்துக்காட்டும் ஆதாரங்களையும் பார்த்தால் நன்றாய்விளங்கும். மற்றெதற்கென்றால் "மதத்தில் மதசாஸ்திரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் கோவில் நுழைவை ஆட்சேபிக்க இடம்இல்லை" என்றுதான் சொல்லப்படுகின்றது. ஆகவே மதத்தில் மதசாஸ்திரத்தில் ஆட்சேபணை இருந்தால் அவர்கள் கதி என்ன ஆவது என்பதை சிந்தித்துப்பாருங்கள். மதத்தையும் மதசாஸ்திரத்தையும்பற்றி பேசி அடைகின்ற ஆதரவு நாணயமானதென்றோ, நிலைக்கக்கூடியதென்றோ நாம் ஒருக்காலும் சொல்லிவிடமுடியாது. ஏனென்றால் "இந்து மதத்தில்" ஆதரவு இருக்கின்றதா இல்லையா என்பது சுலபத்தில் முடிவுகட்டக்கூடிய காரியமல்ல ஏனெனில் இந்துமதம் என்று ஒருமதமுண்டா? அதற்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட சாஸ்திரமோ ஆதாரமோ உண்டா என்பதுபோன்ற விஷயங்களும் விவகாரங்களும்யாவரும் அறிந்ததேயாகும். ஆனால் ஒரு சிலரின்

நன்மைக்கு ஏற்ற விதமாகமாத்திரம் சௌகரியத்திற்கு தக்கபடி சமயத்திற்குத்தகுந்தபடி ஆதாரங்கள் தேடலாம், வியாக்கியானங்கள் செய்துகொள்ளலாம் என்கின்ற சௌகரியம் மாத்திரம் இந்துமதம் என்னும் பேரால் இருந்து வருகின்றது. இந்த சௌகரியமும், சந்தர்ப்பமும் தீர்ந்தபிறகு எப்படிவேண்டுமானாலும் ஆதாரம் கிடைக்கக்கூடும். எப்படி வேண்டுமானாலும் வியாக்கியானம் செய்யலாம். ஆதலால் இந்த ஆதாரவைக்கொண்டு கோயிலுக்குள் நுழைய விடுவதென்பது ஆபத்தானதென்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் இருத்தல் வேண்டும்.

சாதாரணமாய் தீண்டாமை முதலிய ஜாதி வித்தியாசத்திற்கு அஸ்திவாரமாய் இருப்பது பொருளாதாரத் தத்துவமேயாகும். பொருளாதார வித்தியாச தத்துவத்திற்கு ஆதாரமாய் இருப்பது மதமேயாகும். இந்த இரண்டும் இருக்கிறவரை ஒற்றுமைக்குறைவும், தீண்டாமைத்தன்மையும் ஏதாவது ஒரு வேஷத்தில் இருந்துகொண்டுதான் இருக்கும். தீண்டாமை முதலிய ஜாதி வித்தியாசமானது ஏதோ முட்டாள் தனத்தினால் ஏற்படுத்தப்பட்டது என்று சொல்லுவது ஒரு காலும் ஒப்புக்கொள்ள முடியாது. மற்றென்னவெனில் அது மிகவும் பொருளாதாரத்தை அடிப்படையாகக்கொண்ட முன் ஜாக்கிரதையான சுயநல அயோக்கியத்தனத்தினால் ஏற்படுத்தப்பட்டதாகும். அந்நிலை கட்டுப்பாடாகவும் நிலையாகவும் இருப்பதற்கே சாஸ்திர ஆதாரங்களும் மதக்கோட்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டவைகளாகும். அன்றியும் இன்றையதினம் நமது நாட்டில் தீண்டாமையும், ஜாதி வித்தியாசமும் செய்யும் கொடுமையின் பயனெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பெரிதும் பொருளாதாரக்கொடுமையை விளைவிப்பதல்லாமல் மற்றப்படி 'கடவுள்தரிசனமும் மோட்ச சாதனமும்" கிடைக்காமலிருப்பதல்ல. அப்படிப்பட்ட, அதாவது பொருளாதாரத்துறையில் கொடுமைபடுத்தப்பட்ட மக்களுக்கு கோவில்களில் உள்ள கடவுள் தரிசனத்தால் என்ன பயன் கிடைக்கக்கூடும்? ஏதோ அவர்கள் பாடுபட்டு சம்பாதித்த சிறிது பொருளையும் கோவிலுக்குகொண்டு போய் கடவுள் தரிசனை என்னும் பேரால் தொலைத்துவிட்டு அடிமைத்தன்மையையும் பொருப்பற்ற தன்மையையும் பெறுவதைத்தவிர வேறு என்னலாபம் அடையக்கூடும்? ஆகவே இந்த கோவில் நுழைவு பிரசாரம் இப்போது கடவுள் பிரசாரத்துக்கும் மதப்பிரசாரத்துக்கும், சாஸ்திர புராணபிரசாரத்திற்கும்தான் அஸ்திவாரமாக பயன்படுகின்றது என்பதே நமது அபிப்பிராயம்.

நம்மைப்பொருத்தவரை நாம் "கோவில் பிரவேசம்" என்பதற்கு அநுகூலமாகத்தான் இருக்கின்றோம். எதற்காக என்றால் உயர்வு தாழ்வு மேல் ஜாதி, கீழ் ஜாதி என்பவற்றை நிலைநிறுத்தவும் மக்களுக்குள் கொள்வினை, கொடுப்பினை, உண்பன, தின்பன ஆகியவை இல்லாமல் பிரித்து வைக்கவும் அவற்றை அனுபவத்தில் நடத்தவும் நிலை நிறுத்தவும் ஏற்பட்ட பலசூழ்ச்சிஸ்தாபனங்களில்கோவில்பிரவேசதடுப்பும்கோவிலுக்குள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பலவித்தியாசங்களும் முக்கியமானவைகளில்ஒன்றுஎன்பதாகத்தான் கருதியிருக்கிறோம். ஆதலால் அவற்றை ஒழிக்க கோவில் நுழைவு தடுப்பும் வித்தியாசங்களும் அழிக்கப்படவேண்டியது அவசியமாகும். ஆனால் அது பக்திக்காக என்றும் கடவுள் தரிசனைக்காகவென்றும் சொல்வதையும் அதன் பேரால் மதம், சாஸ்திரம், புராணம் ஆகியவைகளை பிரசாரம் செய்து மக்களுக்கு மூடநம்பிக்கையை உண்டாக்க முயற்சிப்பதையும் கண்டிக்காமல் இருப்பதற்கில்லை. ஒற்றுமை என்னும் விஷயத்திலும் மதம்மதவித்தியாசம்என்பவைகள் உள்ளவரை இருசமூகத்திற்குஉண்மையான ஒற்றுமை என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. "சுயராஜ்யம்" என்பது கிடைத்து விட்டாலும் உண்மையான ஒற்றுமை என்பது ஏற்பட்டு விடாது.

உதாரணமாக இன்றையதினம் துருக்கியும் "சுயராஜ்யம்" பெற்ற நாடு, கிரீஸ் தேசமும் "சுயராஜ்யம்" பெற்ற நாடு. இருநாடுகளுக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தால் கிரீசில் இருந்த இஸ்லாமியர்கள் பத்து லக்ஷக்கணக்காய் துருக்கிக்கு துரத்தப்பட்டு விட்டார்கள், துருக்கியிலிருந்த கிறிஸ்தவர்கள் பத்து லக்ஷக்கணக்காய் கிரீசுக்கு குடி ஏறி விட்டார்கள் ஆனால்இதற்கு சமாதானம் "அவர்கள் துரத்தப்படவில்லை தானகவே அவரவர்கள்தேசத்திற்கு ஓடி விட்டார்கள்" என்று சொல்லக்கூடும். எப்படியிருந்தாலும் அபிப்பிராய பேதமேற்பட்ட காலத்தில் மதம் காரணமாய்சொத்து சுகங்களை விட்டுவிட்டு, பெண்டு பிள்ளைகளுடன் நாட்டை விட்டுஓடும்படியாய் ஏற்பட்டு, இன்று சாப்பாட்டிற்கில்லாமல் பட்டினியாய் கிடந்து தவிக்க நேரிட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

மற்றும் சில "சுயராஜ்ய" நாடுகளிலும் கத்தோலிக்கர்களுக்கும் புராட்டஸ்டெண்டுகளுக்கும் அபிப்பிராயபேத மேற்பட்டு பல கொடுமைகள் அடைந்து வருகிறார்கள். இவற்றிற்கெல்லாம் அன்னிய ஆட்சி இருந்து கலகங்களையும் அபிப்பிராய பேதங்களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றதென்றே சொல்லிவிட முடியாது.

ஆகவே மக்களுக்குள் உண்மையான ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால் தீண்டாமை நீங்கி உண்மையான சமத்துவம் ஏற்படவேண்டுமானாலும் மதங்கள் ஒழிந்து பொருளாதாரத்துறையில் மக்கள் எல்லோருக்கும் சமத்துவம் இருக்கும்படியான ஏற்பாடுகளுக்கு ஏற்ற காரியங்கள் செய்யப்பட்டாலொழிய மற்றெந்த வழியாலும் சாத்தியப்படக்கூடியதில்லை என்றே சொல்லுவோம்.

எனவே அதை விட்டுவிட்டுஒற்றுமை மகாநாடுகளுக்கும்கோவில் நுழைவு பிரசாரமும் செய்வது முற்கூறியபடி இந்து மதப்பிரசாரமும் சாஸ்திர புராண பிரசாரமும் என்று தான் சொல்லவேண்டியிருக்கின்றது. இம்மாதிரி பிரசாரங்களால் நாட்டிற்கோமனித சமூகத்திற்கோ ஒரு நன்மையையும் செய்து விடமுடியாது. இருசமூகங்களிலும் மேல் நிலையில் உள்ள அதிகாரம் பதவி பட்டம் செல்வம் ஆகியவற்றில் பற்றுக்கொண்ட சில மக்களை திருப்தி செய்யலாம். அவர்கள் சிறிது நாளைக்கு பாமர மக்களை ஏமாற்றி அடக்கி வைக்கலாம். இவ்வளவு தானே ஒழிய சமூக சமத்துவத்தையோ சமூக ஒற்றுமையையோ பொருளாதாரசமத்துவத்தையோ நிலைநிறுத்தி விடமுடியாது.

அரசாங்கத்தாரும் தங்கள் சுயநலத்தை உத்தேசித்து இந்த தந்திரங்களுக்குஉடந்தையாய் இருந்து தங்களது இரட்டைப் பங்குக்கு மோசமில்லாமல் நடந்து கொள்ளலாம். அரசாங்க கொள்கையெல்லாம். தாழ்த்தப்பட்டமக்களும், ஏழைத்தொழிலாளிகளும் கிளர்ச்சி செய்யும்போது 'படித்தகூட்டத்தையும்பணக்காரர்களையும் ஆதரிப்பதற்கும்காப்பாற்றுவதற்கும்நாங்கள்இங்குஇருக்கவேண்டியதாய் இருக்கிறது" என்று சொல்லுவதும், படித்த மக்களும்பணக்காரர்களும் கிளர்ச்சி செய்யும் போது "பாமர மக்கள் நன்மைக்காக நாங்கள் இருக்க வேண்டியதாயிருக்கிறது" என்று சொல்லுவதுமான தந்திரங்களை அனுசரித்தே ஆட்சி நடத்தவேண்டியவர்கள் ஆகிவிட்டதால் அவர்கள் யாருக்கு எவ்வளவு பங்கு எதில் வேண்டுமானாலும் கொடுக்க சம்மதித்து தங்கள் பங்கை பெருக்கிக்கொண்டு வருகிறார்கள்.

எனவே தேசியமும், ஒற்றுமையும், அரசாங்கமும், சீர்திருத்தமும் பொருளாதாரத்திலும் சமூக வாழ்விலும் சமத்துவமில்லாமல் இழிவு படுத்தப்பட்ட மக்களை அந்நிலையிலேயே நிலைநிறுத்திமேல் நிலையில் இருந்து வாழக்கருதும் சோம்பேறிகளுடையவும் செல்வவான்களுடையவும் அரசாங்கங்களுடையவும் சூட்சிகளேயாகும்.

தோழர் R. K. S.

தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்களின் மனைவியார் காலமானதைக் கேட்டு வருந்துகிறோம். இயற்கையை செவ்வனே உணர்ந்த தோழர் ஷண்முகத்திற்கு ஆறுதல் கூறத்தேவையில்லையென்றே கருதுகிறோம்.

செனட் தேர்தல்.

தோழர் ஆர். நஞ்சையா.

கோவை தோழர் ஆர். நஞ்சையா அவர்கள் செனட் சபை தேர்தலுக்கு ஒரு அபேட்சகராக நிற்கின்றதாக அறிகின்றோம். அன்னவர் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக்கொண்டவர் என்பதும், கூடியவரை இயக்கத்திற்கு தொண்டாற்றி வருபவர் என்பதும் யாவரும்அறிந்ததேயாகும். அவர் கோவை முனிசிபல் கவுன்சிலிலும் அங்கம் பெற்று தொண்டாற்றி வருகின்றார்.

இது எப்படியிருந்தபோதிலும் அவர் இந்திய மக்கள் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட கொடுமைப்படுத்தப்பட்ட வகுப்பில் ஒன்றாகிய சக்கிலிய வகுப்பைச் சேர்ந்தவர் ஆதலால் அன்னவரின் முயற்சிக்கு மக்கள் அவசியம் ஆதரவளித்து அவரை அந்தஸ்தானத்திற்கு அனுப்பவேண்டும் என்பது நமது விருப்பமாகும்.

ஈ. வெ. ராமசாமி.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களும் அவர் மனைவியாரும் 19—11—32 தேதி இரவு புளுமவுண்டன் எக்ஸ்பிரசில் தோழர் வி. பார்த்தசாரதி அவர்களுடன் சென்னை செல்கிறார். 23 தேதி வாக்கில் ஈரோட்டிற்குத் திரும்புவார்.

துருக்கி நாட்டில் மாதர் முன்னேற்றம்.

முஸ்தபா கமால்பாக்ஷாவின் சீர்திருத்தங்கள்.

(ஆசிரியர் கே. குறாகர்)

முஸ்தபா கமால் பாக்ஷா செய்த சீர்திருத்தங்கள் காரணமாக துருக்கி நாட்டின் சமூக வாழ்க்கையில் பெரியதோர் மாற்ற மேற்பட்டுவிட்டது. இத்தகைய சீர்திருத்தங்களில் துருக்கிப் பெண் மக்களின் விடுதலையே பிரதானமாகும்.

பல நூற்றாண்டுகளாக முஸ்லீம் மத சிரேஷ்டர்கள் முஸ்லீம் மாதர் விடுதலைக்கு எதிரிடையாகப் பிரசாரஞ் செய்து வந்திருக்கின்றனர். இவர்கள் பெண்கள் எப்பொழுதும் ஆண்களுக்குக் கட்டுப்பட்டு அல்லது அடிமைப்பட்டிருக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். இதற்கு ஆதாரமாகப் பல பொருளாதார காரணங்களையும் எடுத்துக்கூறியிருக்கின்றனர். உதாரணமாக முஸ்லீம் குடும்பவேலைகளைப் பலவகையாகப் பிரித்து அவற்றை எளிதில் செவ்வனே செய்து முடிப்பதற்குப் பல தாரங்கள் கொள்வதே சிறந்த முறையென எடுத்துரைத்தனர்.

எனினும், பெரும்பான்மையான முஸ்லீம்கள் மேனாட்டினருடன் நெருங்கிப் பழகிய பின்னர் பெண் மக்களை அடிமைப்படுத்தி வைப்பதினாலேற்படக்கூடிய கெடுதிகளை நன்கு தெரிந்துகொண்டனர். பெண்கள் ஆண் மக்களின் சகவாசமின்றித் தனியே வாழ்ந்துவந்த போதினும் தங்கள் வீட்டில் செல்வாக்குடையவர்களாயிருந்து வந்தனரென்பதை மறுத்தற்கில்லை. பிள்ளைகளை வளர்ப்பதில் இப்பெண்கள் விசேஷ சிரத்தையெடுத்துக்கொண் ட ன ர். எனினும் அடிமைப்பட்ட ஓர் தாய் தன்னுடைய குழந்தையை மனோ பலமுடைய பிள்ளையாக வளர்க்க முடியாதென்பது அனுபவங்கண்ட உண்மை. இத்கைய தாய்மார்கள் வளர்க்கும் குழந்தைக்கு பின் காலத்திலும் அதாவது வாலிபப்பருவத்திலும் குழந்தைப் புத்தியே மிகுந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. எனினும் ஒவ்வொரு முஸ்லீமும் பல பெண்களை மணந்து அவர்களை ஹேறம் அல்லது அந்தப்புறத்தில் வைத்திருந்ததாகக் கூறுவது வெறுங்கட்டுக்கதையேயாகும். முஸ்லீம்களில் பெரும்பான்மையோருக்கு ஒரு மனைவியுடன் காலங்கடத்துவது கஷ்ட சாத்தியமான காரியமாயிருக்கின்றது. முக்காடிட்ட ஓர் முஸ்லீம் மாது தன் கணவனுக்குச் சரியான துணைவி அல்லது நண்பராக இருக்க முடியாதென்பது உறுதி.

நவீன துருக்கி

முஸ்தபாகமால் பாக்ஷா 'பெண்கள் பிரச்னையைத் தமது சீர்திருத்தங்களினால் தீர்த்து விட்டார். துருக்கிப்பெண்கள் சம்பூரண விடுதலையடைந்தனர். இதுகாரணமாக பெண்கள் இப்பொழுது ஆடவர்களுடன் பல துறைகளிலும் தீவிரப்போட்டியிட்டு வருகின்றனர். இது மட்டுமல்ல; துருக்கியில் இப்பொழுது தேசியப் புனருத்தாரண வேலை பலமாக நடைபெற்று வருகின்றது. இவ்வேலை துருக்கியப்பெண்களின் ஒத்துழைப்பின்றி வெற்றிகாண்பது அருமையென்பதைச் சொல்லத் தேவையில்லை.

துருக்கி ஸ்தானக்துப் பத்திரிகைகளெல்லாம் பெண்களுக்கெனப் பிரத்தியேகமாகப் பக்கங்கள் ஒதுக்கி வைத்திருக்கின்றன; மேனாட்டுப்பத்திரிகைகளைப் போன்று அழகுப்போட்டி உற்சாகமளித்து வருகின்றன. கமால் பாக்ஷாவின் சீர்திருத்தம் பெண்கள் எத்துறையிலு மிறங்கி வேலைசெய்ய இடமளிக்கின்றது. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. இதன் அவசியத்தை விரித்துரைப்பது அனாவசியம், ஒவ்வொரு துரையிலும் வேலைசெய்யும் பெண்கள் ஒவ்வொரு சங்கத்தை ஏற்படுத்தித் தங்கள் நலவுரிமைகளைப் பாதுகாத்து வருகின்றனர். சகல தேகாப்பியாச விளையாட்டுகளிலும் பெண்கள் கலந்து கொள்கின்றனர். கமால் பாக்ஷாவின் சீர்திருத்தத்திற்கு முன்னர் இத்தகைய தேகப்பயிற்சி விளையாட்டுகளைத்துருக்கிப்பெண்கள் கனவிலுங் கருதியிருக்க மாட்டார்கள். தேகபலமுடைய மாதர்கள் தேகபலமுடைய பிள்ளைகளைப்பெற்றெடுப்பார்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

பர்தா முறை

பெண்களைத் திடீரென விடுதலை செய்து விட்டதினால் வாழ்க்கையில் சில கஷ்டங்கள் ஏற்படுவது இயற்கையேயாகும். உயர்ந்த வகுப்பு பெண்களின் கணவர்கள் அநேகமாய் மேனாட்டுக்கல்வி பயின்றவர்களாகையால் அப்பெண்கள் இத்தகைய சீர்திருத்தங்களினால் மிகவே கஷ்டப்படவில்லை யெனக் கூறலாம். ஆனால் மத்திய வகுப்புப் பெண்களிலோர் பகுதியாருக்குச் சீர்திருத்தத்தினால்சங்கடமேற்பட்டதில் ஆச்சர்யமில்லை.

துருக்கி, அரேபியா ஆகிய நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்குச் சென்று கல்வி பயின்று திரும்பியவர்கள் பெண்கள் விடுதலைக்காகப் பெருமுயற்சி யெடுத்துக்கொண்டார்களென்பது உண்மை. ஆனால் இவர்கள் முயற்சி வெற்றியளிக்கவில்லை. இது ஒருபுறமிருக்க, ரஷ்யாவிலுள்ள "தார்தார்" என அழைக்கப்படும் முஸ்லீம் பெண்களும், வடஆப்ரிகாகேசியாவிலுள்ள முஸ்லிம் பெண்களும் பர்தா முறையை நீண்டகாலமாக ஒழித்து விட்டனர். இப்போது இவர்கள் முக்காடுடன் வெளியேறுவதை வெறுப்பார்கள் என்பதில் தடையில்லை. முக்காடிட்டுக்கொள்வதினால் அல்லது முக்காட்டை நீக்கி விடுவதினால் யாதொரு அவசங்கையுமேற்பட்டுவிடப் போவதில்லை. முக்காடிட்டுக்கொள்ளும் வழக்கம் சில இடங்களில்பழக்கவழக்கத்தைப் பொறுத்ததாகவுமிருக்கின்றது. முஸ்லீம் நாடுகளின் எல்லைப்புறங்களிலுள்ள கிறிஸ்துவ கிராமப் பெண்களும் முகத்தை முக்காடிட்டுக்கொள்ளும் வழக்கத்தை இன்னும் அனுஷ்டித்து வருவதைக்காணலாம்.

பெண்களை அந்தப்புரத்தில்அடைத்து வைப்பதனால் அவர்களின் சுதந்தரம் நீங்கிவிடவில்லை யென்பதாக முஸ்லிம் குருக்கள் விவாதிக்கின்றனர். சோதனைக்கு ஆளாகவிடாமற் தடுப்பதற்காகவே பெண்களை அந்தப்புறத்தில் இருத்தி வைத்திருப்பதாக அவர்கள் காரணங்கூறுகின்றனர். ஆனால் இக்காரணங்கள் ஒப்புக்கொள்ளத் தகுந்ததல்ல. முஸ்லிம் பெண்கள் தாழ்ந்த நிலைமையிலிருப்பதற்கு அவர்கள் அடிமை வாழ்க்கையே காரணமென்பதை மறுப்பவர் வெகு சிலரேயாகும். பெண்கள் விடுதலையினால் பிற்கால சந்ததியார் பெரும் பயன் எய்துவார்களென்பது திண்ணம்.

விலங்கு முறிந்தது,

மகா யுத்தத்திற்கு முன்னர் ஐரோப்பிய மேற்றிசை நாடுகளில் பெண்கள் இயக்கம் ஆரம்பமாகி விட்டது. இது காரணமாக நாளடைவில் பெண்கள் ஆண்களோடு ஒத்துழைக்கவும் பல துறைகளில் அவர்களுடன் போட்டி போடவும் தலைப்பட்டு விட்டனர். யுத்த காலத்தில் முஸ்லிம் பெண்கள் சுகந்த வாசனையை நுகர்ந்திருக்கமாட்டார்கள். விடுதலையின் அனுகூலங்கள் அவர்களுக்குத் தெரியாது. இது காரணமாக அவர்கள் ஈன்றெடுத்து வளர்த்த மக்கள் நெஞ்சிலுரமின்றித் தவிக்கின்றனர். இதை உள்ளூற உணர்ந்த நிலையில் முஸ்தபா முதல்முதல் பெண்களுக்கு விடுதலையளிப்பதில் விசேஷகவனஞ் செலுத்தினர். இதுகாரணமாக இப்பொழுது பெண்களும் ஆண்களும் சமவுரிமையுடையவர்களாய்த் திகழ்கின்றனர். இன்னும் நவீன துருக்கியில் பெண்களுக்குப் பலவித உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. பெண்கள் தங்கள் இஷ்டம்போல் கணவர்களைத் தெரிந்துகொள்ளலாம் அவர்களுக்குப் பிரத்தியேக சொத்துரிமையுமுண்டு. இத்தகய சுதந்தரம்படைத்த பெண்கள் நாட்டின் அபிவிருத்தியின் பொருட்டு விசேஷஊக்கமெடுப்பார்களென்பதில் சந்தேகமில்லை. "தினகரன்"

தோழர்கள் புறப்பாடு.

தோழர்களான அ. இராகவன் அவர்கள் கோயமுத்தூருக்கும், சி. நடராஜன் அவர்கள் மாயவரத்திற்கும், சாமி சிதம்பரனார்-சிவகாமி சுப்பையா—விசாலாட்சி அவர்கள் காரைக்குடிக்கும் 19—11—32-ந்தேதி இரவு ஈரோட்டிலிருந்து சென்றுவிட்டார்கள்.

ஐ. சி. எஸ். போட்டிப் பரீக்ஷை.

17—11—32 தேதிய கவர்ன்மெண்டு அறிக்கை கூறுவதாவது:—

இந்தியன் சிவில் சர்விஸ் உத்தியோகத்திற்கு அபேட்சகர்களைத்தேர்ந்தெடுக்கும் போட்டிப் பரீக்ஷை வருகிற 1933 வருஷம்-ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் லண்டனில் நடைபெறும்.

(2) 1933 வருஷம் ஆகஸ்டு மாதம் 1-தேதி ஒவ்வொரு அபேட்சகரது வயதும் 21க்கு குறையாமலும் 24க்கு மேற்படாமலுமிருக்கவேண்டும்.

(3) அபேட்சகர்களுக்கு விண்ணப்ப நகல்கள சென்னை, கல்வி இலாகா டைரக்டரிடமிருந்து கிடைக்கப்பெறலாம்.

(4) அபேட்சகர்களிடமிருந்துவிண்ணப்பங்கள் கீழ்கண்டவிலாசத்தாருக்கு 1933 வருஷம் மே-மீ 8தேதியோ, அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும்படி எழுதியனுப்பப்படவேண்டும்.

Secretary, Civil Service
Commission, Burlington
Gardens, London, W. 1.

'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை ஆசிரியர்- வி. நைறன்.

வருஷ சந்தா—2—8—0

விலாசம்
சமத்வபோதினி
டிக்கோயா
சிலோன்.

திருத்தம்.

13-11-32ல் வெளிவந்த குடிஅரசு பத்திரிகையின் 3-ம் பக்கம் 4-வது காலத்தில் "வரவேற்பு" என்ற தலைப்பின் கீழ் இரண்டாவது வரியில் "ராமநாதபுரம் திருநெல்வேலிஜில்லா" என குறிப்பிட்டிருப்பதை "ராதாபுரம் டிவிஷன் திருநெல்வேலி ஜில்லா" என்று திருத்திக்கொள்ளவும். ப—ர்.

நாடார் கல்வி மகாநாடு.

சென்னையில் 14-வது நாடார் மகாநாடு நடக்கும் தினங்களில் கல்வி முன்னேற்றத்தை ஆலோசிப்பதற்கென்று தனியாகக்கல்வி மகாநாடு ஒன்று நடைபெறும். அதற்கு பிரபல தனிகரும், நாடார் ச்மூக அபிமானியுமான தோழர் கே. ஏ. எம். ஏ. காளியப்ப நாடார் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுசமயம் பல முக்கிய விஷயங்கள் ஆலோசிக்கப்படும்.

(ஒரு நிருபர்)

புதுப்பாளையம்
பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல்.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டு ஆபீசில் 16—11—32 மாலை 2-மணிக்கு சங்கம் தாலூக்கா போர்டு தலைவர் எம். பி. ரங்கசாமி ரெட்டியார் எம். எல். சி. அவர்கள் தலைமையில் தலைவர் தேர்தல் நடைபெற்றது 9-மெம்பர்கள் ஆஜராகி இராஜவிசுவாசப்பிரமாணம் எடுத்துக்கொண்ட பின்னர் எஸ். குப்புசாமி செட்டியார் அவர்கள் ஏகமனதாக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிறகு 3-மணிக்கு நடந்த கூட்டத்தில் தோழர் பி. ஆர். குப்புசாமி அவர்கள் உப தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். (ஒரு நிருபர்)

புதுப்பாளையம்
ஆதிதிராவிடக்கூட்டம்.

இவ்வூர்மைதானத்தில் 15-11-32 மாலை 6-30 மணிக்கு தாலூக்கா போர்டு அங்கத்தினர் தோழர் பி. ஆர். குப்புசாமி அவர்கள் தலைமையில் ஷை கூட்டம் நடைபெற்றது. செங்கம் தோழர் சி. நாராயணன் வில்லியம்ஸ் அவர்கள் ஆதிதிராவிடர் முன்னேற்றத்தைப்பற்றி 1-மணி நேரம் சொற்பொழிவாற்றினர். பின்னர் இவ்வூர் ஆதிதிராவிடர் முன்னேற்ற சங்கம் ஒன்று தோழர் நாராயணன் வில்லியம்ஸ் அவர்களால் ஏற்படுத்தப்பட்டு அச்சங்கத்திற்கு தோழர் பி. ஆர். குப்புசாமி அவர்கள் தலைவராகவும், அப்துல் அஜீஸ் அவர்கள் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிறகு இரவு 8-மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது. (ஒரு நிருபர்)

செனட் தேர்தல்.

கோவை முனிசிபல் கவுன்சிலர் தோழர் ஆர். நஞ்சையா அவர்கள் எழுதுவதாவது:—

கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள முனிசிபாலிடிகளினால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய செனட் அங்கத்தினர் பதவிக்கு நான் ஒரு அபேட்சகராக நிற்கிறேன். நான் கோவை முனிசிபல் சபையில் தாழ்த்தப்பட்டார் சமூகப்பிரதிநிதியாக நியமனம் பெற்றவன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயமுத்தூர்
தேவாங்க சிறுவர் சபை.

மேற்படி சங்கத்தில் 13-11-32-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7-மணிக்கு ஜனாப் ஏ. கே. அப்துல் ரஹீம் சாஹிப் பகதூர் அவர்கள் தலைமையில் நடந்த விசேஷ பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் முனிசிபாலிடியார் ஆண்பிள்ளைகளுக்கு கட்டாய இலவச ஆரம்பக்கல்வி விஷயமாக விடுத்த நோட்டீசைப்பாராட்டி பெண்மக்களுக்கும் இலவச படிப்பு முறை விரைவில் கொண்டுவரவேண்டுமென்றும் இன்னும்பல தீர்மானங்கள் நிறைவேறியது. (ஒரு நிருபர்.)

தென்மாப்பட்டு
வைக்கம் வீரர் வாசக சாலை.

இவ்வூர் வைக்கம்வீரர் வாசகசாலையின் சார்பில், ஐப்பசிமாதம் 22ந்தேதி திங்கட்கிழமை மாலையில், ஓர் பொதுக்கூட்டம் வாசகசாலை முன் கூடியது. வாசகசாலை உறுப்பினரான தோழர் ஆ. குமாரசாமி அவர்கள் தலைமை வகித்தார். இவ்வூர் சமதர்ம செந்தமிழ்க் கலாசாலை ஆசிரியர், தோழர், சி. முருகன் தீண்டாமை விலக்கு என்னும் பொருள் பற்றியும், தேச ஊழியர், தோழர், என். எஸ். கணபதி சுதேசியம், ஆலயப்பிரவேசம், என்பவை குறித்தும், நீண்ட நேரம் பேசினர். பின் தலைவர் முடிவுரைகூற, தோழர். சி. முருகன் அவர்களால் நன்றி செலுத்தப்பட்டுக் கூட்டம் இரவு 9மணிக்கு முடிவடைந்தது. (ஒரு நிருபர்)

சுயமணி உதயம்.

சுயமரியாதை இயக்க அன்பரும், சீர்திருத்த கொள்கைகளை வாய்ப்பேச்சளவிலில்லாது செய்கைளில் காட்டி வருபவருமான சென்னைதோழர் அச்சம்மாள்பார்த்தசாரதி அவர் கட்கு 5-11-32ல்பெண்குழந்தைபிறந்தது தாயும், குழந்தையும் சவுக்கியமாய் இருக்கிறார்கள். குழந்தைக்கு "சுயமணி" என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

தோறும் என்னிடம்வரும் வர்த்தகர்கள் வதங்கிய தோற்றத்தையுடைய ஆங்கில குழந்தைகளைப் போலவா இப்படத்திலுள்ள குழந்தைகள் இருக்கிறார்கள்?

அதற்கு எவ்வாறு சமாதானங் கூறுவது? இதுசிகத் திறமை வாய்ந்த மந்திரச் செயலா!

சரி. மற்றுமொரு சமாதானங் கூறலாம். நான் மந்திர வலைக்குள் அகப்பட்டுக் காணுவதைக் கண்டதாக எண்ணிக் கொண்டேன் என்று கூறலாம். இதாலொத்துக் கொள்ளக் கூடிய ஒருநியாயம்போலத் தோற்றும். ஆனால், அதை அக்கீகரிப்பதற்கும் கஷ்டங்கள் இருக்கின்றனவே

மனோவசியம்

மனோவசிய தந்திரத்தில் வல்லவர்கள் யாராவது மறைந்திருந்து தங்கள் தந்திரத்தைச் செய்திருக்கக் கூடும். அப்படியானால், மிக அற்பமான பொருள்களையும் மிகமிக அழகுவாய்ந்த பொருள்களாக அதிசயிக்கத்தக்க விதமாகக் காட்டுவதும் அவர்களால் எளிதில் செய்யக்கூடிய தொன்றல்லவா? அப்படி. ஏன் அவர்கள் செய்து கொள்ளவில்லை?

அங்குள்ள பெண்கள் எல்லோரையும் அழகான பெண்களாகத் தோன்றும்படிசெய்திருக்கலாம். நபர்களின் காலசப்பாத்துக்களை யெல்லாம் புதிதாகத் தேற்றும்படி செய்திருக்கலாம். கடைகளுக்கெல்லாம் புதியவர்ணந்திட்டிய தோற்றத்தைச் கொடுத்திருக்லாம். டிராம் வண்டிகளில் அதிகஜனங்கள் நெருங்கியிராமல் அளவுக்கேற்ற விதமாக இருக்கும்படி செய்திருக்கலாமே!

தோழர். வெஸ்ட்கார்தைக்கண்டு நான் இரங்குகிறேன். அது அவருடையகுற்றமல்ல' அவர்ருஷியாவிலிருந்து திரும்பினர். "ருஷியாவில்மக்கள் எல்லோரும் பட்டினியால் வாடுகின்றார்கள்; அடிமைவாழ்க்கை அங்குஅதிகமாக இருக்கிறது" என்பனபோன்றகதைகளை நம்புவதற்குப் பலர் தயாராக இருந்தார்கள். நான் எதை எற்பது? நான் என் கண்ணால் கண்டவைகளையா; அல்லது கம்யூனிஸ்ட்களுக்குமாறான கொள்கையையுடையவர்கள் விருப்பத்துக் கேற்பக் கூறும் தோழர். வெஸ்ட்கார்டின் பொய்க்கதைகளையா? வாசகர்களில்சிலர் கஷ்டமில்லாதவழியையே கைக்கொண்டு விடுவார்கள் என்பது எனக்குத்தெரியும்.

என்னளவில் நான் இவ்வாறு சந்தேகிக்கின்றேன். தோழர். வெஸ்ட் கார்ட்டின் அளவுப் பிரமாணம் எனது அளவுப் பிரமாணத்தைக் காட்டிலும் அதிகமானதாக இருக்கலாம். அதனாலேயே அவருக்கு அவ்வாறும் எனக்கு இவ்வாறும் தோன்றியிருக்கலாம்.

ஆனால், தற்போது நாம் இந்நாட்டில் அநுபவித்து வரும் கஷ்டங்கள் உணர்ச்சியுள்ள மக்களுக்குக் கண்ணீர் வரும்படி செய்யக் கூடியவைகளாக இருக்கின்றன என்பதை அவர் உணரவேண்டும்.

நார்ஜிஹான்.

திருமயம் சுயமரியாதைத்தோழர் ராம சின்னையா அவர்களுக்கு 12—11—32 இரவு 12 மணிக்கு பெண் குழந்தை பிறந்தது. குழந்தையின் தாயார் தோழர் பொன்னழகு அவர்களால் குழந்தைக்கு நார்ஜிஹான் என்ற பெயர் இடப்பட்டது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

மரணம்.

சுயமரியாதை இயக்கத்தோழர் ஆர். கே. சண்முகம் பி. ஏ பி. எல். எம். எல். ஏ. அவர்களி மனைவியார் தோழர் ஐயம்மாள் அவர்கள் சென்ற 6மாதகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற 13·11-32ந்தேதி உயிர்துறந்தாரென ஒரு நிருபர்எழுதுகிறார்.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—9.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

Read.

The 'Citizen'

and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

நடத்தப்போகிறீர்களா" என்று கேட்கின்றேன். இதற்கு விடையாக நீங்கள் யாவரும் எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்காதிருந்தும் நமது மாபெரும் பத்திரிகையாகிய "குடி அரசு" ஒருவாராக தனது அபிப்பிராயத்தை தெரிவித்துள்ளது. அதனை உங்கள் முன் விசாரித்தறிவதற்கு முன் சேலம் மகாநாட்டிற்கு பிறகு நாஸ்திக விஷயமாக நடந்த சம்பவங்களை முன்னிட்டும் நமது இயக்கத்திற்கு இடையூறுகள் செய்யப்போகும் சில மதஸ்தாபனங்களின் அபாயமான செய்கைகளைக்குறித்தும் மதநடுநிலைமையை அரசியல் திட்டமாகச் செய்துள்ள வட்டமேசை தீர்மானத்தைக்குறித்தும் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய எச்சரிக்கையை இங்கு குறிப்பிடுவோம்.

முதலாவது, மதங்கள் மதக்கொள்கைகள் எவ்வளவு மூடப்பழக்கமாய் இருந்த போதிலும் அவை காக்கப்படுமென்று காங்கிரசும், ஆங்கில பிரிட்டிஷ் ராஜாங்கமும் திட்டம் செய்துள்ளார். அதாவது நாம் கொண்டுள்ள கோரிக்கையாகிய மதங்கள் ஒழிய வேண்டுமென்பதற்கு நேர்விரோதமாக மதநடுநிலைமைத்திட்டம் ஏற்பட்டுள்ளது. அந்த திட்டத்தின் கருத்தின்படியே நமது இயக்கத்தை எந்த காலத்திலாவது தடுத்துவிடக்கூடும். இந்த அபாயம் நமது இயக்கத்திற்கு இருந்துகொண்டே இருக்கின்றது. அந்தக்காலத்தில் அவ்வித தடையைத்தடுக்க நமக்கு என்ன ஆதிக்கமிருக்கப் போகின்றது என்று கேட்கின்றேன்? அந்த அபாய காலம் வரும்போது நமக்கு யார் துணையாக நிற்கப்போகின்றார்கள் எனவும் கேட்கின்றேன்?

இரண்டாவது' வரப்போகும் சைமன் திட்டத்தில் (Simon-Reform) இந்துமத சபையும், இஸ்லாம் மதசபையும் சட்டசபைகளிலிருந்து தத்தம் மதங்களை நிலைநிறுத்த வாதாடப் போகின்றனர். தங்கள் மதங்களுக்கு யாதொரு கெடுதி வராமல்படிக்கு திட்டங்களை தேடப் புகுவார்கள். அந்த காலத்தில் நமது இயக்கத்தை அடக்கஅரசியல் துறையில் அடக்க முயற்சிப்பார்கள். அந்த சமயத்தில் நமக்கு சட்ட சபைகளில் துணைநிற்பார் யார் எனக்கேட்கின்றேன். சட்டசபைகளுக்கு வெளியில் நின்றுகொண்டு வெரும் ஆட்சேபனை (Protest) யுடன் திருப்திகொள்ளப் போகின்றீர்களா வெனவும் கேட்கின்றேன்? எந்த காலத்தில் வெறும் Protest வுடன் நிற்கப்போகின்றீர்களோ, அந்த க்ஷணமே நமது இயக்கம்தன்றி விடும் என அறிக. இந்த சந்தர்ப்பத்தில் No gain without pain, கஷ்டமில்லாமல் எந்த லாபமும் இல்லை என்ற ஆங்கில முதுமொழியையும் மறவாதீர்கள்.

நமது விரோதிகளாகிய ஆஸ்திக வைதீக கூட்டத்தார் அரசியல் சபையில் நடனம் புரியுங்காலை சமதர்ம வாதிகளாகிய நாம் வெளியிலிருந்துக் கொண்டு தாளம் போடப்போக வேண்டுமா எனவும் கேட்கின்றேன்?

நமக்கு இன்னொரு அபாயமும் உண்டு. நேற்று ஜர்மனிநாட்டில் நாஸ்திக ஸ்தாபனங்களை அடக்க முதலாளிஅரசியல் சில திட்டங்களை செய்துள. அதனைத்தடுக்க அவ்வூர் சட்டசபைகளில் 56, 57, நாஸ்திக பிரதிநிதிகள் இருந்து வருகின்றார்கள். சமதர்ம செல்வாக்கில் ஜர்மனியில் அநேக Anti God கடவுளுக்கு எதிரான ஸ்தாபனங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அவைகளை ஜர்மனி ஆட்சி சபைகளில் காக்க சமதர்ம வாதிகள் நிறைந்துள்ளார் ஆனால் நமக்கு அவ்வித கஷ்டம் நேரிடும் காலை நம்மைத்தவிர நமக்கு யார்உதவி நிற்பார் எனக்கேட்கின்றேன்? அந்த வேளையில், வந்தபின்காப்போன், என்ற மீனின்கதி நமக்கும் வாராதா எனவும் கேட்கின்றேன்? இதனை தீர்க்கயோசித்து ஞாயமான தீர்மானத்திற்கு தமிழ்நாட்டு மகாநாடு கூடுவதற்கு முன் வருவீர்களென தமிழ்நாட்டு சுயமரியாதையோரை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். கடைசியாக நமது "குடிஅரசு" இதன் விஷயமாக தெரிவித்துள்ள அபிப்பிராயத்தைகவனிக்கப்பாலது இந்த அபிப்பிராயத்தை உங்கள் முன்வைத்துக் கொண்டு எந்த தீர்மானத்திற்கும் வருவீர்களென நம்புகின்றேன்.

குடிஅரசு கூறுவதாவது "ஆகையால் நமது இயக்கம் உண்மையில் ஏழைமக்கள் இயக்கமாகவே இருந்து ஏழைமக்களின் விடுதலைக்கும் சமத்துவத்திற்கும் உழைக்க வேண்டுமானால், நமது இயக்கக்கொள்கைகள் தேசமெங்கும் பரவி மக்கள் எல்லோரும் அவைகளை ஒப்புக்கொள்ளும் வரையிலும் அரசியலில் கலவாமல் வெறும் சமூகசீர்திருத்த இயக்கமாகவேஅதிக தீவிரமாகப் பிரசாரம் பண்ணிக்கொண்டு வருவதே சாலசிறந்ததென்பதே நமது இயக்கத்தலைவர்களின் கருத்தாகும்.

மற்றபடி தோழர் சிங்காரவேலு அவர்கள் சொல்லியுள்ள அபிப்பிராயங்கள் முழுதும் நமது கட்சியின் அபிப்பிராயங்களே"

முதலாவது எந்த சமூக சீர்திருத்தமாயினும், அரசியல் மூலமாகத்தான் திட்டமிடக்கூடும் "சதி" யை போக்கியதும், விதவா விவாகத்தை சட்ட சமாதான மாக்கியதும், ஜாதி இழந்தவர்களைக்காப்பாற்றிய திட்டமும், நேற்று வந்த சாரதாசட்டமும், அரசியல் ஆதிக்கத்தால் கார்யாம்சத்தில் வந்தனவேயொழிய, வெளியிலிருந்துக்கொண்டு வெறும் பிரசாரமூலமாகவே வரவில்லை. ஆதலின் இனி உண்டாகவேண்டிய மதஆசார சீர்திருத்தங்கள் யாவும் அரசியல் ஆதிக்கம் பெற்றவர்களால் தான் ஏற்படவேண்டும். நேற்றுநடந்த "ஐரிஷ் பிரமாண ரத்தான சட்டம்" ஐரிஷ் பார்லிமெண்டில் அரசியல் ஆதிக்கம் பெற்றவர்களாலன்றோ முடிவு பெற்றது? இரண்டாவது நமது எதிரிகளாகிய, இந்துமகா சபையோரும் இஸ்லாம் சபையாரும் இனிஒன்று சேர்ந்துகொண்டு மதத்திற்கு அபாயம் அபாயம் Religion in danger என்று எந்தமத சீர்திருத்தத்தையும் எதிர்த்து போராடுங்காலை சமதர்ம வாதிகளாகிய நாம் வெளியில் நின்றுஎன்ன பிரசாரம் செய்தாலும் என்ன பயன்?

மூன்றாவது நமது இயக்கமோ மதங்களை வைத்துக்கொண்டு அதன் கோட்பாடுகளை, நம்பழக்கவழக்கங்களை சீர்பாடு செய்ய மாத்திரமல்லவென்றே நினைக்கின்றேன். அப்படி அல்லாமல் மதங்களே வேறறகிளறியவேண்டுமானால் அரசியல் ஆதிக்கமின்றி என்னசெய்யமுடியும்?

நான்காவது நாம் அரசியல் ஆதிக்கம் பெறமுயன்றால் நாட்டில் சமாதான பங்கம் நேரிடுமென்றால் இப்போது நமக்கும் காங்கிரசுக்கும் மற்றும்பல ஜாதிமத கட்சிகளுக்கும் சமாதான பங்கம் ஏற்படவில்லையா வெனக்கேட்கின்றேன். ஜஸ்டிஸ் கட்சியாரும் நமது இயக்கம் போகும் நோக்கத்தை சமாதான மாகவா பார்க்கின்றார்களெனவும் கேட்கின்றேன்? எதார்த்தவாதி வெகு ஜனவிரோதி, அதற்குப்பயந்தால் எந்த காரியம் கூடிவரும்? ஐந்தாவது தேசமெங்கும் நமது பிரசாரம் பரவி எல்லாமக்களும் ஒப்புக்கொள்ளும்வரை, அரசியலில் புகலாகாதெனில் அதுஎந்தக்காலத்தில் முடிவது? எந்த இயக்கத்திலும் தலைமை வகித்தோர் வழிகாட்டியாக இருக்க வேண்டுமே யொழிய (Vanguard) எல்லோரும் ஒத்துக்கொண்டால்தான் சீர்திருத்தம் செய்யப்படுமென்பது வண்டியைகுதிரைக்கு முன்னால் பூட்டிய கதையையொக்குமன்றோ? நமது இயக்கம் அரசியல்துறையில் இறங்கி ஆதிக்கம் பெற நாட்டிலுள்ள வர்களெல்லாம் சம்பாதிக்கவேண்டுமெனில், தேர்தலில் நமது கட்சி வலுத்ததா இல்லையாயென்பது, உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல் விளங்கப்போகின்றது. தேர்தலில் (Election) சுயமரியாதைக்காரர் அரசியல் அனுபவத்தைப்பெற முடியுமே அல்லாது வெளியில் நின்றுகொண்டு மற்ற அரசியல் கட்சிக்காரர்களைக் கண்டித்துக்கொண்டிருப்பது பரிகசத்திற்கிடமாகும். சமுத்திர அலைகள் ஓய்ந்தபிறகுதான் ஸ்நானம் செய்வோமென்றால் எந்தக்காலையில் அலை ஓய்வது! நாம் ஸ்நானம் செய்வது? அரசியல் ஞானம் பெறுவதற்கு ஒரே வழிதான் உண்டு அதாவது தேர்தலில் நமது இயக்கம் நின்று நமது இயக்கக்கொள்கைகளை பொது ஜனங்களுக்குத் தெரிவித்து அவர்கள் சம்மதத்தைகொண்டு சட்டசபையில் நின்று சாதிக்க முயல்வதே வழியாகும். இந்து மகா சபையும், இஸ்லாம் லீக்கும், தேசிய காங்கிரசும், மிதவாத கட்சியாரும், ஜஸ்டிஸ் வாதிகளும் மற்றும் பலகட்சிகள் எவ்விதமாக இனிவரும் திட்டத்தில் ஆதிக்கமும் செல்வாக்கும் பெற தேர்தலில் நிற்கப்போகின்றார்களோ அவ்விதமே சமதர்மவாதிகளாகிய நாமும் வரும் தேர்தலில் நிற்கவேண்டுமென்பதே எனது பூரண அபிப்பிராயமாகும். இதனை தீர்க்கமாக ஆலோசனை செய்து தமிழ் மாகாண மகா நாட்டிற்குள் ஒரு தீர்மானத்திற்கு வருவீர்களென்று உங்களுடன் மன்றாடி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வெளியூர் தோழர்கள்.

தோழர் ஈ. வி. இராமசாமி அவர்களை கண்டுகொள்ளவும் அவர்களது நகருக்கு அழைக்கவும் பிரயாணத்தைப்பற்றி விசாரிக்கவும் கோயமுத்தூர், சேலம், ஜலகண்டாபுரம், இராசிபுரம், திருச்செங்கோடு முதலிய ஊர்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் பலர் வந்து சென்றார்கள். வெளியூர்களிலிருந்து வந்தவர்களில் முக்கியமானவர்கள் தோழர்களான:--

கோவை.

எ. ஆர். சிவானந்தம்.
ஆர். கிஸன்.
வி. சுப்பிரமணியம்.

சேலம்.

ஆர். எஸ். அருணாசலம்.
டி. எம். கோசலம்.
பி. எஸ். கந்தசாமி.
பி. என். செந்திலய்யா.
எல். கே. பெருமாள்.
பி. பி. அப்புனு.
பி. கந்தசாமி.
எம். திருமலு.
பி. கே. வரதராஜுலு.
எ. சித்தப்பன்.
கே. முருகன்.
ஆர். நடேசன்.
ஆர். வரதராஜுலு.
எம். அப்பாய்.
சென்னைய்யா.

ராசிபுரம்.

ஆர். காவேரி.

திருச்செங்கோடு.

எ. மாரிமுத்து.
எஸ். சி. ஆர். சாமி.
எஸ். கே. வரதராஜுலு.

ஜலகண்டாபுரம்.

அர்த்தநாரியின் சகோதரர்.

பழயகோட்டை பட்டக்காரர் அவர்களும்முதலியவர்களுமாவார்கள். டாக்டர் சுப்பராயன் அவர்களும் சந்தித்தார்கள். மற்றும் உள்ளூரிலிருந்தும் சுற்றுப்பக்க கிராமங்களிலிருந்தும் பலர் வந்து சென்றார்கள்.

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கவும், எழுதுவதாகவும், கருதுவதுடன், மற்றவர்கள் மீது துவேஷமும் வெறுப்பும், விருப்பும் கொண்டு அவர்களை இன்ன இன்னபடி கடவுள்கள் என்றும் தங்களுக்கு இன்ன இன்ன காரியங்களைச் செய்து கொடுங்கள் என்றும் கோருகிறார்களேயல்லாமல் "இவை எல்லாம் சர்வ வல்லமை உள்ள கடவுள்" செயலால் தான் நடக்கின்றது நடந்துவிடும் என்ற நம்பிக்கையும் உறுதியும் தைரியமும் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

மற்றொரு சாரார்.

மற்றொரு சாரார் "கடவுளைப்பார்க்காவிட்டாலும், உணராவிட்டாலும் உலகப் படைப்புக்கும் நடக்கும் ஏதாவது ஒரு கர்த்தாவோ காரணமோ இருக்க வேண்டாமா? அப்படிப்பட்ட கர்த்தாவோ காரணமோதான் கடவுள்" என்று சொல்லுகிறார்கள்,

மற்றொரு சாரார் "உலக தோற்றத்திற்கும், நடப்புக்கும் ஏதாவது ஒரு சக்தி (force) ஆவது இருக்குமல்லவா? அது தான் கடவுள்" என்கிறார்கள்.

மற்றொரு சாரார் "இயற்கையே—அழகே—அன்பே—சத்தியமே கடவுள்" என்றும் இன்னும் பலவாராக சொல்லுகிறார்கள். ஆனால் நமது நாட்டைப் பொருத்த மக்கள் கடவுளுக்கு மனித உருவம் கற்பித்து, சாதாரண மனித வாழ்க்கையிலுள்ள பெண்டு பிள்ளை முதலியவைகளைக் கற்பித்து, செல்வவானுக்குள்ள குணங்களையும் சுகபோகங்களையும் கற்பித்து, அதற்குக் கோவில் பூசை உற்சவம் கல்யாணம் சாந்தி முகூர்த்தம் முதலியவைகளைக் கற்பித்து வணக்கத்திற்காக என்று கோடானகோடி ரூபாய்களை செலவுசெய்யச்செய்து மக்களை அதுவும் ஏழை மக்களை வாட்டி வளவெடுத்து தொல்லைப்படுத்தியும் வருகிறார்கள். இப்படியாக கடவுளைப்பற்றி இன்னும் பலவிதமாய் அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டும் காரியத்திலும் பல செய்யப்பட்டும் வருகின்றன. இந்த விதமான கடவுளைப்பற்றி அர்த்தமற்ற-குறிப்பற்ற- பரிகாசத்திற்கும் முட்டாள்தனத்திற்கும் இடமான அபிப்பிராயங்களும் மற்றும் பாமரமக்களை தந்திரக்காரர்கள் ஏமாற்றுவதற்கானமுறைகள்கொண்ட கருத்துக்களும்விவகாரங்களும்இன்றோநேற்றோ அல்லாமல் வெகுகாலமாகவே இருந்து வருகின்றது. அன்றியும் இக்கருத்துக்களை மதக்கொள்கைகள் என்பவற்றின் மூலமாகவும் அரசாங்க சட்டங்களின் மூலமாகவும் மறுத்துப்பேச இடங்கொடுக்கப்படாமலும் மீறிப்பேசினால் தண்டித்தும் மத வெறியால் என்றும் கொடுமைப்படுத்தியும்தான் காப்பாற்றப்பட்டும் நிலைநிறுத்தப்பட்டும் வந்திருக்கின்றது.

இன்றும்கூட.

இன்றும்கூட நமது இயக்கப் பிரசாரங்களில் அவற்றின் கொள்கைகளைப்பற்றி ஆட்சேபிக்கக்கூடிய வகை சலபத்தில் இல்லாமல் இருப்பதால் வேறு வழியில் தந்திரமாய் அதாவது "சம இயக்கக்கொள்கைகள் எல்லாம் சரி, அது ஏழை மக்களுக்குத்தன்பாடுபடுகின்றது. ஏழை பணக்காரன் என்கின்ற வித்தியாசம் கூடாதென்கின்றது. ஆனால் அது கடவுள் இல்லை என்று சொல்லுகின்றது மதத்தை அழிக்கின்றது; மக்களை நாஸ்திகமாக்குகின்றது; அது தான் எமக்குப் பிடிக்கவில்லை ஆதலால் அதை வளரவிடக்கூடாது" என்று சொல்லுவதன் மூலம் நமக்கு எதிர்ப்பிரசாரம் செய்கின்றார்கள். மற்றும்பல இடங்களில் நாம் போகுமுன்பே நாஸ்திகன் வந்துவிட்டான், மதத்துரோகி வந்துவிட்டான் என்று விஷமப்பிரசாரம் செய்து மக்களை நமது பிரசங்கத்தை—நான் என்ன சொல்லுகிறேன் என்பதை கேட்க அனுமதிக்ககூட மறுக்கின்றார்கள். மற்றும் சில இடங்களில் பலாத்கார முறையில்—காலித்தனமான முறையில் நமது பிரசாரத்தை கலைக்க முயற்சிக்கிறார்கள்.

காரணம்.

இதன் காரணம் என்னவென்று பார்க்கப்போனால் கண்டுபிடிப்பது மிகவும் சாதாரணமான விஷயமேயாகும். அதாவது அவர்களது "எங்கும் நிறைந்த" "எல்லாம்வல்ல" "அவனன்றி ஓரணுவும் அசையாத தான" கடவுள் நம்பிக்கையும், அப்படிப்பட்ட கடவுளின் அவதாரங்களாலும், கடவுள் அம்சம் பெற்றவர்களாலும் கடவுள் குமாரராலும் உண்டாக்கப்பட்ட மதநம்பிக்கையுமேயொழிய வேறில்லை என்று, சொல்லப்படுகிறது. ஆகவே இதன் கருத்து என்னவென்றால் எல்லாம்வல்ல, எங்கும் நிறைந்த கடவுள் உணர்ச்சியும், தத்துவமும், ஒரு சாதாரணமனிதனால் அழிக்கப்பட்டுவிடும் என்றும், கடவுள் அவதாரம், அம்சம், குமாரன், தூதன் ஆகியவர்கள்மூலம் உபதேசிக்கப்பட்ட மதமானது ஒரு சாதாரண மனிதன் முயற்சியால் அழிக்கப்பட்டுவிடும் என்றும் இதனால் மனித சமூகத்தின் மேன்மை போய்விடுமென்றும் பயந்தே இம்மாதிரி விஷமப்பிரசாரம் செய்வதாயும், பலாத்காரச்செயல்கள் கூட செய்யவேண்டி இருப்பதாயும் தீர்மானிக்கவேண்டி இருக்கிறது. இவ்விதமாக கடவுள் நம்பிக்கையின் பேரால், மத நம்பிக்கையின் பேரால் பலாத்காரசெயல்—எதிர்ப்பிரசாரம்—விஷமப்பிரசாரம் ஆகியவைகள் செய்யப்படுவது பெரிதும் அறியாமையால் என்றோ; மதத்தையும்கடவுள் தன்மையையும் சரிவர உணராததினால்என்றோ, அல்லது மதவெறி கடவுள்வெறி என்றோ சொல்லிவிட முடியாது. ஏனெனில் கடவுளும் மதமும் உலகில் மக்கள் தோன்றிய கால முதலே அவற்றிற்கு எதிரிடையான கருத்துடையவர்களையும், அவற்றை ஒப்புக்கொள்ளாதவர்களையும் அரசாங்கமும், மதஸ்தாபனக்காரர்களும் கொன்றும் சித்திரவதை செய்தும், தண்டித்தும், கொடுமை செய்தும் வந்திருப்பதானது கடவுள் மதம் சம்பந்தமான சரித்திரங்களாலும், பிரசாரமுறைகளாலும் நன்றாய் உணரலாம். இக்கொள்கையை முறையை இன்றும் சில சமயக்காரர்கள் கையாண்டு வருவதையும் நம் போன்றவர்கள் கடவுள், மத நம்பிக்கைக்காரர்கள் என்பவர்களால் நடத்தப்படுவதையும் கொண்டு உணரலாம். ஆகவே இதன் கருத்து சுயநலமும் சோம்பேறி வாழ்க்கைப்பிரியமுமே ஒழியவேறில்லை.

மதம்.

மதம் என்பதும் "சர்வவல்லமையும்" "சர்வவியாபகமும்" உள்ளதாகச் சொல்லப்படும் கடவுள் உணர்ச்சியை மக்களிடம் பெருக்கவும், அதை நிலைநிறுத்தவும் ஏற்பட்ட ஸ்தாபனங்களாய் இருந்து வருகின்றனவேயொழிய மற்றபடி எந்தமதத்தாலாவது, அதைச்சேர்ந்த உலக மக்கள் வாழ்க்கையிலோ பொருளாதாரத்திலோ சுதந்தரமோ, சமத்துவமோ பெற்று, கேவலம் ஜீவனத்திற்காக மற்றமனிதனுக்கு அடிமையாகாமல் வாழ்வதற்கு இடமளித்திருப்பதாய் காணமுடியவில்லை. ஒரு மதக்காரனே தன் மதத்தைச்சேர்ந்த மற்றொருவனை அடிமைகொண்டிருக்கிறான். ஆனால் அவன் மத நம்பிக்கையென்பது "மக்கள் யாவரும் கடவுள் பிள்ளைகள்" "எல்லோரும் சமமானவர்கள்" என்று போதிப்பதாகத்தான் சொல்லுகிறான். ஆனால் ஏழை, பணக்காரன், கூலிக்காரன், எஜமான் என்கின்ற வித்தியாசம் எப்படி ஏற்பட்டது என்பதை மாத்திரம் உணரும்போது "எல்லாம்வல்ல கடவுள் சக்தியையும், சமத்துவ மத போதனையையும்" மறந்து விடுகின்றான்.

மதம் என்பது ஒருபோதை (தரும்—வெறிஉண்டாக்கும்) வஸ்து என்று பல அறிஞர் கூறியிருப்பதுபோல் மதத்தின் ஆதிக்கத்தில் கட்டுண்டு இருப்பவர்களுக்கு ஆவேசமும், வெறியும் உண்டாவதுதான் முக்கிய பலனாக இருக்கிறதேயொழிய அது கஷ்டப்படுகின்ற, ஒரு பாவமுமறியாத பாமரமக்களுக்கு காரியத்தில் இன்று என்ன நன்மை செய்திருக்கிறது? செய்கிறது? மதத்தால் மக்களுக்கு என்ன ஒழுக்கம் ஏற்பட்டிருக்கிறது? என்ற கேள்விக்கு ("இது மதத்துரோகமான கேள்வி" என்று சொல்லுவதல்லாமல் வேறு) எவ்விதமான பதிலும் சொல்லுவதற்கு இடம் காணவில்லை.

எல்லா மதங்களும் கடவுள் அருளால், கடவுள் அம்சம் பெற்றவர்களால், அவரால் அனுப்பப்பட்டவர்களால் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் ஒரு மதத்திற்கும், மற்றொரு மதத்திற்கும் நடப்பு, வேஷங்கள், சடங்குகள் ஆகியவைகளுடன் மற்றும் பல முக்கிய விஷயங்களில் பெருத்த மாறுபாடும், துவேஷமும், வெறுப்பும் சிறிதாவது காணப்படுவானேன். என்பதைப்பார்த்தால் ஒன்று? பத்து மதங்கள் இருந்தால் அதில் ஒன்று உண்மை போக பாக்கி ஒன்பதுமதங்கள் பொய்யாகத்தான் இருக்கவேண்டும். அல்லது ஒவ்வொரு மதமும் வெவ்வேறு கடவுள் அருளால் ஏற்பட்டதாக இருக்கவேண்டுமே யொழிய ஒரே கடவுள் அருளால் ஏற்பட்டதாயிருக்காது. எப்படியிருந்தாலும் சர்வசக்தி, சர்வவல்லமை, சர்வவியாபகம் உள்ள ஒரு கடவுள் அருளால் எந்த மதமாவது ஏற்பட்டது என்று சொல்வது பகுத்தறிவுக்கும், விவகாரத்திற்கும் நிற்காத காரியமேயாகும். அன்றியும் ஒரே மதத்தை அனுசரிக்கிற மக்கள் எல்லோரும் ஒரே மாதிரி நடக்கிறார்கள் என்று சொல்லுவதற்கோ, அல்லது மத சக்தியானது மக்கள் யாவரும் ஒரே மாதிரி நடத்தப்பட பயன்படுகின்றது என்று சொல்லுவதற்கோ இடமில்லாமல் தான் எல்லா மதங்களும் இருந்து வருகின்றது. ஏனெனில் ஊருக்கு ஒரு விதம் வகுப்புக்கு ஒரு விதம் நடப்பதுடன் வெளிப்படையாகவே ஒரே ஊரில் ஒரே மதக்கொள்கைக்கு பலவித வியாக்கியானங்களும் ஏற்பட்டு இருப்பதுடன் நடப்புகளும், எண்ணங்களும் வேறுபட்டிருக்கின்றன. ஒரு சமயம் இப்படி மாறுபட்டு நடப்பவர்கள் எல்லோரும் மூட மக்கள் என்றும், மதத்தை சரிவர உணராதவர்கள் என்றும் சுலபமாய் சொல்லிவிடலாம். ஆனாலும் அந்த மதத்தை நம்பி அதை தலைமுறை தலைமுறையாக பின்பற்றிவந்த மக்களின் கதி அதுதானா என்பதும் அம்மதததிற்கு உள்ள சக்தி அவ்வளவுதானா என்பதுமாவது யோசிக்கவேண்டிய முக்கிய விஷயமல்லவா என்று கேட்கின்றேன்.

எது எப்படியிருந்தாலும்.

எது எப்படியிருந்த போதிலும் முன் குறிப்பிட்ட அதாவது "சர்வ சக்தி சர்வ வியாபகம் சர்வ தயாளத்துவம் கொண்ட கடவுளால்" சிருஷ்டிக்கப்பட்டவர்களாகவும் "சர்வ சமரசம் கொண்ட மதத்தைப்" பின்பற்றியவர்களாகவும் உள்ள மக்களுக்குள் ஒருவன் ரிக்ஷா வண்டி இழுத்துக் கஷ்டப்படவும், ஒருவன் அதின் மேல் சுகமாய் உட்கார்ந்து சவாரி செய்யவும்,ஒருவன்கிரீடத்தைஅணிந்து பல்லாக்கில் சவாரிசெய்யவும் 16 பேர்கள்முக்கிமுனகி சுமந்து செல்லவும்அக்கடவுளும்மதமும் எப்படி அனுமதித்தது என்றகேள்விக்கு "அது நமக்கு தெரியாதுசர்வசக்திஉள்ளகடவுள் செயல்" என்பதைத்தவிர இதுவரை எந்தக்கடவுள் நம்பிக்கைக்காரரும் மதநம்பிக்கைக்காரரும் வேறுபதில்சொன்னதாகத்தெரியவில்லை. ஒரு சமயம் இச்செய்கைக்குமுறையே ஒருவனின் அதாவது "ரிக்ஷாவண்டியிழுப்பவனின் முட்டாள்தனமும், சவாரி செய்பவனின் அயோக்கியத்தனமும்" என்று பதில் சொல்லக்கூடுமானாலும் சர்வ சக்தியும் சர்வ வியாபகமும் சர்வ தயாபரத்வமும் உள்ள கடவுளு

க்கும் சர்வ மனித சமூக சமத்துவமாகிய மதத்திற்கும் தன்னை எற்றித் துதித்து பின்பற்றும் மக்களின் இம் மடமையையும், அயோக்கியத்தனத்தையும் நிறுத்த முடியவில்லை என்பதாவது விளங்குகின்றதா இல்லையா என்பதை பொருமையோடு பகுத்தறிவுடன் நடுநிலையில் இருந்து யோசித்துப்பாருங்கள்.

சற்று கவனியுங்கள்.

தோழர்களே இங்கு சற்று கவனியுங்கள். என்னவென்றால் மேல் சொன்ன கடவுள் உணர்ச்சியும், மத உணர்ச்சியும் மேற் சொன்ன மடமையையும் அக்கிரமத்தையும் ஒழிப்பதற்குச் சிறிதும்பயன் படாமலிருப்பதோடு அம்மடமையையும்,கொடுமையையும் நிலைநிறுத்துவதற்கும்,அமுல் நடத்துவதற்கும் பயன்பட்டு வருகின்றதா இல்லையா என்பதை பரிசுத்த நிலையிலிருந்து யோசித்துப் பாருங்கள்.

கடவுள், மத, உணர்ச்சியானது மக்களின் சுதந்திரத்திற்கும் சமத்துவ வாழ்விற்கும் இவ்வளவு இடையூறுகளுக்கும் தாரதம்மியங்களுக்கும் இடந்தராதிருந்திருக்குமானால் நான் அவைகளைப்பற்றி இவ்வளவு கவலை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. கடவுள், மத பிரசாரத்தின் பேரால் வயிற்றுப் பிழைப்பு நடத்தவேண்டியவர்களின் பரிதாபத்திற்காகவாவதுசும்மாவிட்டு விடுவேன் என்பதை நம்புங்கள். ஏனெனில் ஒரு மனிதன் அனாவசியமாய் அர்த்தமும் குறிப்பும் அற்ற வார்த்தைக்காக பைத்தியம் பிடித்திருந்தாலொழிய போராடிக்கொண்டிருக்க முடியாது. ஆனால் அதனால் பாமர மக்கள் சமூகத்திற்கு விளையும் கெடுதியைப்பார்க்கும்போதுஉண்மையான உணர்ச்சியுள்ளவன் அதை ஒழிக்க போராடாமல் இருக்க முடியாது.

கவலையில்லை.

கடைசியாக "உலக உற்பத்திக்கும் இயற்கைத் தோற்றங்களுக்கும்நடப்புக்கும் எதாவது ஒரு காரணப்பொருள் இருக்கவேண்டாமா" என்று கேட்பதின் மூலம் எப்படியாவது ஒரு சக்தி உண்டு என்பதை ஒப்புக்கொள்ளச் செய்து அதிலிருந்தே ஒரு கடவுளை கற்பிக்க முயற்சிகள் செய்யப்படுவதையும் அத்தோடேயே சர்வ சக்தி—சர்வ வியாபக கடவுள் நம்பிக்கைக்காரர்கள் திருப்தி அடைந்து விடுவதையும் பிறகு அதை அஸ்திவாரமாக வைத்துப் பெரிய ஆகாயக் கோட்டைகள் கட்டுவதையும் பார்த்திருக்கிறேன். உலக உற்பத்திக்கும் அதில் காணப்படும் தோற்றங்களுக்கும் நடப்புகளுக்கும் விஞ்ஞானம் என்னும் சைன்சை தொடர்ந்து கொண்டே போனால் சமாதானம் கிடைக்கலாமானாலும் பிறகு "சைன்ஸ்சுக்கு யார் கர்த்தா" என்கின்ற கேள்வியும் பிறக்கும். அதை இதுவரை எந்த அறிவாளியும் கண்டு பிடிக்கவில்லை என்று பதில் சொன்னால் "அதுதான் கடவுள்" என்றுசொல்லி திருப்தி அடைவார்கள், அப்படியானால் அந்தக் கடவுளுக்கு யார் கர்த்தா அவர் எப்படி உண்டானார், அவரின் நடவடிக்கைக்கு என்ன காரணம் என்பதான கேள்விகளை முன்னைய விஷயங்களுக்குபோடப்பட்ட கேள்விகளைப்போலவே போட்டோமானால் அப்படிப்பட்ட கேள்விகேட்கக்கூடாது என்றும், கடவுளும் சக்தியும் தானாக உண்டானதென்றும், அதற்குக் காலவரை இல்லையென்றும் சொல்லுவார்கள். அச்சமாதானத்தால் நாம் திருப்தியடையாவிட்டால் அல்லது இது உங்களுக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்டால் (அல்லது கடவுள் தானாக உண்டாகும் போது இயற்கை தானாக உண்டாகாதா என்று கேட்டால்) உடனே நம்மை நாஸ்திகன் என்று சொல்லி விடுவார்கள். இந்த மாதிரி நிலையில் தான் ஏதோ யூகத்தின்மீது அதுவும் "ஏதாவது ஒரு காரணம் இருக்கவேண்டாமா" என்கிற யூகத்தின் மீதே "இதுவாயிருக்கலாம் அல்லது அதுவாயிருக்கலாம்" என்கின்ற பொருப்பற்ற நிலையில் கற்பிக்கப்பட்ட ஒரு கடவுள் என்பதைப்பற்றி நாம் சிறிதும் கவலைப்படுவதில்லை.

பொருப்பு ஏற்றுவது.

ஆனால் அப்படிப்பட்டதின் மீது மனித வாழ்க்கையின் பொறுப்புகளை சுமத்துவதும், அதை வணங்குவது, தொழுவது, பிரார்த்தனை செய்வது என்பதும்,அதை வணங்கினால் பிரார்த்தித்தால்தொழுதால்அதற்காக நேரத்தையும் அறிவையும் பணத்தையும் செலவு செய்தால் பயன் பெறலாம் என்பதும் பிரதிபலன் உண்டென்பதும் பாவங்கள் மன்னிக்கப்படுமென்பதும், மற்றும் மனிதனால் தன் சுயநலத்திற்காகவும் சோம்பேரி வாழ்க்கைப்பிரியத்திற்காகவும் பிறருக்குச் செய்யப்படும் சூட்சிக்கும் அக்கிரமத்திற்கும் கடவுள் செயலே காரணம் எனச்சொல்லி ஏமாற்றுவதைப்பார்த்தால் பிறகு எப்படிப்பட்ட கடவுள் உணர்ச்சியானாலும் அது எங்கிருந்த போதிலும் அதை அழித்தே தீரவேண்டியிருக்கிறது.

திருடனுக்கும் கடவுள்.

அன்றியும் திருடப்போகிற ஒரு திருடன் தான் திருடப்புறப்படுமுன் தனக்கு "நல்ல திருட்டுக் கிடைக்கவேண்டும்" என்று கடவுளைப் பிரார்த்தித்துவிட்டு புறப்படுகிறான். நல்ல திருட்டுக் கிடைத்தவுடன் அதில் ஒரு சிறு பாகத்தை கடவுளுக்கும் அதன் திருப்பணிகளுக்கும் செலவு செய்து கடவுள் உணர்ச்சியை அனுபவிக்கிறான். இது போலவே ஒரு கொலைகாரனும் தான் விடுதலை அடையக் கடவுளைத் துதித்து விடுதலையடைந்தஉடன்கடவுளுக்குபூசை அபிஷேக முதலியது செய்து நன்றி செலுத்துகிறான். இதுபோலவே சொத்துகளை வைத்திருக்கும் உடமைஸ்தனும் தனது சொத்துக்களைத் திருடர்கள் கொள்ளை கொள்ளக்கூடாது என்று கடவுளைப் பிரார்த்தித்து நன்றி செலுத்துகிறான். இதுபோலவே கடவுள் நம்பிக்கை உள்ள சகல சோம்பேரிகளும் செல்வவான்களும் கடவுள் பிரார்த்தனையின் மீதே தங்கள் வியாபாரத்தை நடத்துகின்றார்கள்.

ஆகவே கடவுள் செயலும் கடவுள் கருணையும் எவ்வளவு ஒழுக்கக் குறைவுக்கும், அநீதிக்கும் இடம் தருக்கின்றது என்று பாருங்கள். அவை இதைத்தவிர வேறு எதற்காவது பயன் படுகின்றதா என்றும் பாருங்கள்.

மத விஷயத்திலும்.

மதம் என்றால் என்ன என்கிற விசார காலத்தில் மதவாதிகள் "மனித சமூக வாழ்க்கை ஒழுங்காகவும் ஒரு கட்டுப்பாட்டிற்கு உள்பட்டும் நடைபெறுவதற்காக அனுபோகஸ்தர்களால் வகுக்கப்பட்ட திட்டங்களே மதமென்றும், மதக்கொள்கைகள் என்றும் அவை காலதேச வர்த்தமானத்திற்கு எற்றவாறு திருத்திக் கொள்ளக்கூடியது என்றும் சொல்வதுடன் அதற்கு உதாரணமாக அவ்வப்போது பல சீர்திருத்த வாதிகள் தோன்றி புதிய திட்டங்கள் எற்படுத்த சீர்திருத்தி இருக்கிறார்கள் என்றும் ஒரு சிலரால் சொல்லப்பட்டு இதுதான் மதம் என்பதின் அருத்தம் என்று சொல்லி அதனிடம் நமக்கு தகரார் இருக்கக்கூடாது என்கிறார்கள். அப்படியானால் அக்கொள்கைகளின் குணதோசங்களைப்பொருத்தும் அதனால் எற்படும் பயன்களைக் குறித்தும் யோசிக்கவும் திருத்தவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு என்பதை அவர்கள் ஒப்புகொள்ள தயாராயிருக்கவேண்டும்.

அப்படிக்கில்லாமல் மதம் என்பது மனிதசக்திக்கு மீறிய ஒரு சக்தியையுடைய மக்களால் எற்படுத்தப் பட்டது என்றும் அதன் கொள்கைகள் எல்லாம் எங்கும் எக்காலத்திற்கும் ஒரேமாதிரியாய் இருக்கத்தக்கது. என்றும் அவைகளில் எக்காலத்திலும் எவ்வித மாற்றமும் எற்படுத்த எவருக்கும் உரிமை இல்லை என்றும் அதனால் யாருக்கு எவ்வளவு கெடுதி இருந்தபோதிலும் பயனில்லாத போதிலும் பின்பற்றித்தான் ஆகவேண்டும் என்றும் சொல்லப்படுமானால் அப்படிப்பட்ட மதத்தைநாம் சிறிதும் ஒப்புக்கொள்ள முடியாது என்பதுடன் அவ்வித மூட அடக்க முறை உணர்ச்சியை கொண்ட மதத்தை என்ன விலை கொடுத்தாவது ஒழித்தாக வேண்டும். ஏனெனில் அவை மனித சமூக முற்போக்கை தடை செய்வதுடன் மனித சமூக ஒற்றுமைக்கும் சுதந்திரத்திற்கும் சம உரிமைக்கும் இடையூராய் இருக்கின்றன.

மற்றும் மதத்தின் பேரால் அநேக அற்புதங்களும், இயற்கைக்கும், மனிதசக்திக்கும் மீறிய காரியங்களும் பலர் செய்ததாகவும் கதைகள்கட்டி மக்களை மூடர்களாகவும், மூடநம்பிக்கைகாரர்களாகவும் ஆக்கப்பட்டு வருகின்றதுடன், எராளமான பொருளும் முயற்சியும் நேரமும் மனித சமூக நன்மைக்கும் சமத்துவத்துக்கும் உபயோகப்படாமல் பாழாக்கப்படுகின்றன. அன்றியும் அறிவும் ஆராய்ச்சியும் கட்டுப்படுத்தப்பட்டு அடிமையாக்கப்படுகின்றன. இவ்வளவுகேட்டை எப்படி சகித்துக்கொண்டிருக்கமுடியும், ஏன் சகிக்கவேண்டும் என்று யோசித்துப்பாருங்கள்.

தேசீயம்.

தேசீயம், தேசீயம், என்பதும் முற்கூறியவைகளைப்போன்ற ஒரு போலி உணர்ச்சிதான். ஏனெனில் தேசிய உணர்ச்சி என்பதானது இன்று உலக பொது மக்கள், அதாவது உலகில் எங்கும்பெரும்பான்மையாய் இருந்துவரும் மக்கள் தொழில் இன்றியும், தொழில் செய்தாலும் ஜீவனத்திற்கும் வாழ்விற்கும் போதிய வசதிகள் இன்றியும் கஷ்டப்படும் ஒரு உண்மையை மறைப்பதற்கும் மற்றும் அப்படிப்பட்ட கஷ்டப்படும் மக்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய நிலைமைக்கு பரிகாரம் தேடுவதை தடைப்படுத்தவும் ஆங்காங்குள்ள செல்வவந்தர்களால் அதிகாரப்பிரியர்களால் சோம்பேரி வாழ்க்கை சுபாவிகளால் கற்பிக்கப்பட்ட சூழ்ச்சியாகும். தேசியம் என்பதும் மனிதனுக்கு ஒரு மயக்கமும் வெறியும் உண்டாக்கும் வார்த்தையாக ஆகிவிட்டது.

தேசம் என்றால் எது?

தேசம் என்றால் எது? உலகப்பாப்பு ஐந்து கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு கண்டத்திற்கும் பலதேசங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தேசத்திற்கும் பல மாகாணங்கள் இருக்கின்றன ஒவ்வொரு மாகாணத்திற்கும் பல ஜில்லாக்களும், மற்றும் பல உட்பிரிவுகளும் இருக்கின்றன, இவைதவிர, ஒவ்வொரு கண்டத்திலும், தேசத்திலும் மாகாணத்திலும் பலமாதிரியான பிறவிகளும், பலஜாதிகளும், பலபாஷைகளும், பலமதங்களும்,பல உட்ப்பிரிவுகளும், பல பழக்கவழக்கங்களும் இருக்கின்றன. இவை அவரவர்களுக்கு தெய்வகட்டளை என்றும் மதக்கட்டளை என்றும் தேசியகொள்கை என்றும் தங்கள் வாழ்நாளில் எப்பொழுதும் மாற்ற முடியாது என்றும் இவைகளில் எதையும் காப்பாற்ற உயிர்விட்டாவது முயற்சிக்கவேண்டும் என்றும் கருதிக்கொண்டிருப்பதாகும். இவற்றின் பயனாய் மக்கள் ஒருவருக்கொருவர் வேற்றுமை உணர்ச்சி கொண்டிருப்பதை நன்றாய் பார்க்கின்றோம். அன்றியும் உலகத்தில்உள்ள தேசம் முழுவதிலும் உயர்ந்த ஜாதி தாழ்ந்தஜாதி எழை—பணக்காரன், கீழ் நிலை—மேல் நிலை, கஷ்டப்படுகின்றவன் கஷ்டப்படுத்துகிறவன் முதலிய கொடுமைகள் இருந்தும் வருகின்றன. இவற்றுள் என்ன கொள்கை மீது எப்படிப்பட்ட மக்கள் எவ்வளவு விஸ்திரணத்தை பிரித்துக் கொண்டு தங்களுக்கென தனித்த

தேசம் தேசீயம் என்று ஒன்றைச் சொல்லிக்கொள்ளுவது என்பது எனக்கு புரியவில்லை. நமது தேசம் என்று எந்த விஸ்தீரணத்தையும் தன்மையையும் தனிப்படுத்திக்கொண்டு பேசினாலும், அதிலுள்ள தன்மைகள் என்னென்னவோ, அதிலுள்ள மனிதர்களின் நிலை என்னென்னவோ, அதுதான் மற்ற எந்த தேசம் என்பதிலும் நாடு என்பதிலும் இருந்து வருகிறது. நாம் குறிப்பிடும் தேசத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகின்றவர்களாகவும் தாழ்மைப்படுத்தப்பட்டவர்களாகவும் இருந்து வருகின்றார்களோ அவ்வளவு நிலையில் தான் மற்ற தேசத்தார் என்கின்ற மக்களும் இருந்துவருகிறார்கள். நம்முடைய தேசம் என்பதிலுள்ள எந்தவிதமான மக்களின் துயரம் நீக்கப்பாடுபடுகின்றோம் என்கின்றோமோ அந்தவிதமான துயரம் கொண்ட மக்கள் அன்னியதேசம் என்பதிலும் இருந்துதான் வருகின்றார்கள். நம்முடைய தேசியம் என்பதிலேயே எந்தவிதமான மக்கள் சோம்பேரிகளாகவும் சூழ்ச்சிக்காரர்களாகவும் .செல்வவான்களாகவும், அரசாங்க ஆதிக்கக்காரர்களாகவும் குருமார்களாகவும் இருந்து பெரும்பான்மையான பொதுஜனங்களை பல சூழ்ச்சிகளால் அடக்கி ஆண்டு அடிமைகளாக்கி பட்டினி போட்டுவதைத்து தாங்கள் பெருஞ்செல்வம் சேர்த்தி வாழ்ந்து சுகபோகம் அனுபவித்து வருகின்றார்களோ அதுபோலத்தான் அன்னியதேசம் என்பதிலும் சிலர் இருந்து அந்நாட்டு பெரும்பான்மையான மக்களை கொடுமைப்படுத்தி வருகின்றார்கள். இந்த நிலைமையில் என்ன கொள்கையைக் கொண்டு எந்த லட்சியத்தைக்கொண்டு உலகப்பரப்பில் ஒரு அளவை மாத்திரம் பிரித்துத்தேசாபிமானம் காட்டுவது என்று கேள்க்கின்றேன்.

துருக்கி தேசத்துக்கும் இந்தியா தேசத்திற்கும் சண்டைவந்தால் இந்திய இஸ்லாமியர்களுக்கு தேசாபிமானம் இந்தியாவுக்கா? துருக்கிக்கா? ஹைதராபாத்துக்கும், மைசூருக்கும் யுத்தம் தொடங்கினால் ஹைதராபாத் இந்தியர்கள் தேசாபிமானம் மைசூருக்கா? ஹைதராபாத்துக்கா? ஆகவே தேசம் தேசாபிமானம் என்கின்ற வார்த்தைகளும் கடவுள் மதம் என்பதுபோன்றே ஒருவகுப்பாருடைய சுயநலத்திற்கு ஏற்ற ஒரு சூழ்ச்சி வார்த்தை என்று சொல்ல வேண்டியிருப்பதைத்தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை. முடிவாகக்கூறும் பட்சத்தில் தேசாபிமானம் என்பது ஒவ்வொரு தேச முதலாளியும் மற்ற தேச முதலாளிகளுடன் சண்டைபோட்டு தங்கள் தங்கள் முதலை பெருக்கிக்கொள்ள ஏழை மக்களை—பாமர மக்களை பலிகொடுப்பதற்காக கற்பித்துக் கொண்ட தந்திரவார்த்தையாகும்.

உதாரணமாக இங்கிலாந்து தேச முதலாளிகள் அமெரிக்கா நியூயார்க் தேச முதலாளிகளுடன் சண்டை போட்டு வெற்றிபெற்று தங்கள் செல்வத்தை மேலும், மேலும் பெருக்கிக்கொள்ளவேண்டும் என்கின்ற ஆசை ஏற்பட்டால் அல்லது நியூயார்க் முதலாளிகள் வேறுதந்திரத்தின் மூலம் இங்கிலாந்து தேசத்துக்கு முதலாளிகளின் செல்வத்தை கொள்ளை கொள்ள முயர்ச்சிப்பதாயிருந்தால் இங்கிலாந்து தேசத்து முதலாளிகள் இங்கிலாந்து தேசத்து ஏழை மக்களையும் பாமரமக்களையும் பார்த்து "ஓ இங்கிலாந்து தேசீய வீரர்களே, தேசாபிமானிகளே தேசத்துக்கு நெருக்கடி வந்து விட்டது. இங்கிலாந்து மாதா உங்கள் கடமைகளைச் செய்ய அழைக்கிறாள் ஓடி வாருங்கள், ஓடி வாருங்கள்" என்று கூப்பாடு போடுவார்கள் கூலிகளை அமர்த்தியும் வயிற்றுப் பிழைப்பு பத்திரிகைகாரர்களுக்கு எலும்பு போட்டும் பிரசாரம் செய்விப்பார்கள். இதுபோலவே அமரிக்க முதலாளியும் தன்தேசம் நெருக்கடி நிலையில் இருப்பதாகவும் அமெரிக்காமாதா அங்குள்ள பாமரமக்களையும், வேலையில்லாமல் வயிற்றுக் கஞ்சிக்கு வகையில்லாமல் பட்டினி கிடக்கும் ஏழை மக்களையும் தங்கள் கடமையைச்செய்ய அழைப்பதாகவும், கூலிக்கொண்டு கூலிகொடுத்து பிரசாரம் செய்வார்கள் இரண்டு தேச ஏழைமக்களும் மற்றும் சாப்பாட்டிற்கு அறவே வேறுவழியில்லாத மக்களும் கிளர்ச்சியில் சேர்ந்தும் பட்டாளத்தில் சேர்ந்தும் துப்பாக்கியை தூக்கிக்கொண்டு சண்டைக்கு போய் ஒருவரை ஒருவர் சுட்டுக்கொன்று கொள்ளுவார்கள் சிறைப்பிடிப்பதின் மூலம் இருதேச சிறையையும் நிரப்பிவிடுவார்கள். கணக்குப்பார்த்தால் இருகக்ஷியிலும் பத்து லக்ஷக் கணக்கான மக்கள் உயிர்விட்டிருப்பார்கள் பிறகு இருவரும் ராஜியாகப் போயோ அல்லது யாராவது ஒருவர் ஜெயித்தோ இருப்பார்கள்.

ஜெயம் பெற்றவர்களுக்கு முதலோடு முதல் சேரும், அல்லது தங்கள் முதல் என்றும் குறையாத மாதிரியில் பத்திர மேற்பட்டிருக்கும் ஆனால் சுட்டுக்கொண்டு செத்தவர்களுக்கு சுடுகாடும் அவர்கள் பெண் ஜாதிகளுக்கு சிறுபிச்சையும் அல்லாமல் மற்ற ஏழைமக்களுக்கு என்ன பயன் என்பதை யோசித்துப்பாருங்கள். அமெரிக்கா குடி அரசு நாடாவதற்கும் அன்னிய ஆக்ஷியைத்துரத்துவதற்கும் அமெரிக்கா ஏழைமக்கள் தொழிலாளி மக்கள் எவ்வளவுபாடுபட்டிருப்பார்கள், எவ்வளவு உயிர்ப் பலிகொடுத்திருப்பார்கள் என்பதை அமெரிக்கா "விடுதலைச்சரித்திரத்தை புரட்டிப் பாருங்கள். இன்று அதன் பயனாக உலகில் அமரிக்காவிலேயே அதிகமான செல்வவான்களும், வியாபாரிகளும், விவசாயப் பெருக்கும் இருந்து வருகின்றன. ஆனால் ஏழைகள் படும்கஷ்டமும் வேலையில்லாத பட்டினியும் தொழிலாளிகள் அனுபவிக்கும்கொடுமையும் அமரிக்காவில் இன்றையதினம் இருந்து வருவது வேறு எந்நாட்டிலும் குறைந்ததல்ல.

தோழர்களே! அமரிக்காதேசாபிமானத்தின் தன்மையையும் அதன் பயனையும் சிந்தித்துப்பாருங்கள் அமரிக்கா அன்னிய ஆக்ஷியை ஒழித்தாலும் ஒரு அரசனையே விரட்டி விட்டு "குடிகளின் ஆக்ஷி" ஏற்படுத்திக்கொண்டதாலும் ஏழைமக்களுக்கு என்ன பயன் ஏற்பட்டது என்பதை மற்றொருதரம் யோசித்துப்பாருங்கள்.

இந்த லங்கையில் இருந்து கொண்டு இந்தியதேசாபிமானம் பேசும் தேசிய வீரர்களைப்பற்றி சற்று சிந்தித்துப்பாருங்கள். அவர்கள் ஏறக்குறைய அத்தனைபேருக்கும் 100 க்கு 90 பேர் இந்தியா முதலிய தேசத்தில் இருந்து வந்து இலங்கை தேசத்தை சுரண்டிக்கொண்டு போக இருக்கிறவர்களும் அவர்களுக்கு உதவியாளர்களாய்—அடிமைகளாய் இருப்பவர்களுமாகும்.

லேவாதேவிகாரர்கள் பெரிதும் மாதம் 100 க்கு 12 வரை வட்டி வாங்கி ஏழைமக்களையும் இலங்கை வாசிகளையும் பாப்பராக்கி கொள்ளை கொண்டுபோக வந்தவர்களும், விவசாயக்காரர் பெரிதும் இலங்கை பூமிகளை ஏராளமாய் கைப்பற்றி விவசாயம் செய்து கூலிகள் வயிற்றில் அடித்து பொருள் சேர்த்து கொள்ளை கொண்டுபோக வந்தவர்களும், வியாபாரிகள் கொள்ளைலாபம் அடித்து இலங்கை செல்வத்தை கொள்ளை கொண்டுபோக வந்தவர்களும், உத்தியோகஸ்தர்கள் இலங்கை ஆக்ஷியில் வந்து புகுந்து இலங்கையர்களின் அனுபவத்தில் மண்ணைப்போட்டு பணம் சுரண்டிக்கொண்டிருக்கும் படித்த கூட்டத்தாரும் ஆணவம் பிடித்த வன்னெஞ்சப்பார்ப்பனர்களுமாகக்கூடிக்கொண்டு இந்திய தேசாபிமானக்கூப்பாடு போடுகின்றார்கள்.

வெள்ளைக்காரனை அன்னியன் 100 க்கு வருஷம் 6 வட்டிக்கு கொடுத்தால் கருப்பனான அன்னியன் 100க்கு மா 6 வட்டிக்கு கொடுக்கிறான். வெள்ளையன் பணக்காரர்களிடம் வட்டி வாங்கினால் கருப்பன் ஏழைகளிடம், கூலிகளிடம் வட்டி வாங்கி கொடுமைப்படுத்துகிறான்.

இந்தப்படி மக்களை சதித்து கொள்ளை அடிப்பவர்களே (வெள்ளையரிலும், கருப்பர்களிலும்) எங்கும் கடவுளபிமானம், மதாபிமானம், தேச அபிமானம் பேசுகிறார்கள்.

ஆகவே இவ்விஷயங்களை அதாவது கடவுள், மதம், தேசம், என்கின்ற விஷயங்களை இனி அறவே மறந்துவிடுங்கள். அவை ஒரு நாளும் கஷ்டப்படும் மக்களை பயனளிக்காது. உலகில் ஏழை பணக்காரன் என்று இரண்டு வகுப்புகள் இருக்கவும் ஏழைகளைத்தொழிலாளிகளை பணக்காரரும், சோம்பேரிகளும் வஞ்சித்து நிரந்தரமாய் வாழவும்தான் பயன்படும்.

முடிவு.

தோழர்களே! முடிவாக ஒன்று கூறுகிறேன். சரீரத்தினால் நெற்றி வியர்வை சொட்ட கஷ்டப்படும் மக்களை பாருங்கள். வேலை இல்லாமல் திண்டாடும் மக்களையும், அவர்களது பெண்டுபிள்ளைகளின் பட்டினியையும், கொடுமையையும் பாருங்கள். வீடுவாசல் இல்லாமல் மூட்டை முடிச்சுகளை தலையில் சுமந்துகொண்டு கஞ்சிக்கு ஊர் ஊராய் திரியும் கூலி மக்களைப்பாருங்கள். இவ்வித மக்கள் உலகில் எங்கெங்கு யார்யாரால் கஷ்டப்படுத்தப் படுகிறார்கள் என்பதையும் பாருங்கள். உயர்ந்தவன்—தாழ்ந்தவன், பார்ப்பான்—பறையன், முதலாளி—தொழிலாளி, குரு—சிஷ்யன், மகாத்மா—சாதாரண ஆத்மா, அரசன்—குடிகள், அதிகாரி—பிரஜை என்பவை முதலாகிய பாகுபாடுகளை இடித்துத்தள்ளிதரை மட்டமாக்குங்கள் அதன்மீது தேசம் மதம், ஜாதி என்கின்ற பாகுபாடு இல்லாததும், மனிதசமூகம் சம உரிமை—சமநிலை என்கின்ற கட்டடத்தை கட்டுங்கள். இதைசெய்ய நீங்கள் உலகில் உள்ள கஷ்டப்படும் எல்லாமக்களுடனும் ஜாதி, மதம், தேசம் என்கின்ற வித்தியாசம் இல்லாமல், பிரிவினைக்கு ஆளாகாமல் ஒன்று சேருங்கள். அப்போது நீங்கள் கண்டிப்பாய் வெற்றி அடைவீர்கள்.

தேசபக்தி தேசீயம் என்னும் சூழ்ச்சியானது பல வருஷங்களாக மக்களை அன்னியநாட்டு நடப்புகளையும் அன்னியநாட்டு மக்கள் நிலைமையும் உணரமுடியாமல் செய்துவந்த காரணமே உலக ஒற்றுமை ஏற்பட முடியாமல் இருந்துவருகின்றது.

தெளிவாய் சொல்லவேண்டுமானால்.

"அன்னிய ஆட்சி" "சுயாட்சி" என்பதெல்லாம் அறவே ஏழை மக்களுக்கு பயனற்றதும் சூழ்ச்சி நிறைந்ததுமேயாகும். சுயாட்சி உள்ள நாட்டிலும், சுயராஜ்யம்உள்ளஊரிலும் ராஜாவே இல்லாத குடி அரசு தேசத்திலும் பணக்காரன் கொடுமையும், பாதிரியின் சூழ்ச்சியும், ஏழைகளின் கஷ்டமும், பாமரமக்களின் மடமையும் இருந்துதான் வருகின்றது. கடவுள பக்தியும் மதபக்தியும் தேசாபிமானமும் நிறைந்து ததும்பும் நாடுகளிலும் இக்கொடுமைகள் இருந்துதான் வருகின்றது. கடவுளுக்காகவும், மதத்துக்காகவும் கோடான கோடி ரூபாய் செலவளித்து பலிகொடுத்து பக்திசெலுத்திவரும் நாட்டிலும் இக்கொடுமைகள் இருந்துதான் வருகின்றன. ஆனால் கடவுள், மதம், தேசியம் ஆகியவைகள் அழிக்கப்பட்ட அடியோடு இல்லாத இடங்களில் மாத்திரம் பணக்காரக்கொடுமையும், சோம்பேரி வாழ்க்கையும், பட்டினி கஷ்டமும், உயர்வு தாழ்வு நிலையும் காணப்படவில்லை.

அவ்வூராருக்கு கடவுள் மத தேச அபிமானம் இல்லை. மனித சமூக சமத்துவ அபிமானம் மாத்திரமே பிரதானமாய காணப்பட்டது. அங்கு பணக்க

ரன்—ஏழை, முதலாளி—தொழிலாளி அதிகாரி—குடி ஜனங்கள்என்கின்ற வித்தியாசமே காணப்படவில்லே.

அங்குள்ள சகல சொத்திற்கும் அங்குள்ள சகல மக்களும் சமசுதந்திரமுள்ளவர்களாய் இருந்து வருகிறார்கள். எல்லா மக்களுக்கும் சரி அளவு வேலேயும், போதுமான ஆகாரமும் சுக சௌகரியமும் இருந்து சமமாய் அனுபவிக்கப்பட்டு வருகிறது. “நாளேக்கு என் செய்வது” என்ற கவலேயே இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். கடவுளும், மதமும் இல்லாததால் அந்நாடு பூமிக்குள் அமிழ்ந்து போகவில்லே.

அந்நாட்டுமக்களுக்கு ஆண், பெண் அடங்கலுக்கும் ஏற்பட்ட தைரியமும், உயிருக்குத் துணிந்த வீரமும், சமத்துவ. உணர்ச்சியும் கடவுளேயும், மதத்தையும் நம்பிய தேசாபிமானமுள்ள எந்த நாட்டாரிடமும் காணமுடியாதாயிருக்கிறது. நமது நாட்டிலோ சகல பொருப்பையும் கடவுள் மீது போட்டுவிட்டு சோம்பேரி ஞானம் பேசுபவர்களே மலிந்து இருக்கிறார்கள். நமது தலேவர்கள் என்பவர்களோ அதைச்சாதிக்கிறேன், இதைச்செய்கிறேன் என்று பேசி மக்களே ஏய்த்து பயன் அடைவதும், முடியாவிட்டால் கடவுள்மீது பழி போட்டு நழுவிக்கொள்ளுவதுமானவர்கள். கடவுள் மீது நம்பிக்கை உள்ள நமது மக்கள் வீரமோ ஒரு சிறு உண்மை தியாகம் செய்ய வேண்டிஏற்பட்டாலும் “நான் எதற்கும் தயார் தான். ஆனால் எனக்கு ஏதாவது கஷ்டம் வந்துவிட்டால் என் பெண்டுபிள்ளேகளுக்கென்ன கதி என்று தான் யோசிக்க வேண்டியிருக்கின்றது” என்ற அளவோடு நிற்கக்கூடியதாகும். கடவுளே நம்பாதவர்களும், கடவுள் மீது எவ்வித பொருப்பும் போடாதவர்களுமாயிருக்கிறவர்களும் கடவுள் உணர்ச்சியை அடியோடு ஒழித்துக்கொண்டவர்களுமான மக்கள் உள்ள நாட்டில் “நாளேக்கு என்ன கதி” என்கின்ற பேச்சே கிடையாது. ஒவ்வொருவரும் தன்னம்பிக்கை உடையவர்களாகவே தான் காணப்படுகின்றார்கள்.

அந்த நிலேமை தான் “நம் நாட்டுக்கு”ம் மற்றும் உலகமெங்கும் வேண்டும். அதற்காகவே வாலிபர்கள் எல்லோரும் உழைக்கவேண்டும். அதுவே இப்போது நமது முன்னணியில் இருக்கும் வேலேயாகும்.

புரட்சி வாழ்க !
பொதுவுடமை ஓங்குக !!

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

மா? அந்த சாஸ்திரத்தை கடவுள் தான் உண்டாக்கி இருப்பரா?

ஆஷாடபூதிவேஷம், அந்தரங்கப் பித்தலாட்டம், இரகசியப்புரட்டு இவைகளால் தன்காரியங்களே நூற்றுக்கணக்கான வருஷங்களாகச் சாதித்து மூடக்கொள்கை கொடுமை இவற்றினின்று முளேத்தெழுந்தஇந்த வைதீகர்களின் இருதயங்கள் எப்பொழுதும் விசாலமாகா?

நமது ஜனங்களுக்கோ புத்தியிருந்தாலும் விசாரித்தறியும் புத்தி ஐந்து நிமிஷம் கூட நிலேப்பதில்லே. படிப்பும் ஆலோசனேயுமிருந்தாலும் தன்மையில்லே குணமில்லே, தன்மையில்லாவிட்டால் நீதியும் நியாயமும் எப்படி நிலே நிற்கும்.

கும்பகோணத்து வைதீகத்தைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டாம். நாடகத்தில் கும்பகோணத்து அய்யர் வேஷமே உங்களுக்குத் தெரியப்படுத்தும். ராத்திரியெல்லாம் கும்பகோணத்து அய்யர் வேஷம் போட்டு நடித்தாலும் பகல் பன்னண்டார் கட்டி பட்டைபோட்டு வைதீகர் என்று வாதாடலாம் எனெனில் எப்படியிருந்தாலும் நமது தெய்வத்தின் முகத்திலிருந்து பிறந்தவர்களல்லவா?

பாராட்டுக்கூட்டம்.

6-11-32௳ ஞாயிற்றுக்கிழமை மாலே 6மணிக்கு செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதை சங்கத்தின் ஆதரவில் சங்கத்தலேவர் தோழர் கே. ஆர். வி. அர்த்தனாரி அவர்கள் தலேமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அதுசமயம் புதிய மந்திரி சபையின் அமைப்பைப்பற்றி பல தோழர்கள் பாராட்டிப் பேசப்பட்டது. பின்னர் புதிய மந்திரிகளேயும் குமாரராஜாவையும் பாராட்டி சில தீர்மானம் நிறைவேறியது. ஒரு நிருபர்

திருப்பூர்
டி. மு. கோர்ட்டு.

1932ஹு அசல் நெ. 732
1932ஹு I. A. No. 1311

றங்கேகவுண்டன், வாதி

பல்லடம் தாலூகா கருமுத்தம் பட்டி மஜரு எளச்சிபாளேயத்தில் இருக்கும் சின்னயகவுண்டன் மகன் ராமகவுண்டன்—பிரதிவாதி

ஷை நெம்பரில் வாதி பிரதிவாதியின் பேரில் பிராம்செரிப்படி 406-8-0 ம் பின்வட்டி கோர்ட்டு சிலவு கிடைக்கவேணுமாய் தாவா செய்து ஷை தாவாவும் உடன் ஜெப்தி மனு நோட்டீசும் 24-11-32 தேதி வாய்தா போட்டிருக்கிறது. அன்று பிரதிவாதி பகல் 11 மணிக்கு கோர்ட்டில் ஆஜராய் தன் ஆக்ஷேபனேயை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினல் ஒரு கக்ஷியாகத் தீர்மானிக்கப்படும் என்கிற சங்கதியை தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஜி. ஆர். ஜெகதீசசாஸ்திரியார்
வாதி வக்கீல்
13-11-32.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31ம் தேதி “குடி அரசு”ல் வெளியான “சத்தியாக்கிரகமா சண்டித்தனமா” என்ற தலேயங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலே ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினல் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

ரூபா 3-6-0 க்கு 3-கடிகாரங்களும் இதர வெகுமதிகளும்.

சந்தேகமில்லே, ஆச்சரியமில்லே, உண்மை!

ஆட்டோ சுகந்தராஜ் (இஃது பூத்த புஷ்பங்களின் சத்து) மணமிகுந்தது. 3-நாள் உபயோகத்துக்குரிய புட்டி3-அணு. படைமருந்து 12 மணி நேரத்தில் பரிபூரண குணம் டப்பி 1-க்கு 3அணு. மேற்படி 2-தினுசுகளும் சேர்ந்தாவது தனித்தனியாவது 18-புட்டிகள் ரூபா 3-6-0 க்கு ஆர்டர் செய்தால், கோல்ட் நிப் பௌண்டன் பேனு 1. 500-கஜம் வரை வெளிச்சம்தரும் பாட்டரி லாம்ப் 1, நூதன கைக்கெடியாரம் 1, பர்மா டைம்பீஸ் அல்லது ரயில்வே மெயில்கார்ட் லீவர் பாக்கெட்வாச் 1-ம், இனமாக அனுப்பப்படும். ஒவ்வொரு கடிகாரமும் 10 வருடம் உத்தரவாதம். சாமான்கள் பிடித்தமில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும். பாக்கிங் தபால் செலவு தனி.



விலாசம்:—Sharma Brothers & Co.,
Post Box No. 2412, Section 90,
Calcutta.

வெள்ளே வெட்டைக்கு

சந்தனுதி மாத்திரை பிரமேகநெய்

சாப்பிட்ட 12-மணி நேரத்திற்குள் குணம் தெரியும்.

வெள்ளே, வெட்டை வியாதிகள் எவ்வளவு நாள் சென்றதாயிருந்தாலும் சரி, பொறுக்க முடியாத நீர் குத்தல், நீர்கடுப்பு, பிரமேகம், கல்லடைப்பு, சதை அடைப்பு, தாது நீரில் கலந்து வெளியாகுதல், நீர்விடுவதற்கு முன்னும் பின்னும் இந்திரியம் சொட்டு சொட்டாய் வெளிவருதல், ரெத்தவெட்டை, அஸ்திகாங்கை, எலும்புருக்கி, சொற்பன ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், அஸ்திமேகம், இந்திரியபையில் ஏற்படும்ரணம், கொதிப்பு முதலிய நீர்தாரையிலுண்டாகும் சகல வியாதிகளேயும் ஆச்சரியமாய் குணம் செய்யும்,

சந்தனுதி மாத்திரை, பிரமேக நெய் இரண்டும் சேர்ந்து விலே ரூ. 5 பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

சித்தஆயுர்வேத வைத்தியசாலே
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம்	...	0—8—0
2.	சிதம்பர ரகசியம்	...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை		0—4—0
4.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை		0—8—0
5.	ஆராய்ச்சி அணிகலம்	...	0—12—0
6.	சுயமரியாதை தத்துவ கீதங்கள்	...	0—4—0
7.	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்	...	2—0—0
8.	மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்)	...	2—0—0
	சுயராஜ்யம் யாருக்கு	...	0—1—0
	சாமிகளின் அடிமைகள்	...	0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

2-8-0 ரூபாய்க்கு 3 கடியாரங்களும் 390 சாமான்களும் இனும்.



வாசனையிற் சிறந்தது ஓட்டோ மோட்டியாவே. இது புஷ்பங்களின் சத்து. ஒரே தடவையில் 2-8-0 ரூபாய்க்கு 5 பாட்டில்கள் வாங்குவோருக்கு, கோல்ட் கில்ட் டம்மிரிஸ்ட் வாட்ச் ஒன்றும், 5 வருஷ உத்திரவாதமுள்ள ஜெர்மன் 'பி' டைம்பீஸ் 1-ம், ரயில்வே டைம் டம்மிபாக்கட் வாட்ச் 1-ம், பவுண்டன் பேனா 1-ம், இன்னும் 390 சாமான்களும் இனமாய் கொடுக்கப்படும். இனும் சாமான்கள் சேர்த்து விலை ரூ. 2-8-0 பாக்கிங் தபால் செலவு வேறு.

General Trading Agency
15/1 Joymitter St., Hatkhola P. O., Calcutta.

கடவுள்கள் என்பவை விளையாட்டுக் கருவிகள்.

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

பண்டிதர். உயர் திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு.

இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

ஓ! பலங்குன்றியவர்களே! தாதுபுஷ்டியில்லாதவர்களே! கிழத்தன்மையடைந்தவர்களே!

இதோசாப்பிடுங்கள்

தங்கபஸ்பம்

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார தாது புஷ்டியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது; பத்தியமில்லை. நாட்பட்ட அல்லது புதிதாயுண்டான எல்லாவியாதிகளையும் நீக்கி ஆண்மைத்தனத்தை உண்டாக்கி தாதுபுஷ்டியைக்கொடுக்கும்.
48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

குரு நாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆபரேஷன் அவசியமில்லை. முளை தானே கரையும், சீழ் மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும் உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

தாளக பஸ்பம்- இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8 வித காசமும் அவசியம் தீரும் அனுபவத்தில் கைகண்டது. புட்டி 1-க்கு ரூ. 4.

அப்ரேக் செந்தூரம் - நீரழிவுக்கு

ஜாஸ்திபோகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகலமேகமும் நீங்கும். தளுக்கற்றது. புட்டி 1-க்கு ரூ. 15. வி. பி. வேறு.

வைத்திய ஆசிரியர் **மலையப்பசாமி,**
வைத்தியசாலை, பழனி, S. I.,

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம், மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதிவேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.